TAMIL LANGUAGE & CULTURAL SOCIETY
தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்

# தமிழ்மணி

MCI (P) 100/11/2014 / Vol 1 : No 1 : Jan 2015

சிங்கப்பூர் • காலாண்டிதழ் • ஜனவரி 2015

## உலகத் தமிழாராய்ச்சி மாநாடு – கருத்தரங்கம் – 2015

BUILDING AN PROMSING RELATIONSHIP BETWEEN
YOU AND YOUR CUSTOMERS
DIGITALLY
DEFINE
IMPLEMENT
DATA COLLECTION
ANALYSE
IMPROVE
ACE VENTUREES
LIFE CYCLE
SERVICES
OFFERED
MOBILE APPLICATION
DEVELOPMENT
WEBSITE DESIGN &
DEVELOPMENT
SEO & DIGITAL
MARKETING
Whatsapp No
+6583232714
WWW.ACEE.SG
ACE
VENTUREES
APP YOUR BUSINESS
# 69, Serangoon Road, (S) 217 974
www.acee.sg | sales@acee.sg

ABIRAAME
Singapore's Popular Jeweller
ISO 9001:2008
DIAMOND • GOLD • SILVER
Worn by
King
Queen
and yourself
REWIND COLLECTIONS
Beautiful Temple Jewellery
for the most beautiful women
9465 5505
69, Serangoon Road, Singapore - 217974 Tel: 6341 5341/ 6296 0759
85, Serangoon Road, Singapore - 217990 Tel: 6295 5130/ 6295 0283
103, Serangoon Road, Singapore - 218008 Tel: 6293 5130/ 6293 6130
YouTube
Find us on: facebook.
www.ajs.com.sg / enquiry@ajs.com.sg

# தமிழ் மணி

## பொருளடக்கம்


உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2

திருக்குறள் கூறும் தண்டனை 5

திரு இரா தினகரன் பேட்டி 6

தமிழ்மொழி பண்பாட்டுக் கழக சாதனையாளர்கள் 8

கவிஞர் க து மு இக்பால் பேட்டி 12

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் – ஒரு பார்வை 13

தமிழ் மின்மரபுடைமைத் திட்டம் 18

தமிழ் – தவறுகளை தவிர்ப்பது எப்படி 20

கவிதைகள் 21

தமிழ்மொழி பண்பாட்டுக் கழக விழாக்கள் 24

செய்தித் தொகுப்பு 28

வைரமுத்துவின் பாடல்கள் – முனைவர் இராஜகோபாலன் 33

இந்தியப் புத்தாண்டு கொண்டாட்டம் 35

தமிழ்ப் பணி தொடரும் – முனைவர் திண்ணப்பன் 37

21ஆம் நூற்றாண்டில் தமிழ் சினிமா 38

தமிழ்மொழி பண்பாட்டுக் கழக தொண்டூழியர் தினம் 41

பேச்சாளர் மன்றம் 43

தமிழ்மொழி பண்பாட்டுக் கழக அட்டவணை 44


**தமிழ்மணியின் புத்தாண்டு (2015) வாழ்த்துகள்!**
**சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் நல்வாழ்த்துகள்!**


*ஆலோசகர்*
**மு ஹரிகிருஷ்ணன்**
தலைவர் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.

*தலைமை ஆசிரியர்*
**ஏ பி ராமன்**

*துணை ஆசிரியர்*
**திருவாட்டி புஷ்பலதா நாயுடு**
துணைத் தலைவர், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.

*இணை ஆசிரியர்கள்*
**ச இராம்குமார்**
**வீர விஜயபாரதி**
*பண்பாட்டுக் கழக செயலகம்*

*ஒருங்கிணைப்பாளர்கள்:*
**தாம் சண்முகம்**
**சித்ரா ரமேஷ்**
**அ இன்பா**

*வடிவமைப்பு*
**காண்டக்**

*புகைப்பட உதவி*
**தியாக ரமேஷ்**
**ராஜு ரமேஷ்**
*பண்பாட்டுக் கழக செயலகம்*

*Advisor*
**M Harikirishnan**
President TLCS

*Chief Editor*
**A P Raman**

*Associate Editor*
**Madam Pushpalatha Naidu**
1st Vice President TLCS

*Assistant Editors*
**S Ramkumar**
**Veera. Vijayabharathy**
TLCS Secretariat

*Coordinators:*
**Tam Shanmugam**
**Chitra Ramesh**
**A Inbha**

*Design*
**Gantec Software and Publishing Pte Ltd**

*Photographs*
**Thiyaga Ramesh**
**Raju Ramesh**
TLCS Secretariat

*வெளியீடு :* **தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்**
**TAMIL LANGUAGE & CULTURAL SOCIETY**
72 Bendameer Road, #05-21
Luzerne, Singapore 339941
Telephone: 62953258
Fax: 62953405
UEN NO: S79SS0032L
Tamilmani: ISSN 2382-6304
Website: http://www.tamilmozhi.org
Email: tlcs@ibmc.com.sg


தங்களின் நிகழ்ச்சி பற்றிய செய்தி படங்களை அமைப்புகள் தமிழ்மணிக்கு அனுப்பலாம். அமைப்புகளின் பெயர், முகவரி, மின்னஞ்சல் விவரங்களையும் அனுப்பித் தர வேண்டுகிறோம். காலாண்டுக்கு ஒருமுறை வரவுள்ள தமிழ்மணி இதழ் முற்றிலும் இலவசமாகத் தரப்படுகிறது. எங்கள் மின்னஞ்சல் முகவரி thamizhmanieditor@gmail.com

தமிழ்மணியில் இடம்பெற்றுள்ள கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் படைப்பாளர்களே பொறுப்பு.  தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் பொறுப்பல்ல.

- **ஆசிரியர்.**

# ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

தமிழரின் உணர்வை, பார்வையை, கற்பனையை, அறிவாற்றலை மொழி வழி அனைத்து உலகிற்கும் வெளிக்காட்டும் அரங்க மொன்றில் ஏறும் அரிய வாய்ப்பினை இன்று நாம் பெற்றுள்ளோம். உலக மொழியாளர்களின் ஆய்வுக் கண்களில் நாம் ஒவ்வொருவரும் காட்சி தரப் போகிறோம். நம் அரிய ஆய்வுகள் ஆயிரமாயிரவரின் பார்வையைத் தொடப் போகிறது. அந்த அரங்குதான், பெருமைக்குரிய ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆகும் !..

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் இக் கோலாகலத் தமிழ்த் திருவிழாவில், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, கலை, கலாச்சாரம், சமயம், மானிடவியல், வரலாறு, உளவியல், சமூகவியல் உள்ளிட்ட பல அம்சங்கள் பேசப்படுகின்றன, படிக்கப்படுகின்றன, அலசி ஆராயப்படுகின்றன.

இந்த நேரத்தில், தமிழ் மொழியின் வளர்ச்சி, எல்லை கடந்து விரிந்து பரந்து, உலக ஆய்வாளர்களின் பார்வைபடும் இன்றைய நிலைக்கு முதல் பாதை திறந்த 1964ம் ஆண்டின் டில்லி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற அறைகூவலை நினைவுக்குக் கொண்டு வருவது மிக அவசியம் எனக் கருதுகிறோம்.

'இரு ஆண்டுக்கு ஒரு முறை உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவோம்' என்று அந்தக் கூட்டத்தில் அமரர் தவத்திரு தனி நாயகம் அடிகளார், வ.ஐ.சுப்பிரமணியம், மற்ற தமிழறிஞர்களுடன் இணைந்து வெளியிட்ட அந்தப் பிரகடனம், இன்று நம்மிடையே பின்னிப் பிணைந்து ஒரு மாபெரும் மொழி இயக்கத்தை உருவாக்கியிருப்பதை யாரும் மறுக்க இயலாது.

1966ல் தனிநாயகம் அடிகளார் தலைமை தாங்கி பிரம்மாண்டமான முறையில் தலைநகர் கோலாலம்பூரில் நடத்திய முதல் தமிழாராய்ச்சி மாநாடு, உலகின் பல்லின ஆய்வாளர்களை ஒன்றிணைத்து, காலத்தை யொட்டிய தமிழ் வளர்சசியை ஆராய்ந்து– உறுதி செய்து, உலக அளவில் தமிழை வாழும் மொழியாக ஆக்கும் வழியைக் காட்டியது.

தவத்திரு தனி நாயகம் அடிகளார்

கால ஓட்டத்தில் தமிழின் எல்லை சுருங்கியதாகக் கருதப்பட்ட கணினி வளர்ச்சி காலத்திலும், ஆங்கில முக்கியத்துவம் காரணமாக ஒவ்வொரு நாட்டிலும் 'தாய் மொழித் தட்டுப்பாடு' நின்று நிலவிய நேரத்திலும், தமிழ் மொழி ஆய்வாளர்களின் தீர்க்கமான பார்வை காரணமாக, இணைய வழி மேம்பாட்டிலும் தமிழ் வளர்ச்சியை நம் ஆய்வாளர்கள் கணிசமாக முன்னிறுத்தி இருப்பது பாராட்டுக் கூறியது. இன்றைய தமிழ் மொழி வளர்ச்சிக்கு இணையம் இன்றியமையாத சேவை அளித்து வருவதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். தமிழில் கலைச் சொற்களுக்கும் பஞ்சமில்லை. (மின்னஞ்சல், மின்பொருள், வலைப் பதிவு, வலைப்பூ,விசைப்பலகை,மின்வருடி,...இன்னும்எத்தனையோ !) தமிழின் வரி வடிவம், கணினி மொழிக்கு ஒவ்வாதது எனக் கருதப்பட்ட காலத்தையே உடைத்தெறிந்தவர்களாக நம் ஆய்வாளர்கள் விளங்குகின்றனர். இன்றோ மிகப் பெரிய மாற்றம். ' யூனிகோட்' மொழியில், தமிழ், இடுங்குறியாக்கப் பட்டிருக்கிறது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவது என்றைக்குமே எளிதான பணியாக இருந்ததில்லை. ஆனாலும் தனி நாயகம் அடிகளார் தொடங்கிய இந்த மொழி விழா, பல நாடுகளில் பல நிலைகளில் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருவதை

நாம் காண்கிறோம். எல்லா மாநாட்டிலும் நின்று நிலவிய ஒரே உணர்வு, தமிழ் உணர்வு – மொழி ஆய்வு ! காலத்திற்கேற்ப புத்தம் புது யோசனைகள்!

1966ல் முதல் மாநாடு கோலாலம்பூரில் நடந்த பின், 1968ல் சென்னையில் இரண்டாவது மாநாடு நடந்ததைக் கண்டோம்.– முதலமைச்சராக அப்போது பதவி ஏற்ற அறிஞர் அண்ணா தலைமையில் நடந்த இந்த இரண்டாவது தமிழ் மாநாடு, அதற்கு முன் முதலாம் மாநாட்டில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சியின் முதல்வர் பக்தவத்சலம் அளித்த வாக்குறுதியை ஏற்று தமிழகம் நடத்திய மாநாடு ஆகும். அப்போது தான், மெரீனா கடற்கரையில் , அவ்வையார், கண்ணகி, கம்பர், பாரதி, பாரதிதாசன் உள்ளிட்ட பல தமிழ் அறிஞர்கள், புலவர் பெருமக்களுக்கு சிலைகள் திறக்கப்பட்டன.

1970 ல் மூன்றாவது மாநாடு, பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடந்தபோது, ஆய்வு, கலந்தாலோசனை, கருத்தாலோசனைகள் யாவும் முறையாக அரங்கேறின. பிரான்ஸ் நாட்டுப் பேராசிரியர் ஜீன் பில்லியேசர் தலைமை தாங்கி நடத்திய மாநாடு இது.

1974 ல் இலங்கையின் யாழ்ப்பாண நகரில் நடந்த நான்காவது மாநாடு, நான்கு ஆண்டு இடைவெளியில் நடக்க நேரிட்டது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில், தனி நாயகம் அடிகளார் சிறப்புரை வழங்க, மாநாட்டிற்கு வருகை தந்த உலகத் தமிழறிஞர்கள், அந்த மண்ணில் பல ஆய்வுச் சாதனைகளைப் புரிந்ததைக காண முடிந்தது. ஆனாலும் இறுதியாக இடம் பெற்ற பாராட்டுக் கூட்டத்தில் நிகழ்ந்த சில அசம்பாவிதங்கள் மனதைப் பாதிக்கவே செய்தன.

1981ல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது மாநாடும், ஏழு ஆண்டு இடைவெளிக்குப் பின் நடைபெற்றது. இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

1981ல் மதுரையில் இடம்பெற்ற ஐந்தாவது மாநாடு, முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் தலைமையில் விமரிசையாக நடத்தப்பட்டது.

1987ம் ஆண்டில் மீண்டும் மலேசியாவின் தலைநகர் மலேசியாத் கோலாலம்பூரில் ஆறாவது உலகத் தமிழ் மாநாடு நடந்தபோதும் நல்ல பலன்கள் கிட்டின. உலகின் பல நாடுகளிலிருந்து வந்த தமிழ் மொழி ஆய்வாளர்கள், அறிஞர்கள், அன்றைய மொழி வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக்களை எடுத்துக் கூறினர். ஆய்வு செய்தனர்.

1989ம் ஆண்டில் ஏழாவது உலகத் தமிழ் மாநாடு, மொரிசியசின் தலை நகர் போர்ட் லூயிஸில் இடம் பெற்றது.

1995ன் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு மீண்டும் தமிழகம் வழி திறந்தது. கலைக் கோயில்கள் நிறைந்த தஞ்சாவூரில் மாநாட்டை வெகு சிறப்பாக தமிழக அரசு நடத்தியது. இசை, நடனம், பாரம்பரியக் கலைகள் என மக்கள் பங்குபெறும் விழாவாகவும் அது பரிணமித்தது.

### ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு.

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, கலை, கலாச்சாரம், வரலாறு உள்ளிட்ட பன்முனை ஆய்வாளர்களை, அவர்கள் உலகின் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், ஒன்றிணைத்து, அவர்களின் வழி தமிழ் மொழியின் தோற்றுவாய்களையும், வளர்ந்த வழிகளையும், வளர்ந்து வரும் பாங்குகளையும் நமக்கு உணர்த்தும் அரிய வாய்ப்பினைத்

தந்திருக்கும் இந்த ஒன்பதாவது அகில உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு–கருத்தரங்கை தமிழுலகம் வரவேற்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக (ஜனவரி 29 முதல் பிப்ரவரி 1 வரை) மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் இம்மாபெரும் மாநாட்டின் வெற்றிக்கு கடந்த பல மாதங்களாக அயராது உழைக்கும் ஏற்பாட்டுக் குழுவினரை மனமுவந்து நாம் பாராட்டுகிறோம். கற்றறிந்த பெருமக்கள் நிறைந்த இம் மாநாட்டின் செயல் வீரர்கள், மாநாட்டு வெற்றிக்குக் கடுமையான ஈடுபாட்டுடன் பணியாற்றுபவர்கள். அவர்களின் உழைப்பிற்கு நன்றி சொல்லும் நாம், அவர்களின் வெற்றிக்கு நம்மால் ஆன ஒத்துழைப்பு அனைத்தையும் தர உறுதி கூறுவோம்.

இந்த ஒன்பதாவது மாநாடு, மொழி சார்ந்த பிரச்னைகளை, மொழி வளர்ச்சிக்கான ஆலோசனைகளை, ஆய்வுகளை விவாதிப்பதுடன், இன்றைய இளைய தலைமுறையினரின் மொழி ஆர்வத்தையும், அக்கறையையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாறிவரும் இன்றைய உலகில், படைப்பாளிப் பாரம்பரியமும் மாறி வருகிறது. எழுத்துத் தலைமுறையில், புதியன புகுத்தல் வேகமாக இடம் பெற்று வருகிறது. தொழில், வணிக, குடும்ப சூழல் காரணமாக புலம் பெயர்ந்து வாழும் இளம் படைப்பாளர்களின் எழுத்துக்களில், பிறந்த நாட்டு மணம் குறைந்து வருகிறது. அதே நேரத்தில் வளரும் நாட்டின் சூழலையும் முழுவதுமாக ஏற்று, இணைந்த நாட்டின் பெருமையையும் பறை சாற்ற இயலவில்லை

இளைய தலைமுறையினர் மற்ற துறைகளில் காட்டும் அளவுக்கு, படைப்பிலக்கியத்தில் அதிகம் அக்கறை காட்டுவதில்லை என்ற குறையும் நீடிக்கிறது. ஆனாலும் சிங்கப்பூர் போன்ற வளரும் நாடுகள், இளைய தலைமுறையினரையும், படைப்பிலக்கிய முயற்சியில் ஈடுபடுத்தும் பணியை செவ்வனே செய்து வருகின்றன. ஆட்சி மொழியான தமிழ், எதிர் காலச் சந்ததியினரால் மறக்கப்படுவதை சிங்கப்பூர் விரும்பவில்லை.

இணைய ஏடுகளின் பணி நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. இந்தந்த இணைய ஏடுகளில் எழுதி இருக்கிறேன் என்று இன்றைய எழுத்தாளர்கள் பெருமையுடன் பட்டியலிடும் நிலை வரவேற்கத்தக்கது.

புலம் பெயர் சூழலில் தமிழ் மொழிக் கல்வியின் எதிர் காலம், கலாச்சாரப் பின்னணியில் தமிழ் மொழியின் நிலை, மேலை நாடுகளில் தமிழ் மொழிக் கல்வியின் எல்லை, இன்றைய தகவல்–தொழில் நுட்பங்களின் அடிப்படையில் மொழி வடிவ மாற்றங்கள்... போன்ற தலைப்புகளில் இம் மாநாடு புதிய கருத்துக்களைத் தரும் என நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

– ஏ பி இராமன்

## அமைச்சர் இந்திராணி ராஜா தலைமையில் சிங்கப்பூர் அணியினர்!

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் ஒன்பதாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சிங்கப்பூர் குழுவினர், நம் சட்ட, கல்வி மூத்த துணை அமைச்சர் குமாரி இந்திராணி ராஜா தலைமையில் அணிவகுப்பதில் பெருமைப் படுகிறோம்.

கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் ஆய்வுக் கட்டுரைகள் படைக்கின்றனர் என்பதும் ஏராளமான தமிழார்வமுள்ள பார்வையாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள் என்பதும் நமக்குப் பெருமை தருவதாகும் .

ஆய்வுக் கட்டுரைகள் படைக்கும் படைப்பாளிகளில் சிங்கப்பூரின் அனுபவ எழுத்தாளர்கள், அமைப்புகளின் தலைவர்கள் அன்னியில், பல்கலைக் கழக இளைய சமுதாயமும் அக்கறை காட்டி இருப்பது வரவேற்கத் தகுந்த செய்தி.

நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள பல மார்க்கங்களில் கோலாலம்பூர் வந்துள்ளனர். இந்த மாநாட்டுப் பயணத்திற்கு ஒத்துழைப்பு தரும் வளர் தமிழ் இயக்கமும், அதன் தலைவர் திரு.ஆர்.ராஜாராம் அவர்களும் நம் பாராட்டுக் குரியவர்கள்.

சிங்கப்பூர் தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் ஒருங்கிணைப்பில் சிங்கப்பூரின் பல அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இம் மாபெரும் மாநாட்டிற்குச் செல்லும் சிங்கப்பூர் குழுவிற்கு, நம் பெருமைக்குரிய அமைச்சர் குமாரி இந்திராணி ராஜா தலைமை தாங்குவது மேலும் சிறப்புச் சேர்க்கிறது. இந்த ஏற்பாட்டின்படி, ஜனவரி 29லிருந்து பிப்ரவரி, முதல் தேதிவரை சிங்கப்பூர் அணியினரின் குரல், பல மாநாட்டு அரங்கங்களில் ஒலிக்க விருக்கின்றது.

தமிழ் வள்ளல் ஜோஸ்கோ டிராவல்ஸ் உரிமையாளர் திரு நாகை தங்கராசு, மாநாட்டு பயண ஏற்பாடுகளில் பெரும் பங்காற்றியுள்ளார்.

‘சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள், மற்றும் தனிப்பட்டோரின் ஒத்துழைப்பையும், ஆய்வுத் திறனையும் வெளிக் காட்டி, கட்டுக்கோப்பான நம் உணர்வுகளை வெளிப்படுத்துவது தான் நம் முக்கிய நோக்கம்’ என்று தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு மு ஹரிகிருஷ்ணன் தமிழ்மணியிடம் குறிப்பிட்டார்.

‘வெளிநாட்டுத் தமிழ் ஆய்வாளர்களையும், அறிஞர்களையும் சந்திக்கும் நாம், அவர்களுடனான நல்லுறவை வளர்த்துக் கொள்வதுடன், ஐம்பதாவது தேசிய தினத்தைக் கொண்டாடும் சிங்கப்பூரின் பெருமையையும் – புகழையும் அவர்களிடையே நிலைநாட்ட இது ஓர் அரிய வாய்ப்பு என்றும் கூறிய திரு. மு ஹரிகிருஷ்ணன், சிங்கப்பூரின் அனைத்து அமைப்புகளும் இதன் தொடர்பாக அளித்த ஒத்துழைப்பை மிகவும் பாராட்டினார். முதன் முறையாக பெரும்பாலான அமைப்புகளும் ஒன்றிணைந்து, இந்த ஐம்பதாவது தேசிய தின ஆண்டில், இப்படிப்பட்ட தமிழ் மொழிப் பயணத்தை மேற்கொள்வதை நாம் பெருமையாக ஏற்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

**தமிழ் ஆராய்ச்சி மாநாடு வெற்றி பெற நம் இதயம் கலந்த நல்வாழ்த்துகள்!**

– ஆசிரியர்..

# 9வது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்கும் அனைத்து மொழி ஆர்வலர்களுக்கும் தமிழ்மணியின் தமிழ் வாழ்த்துகள்!

**INTERNATIONAL ASSOCIATION FOR TAMIL RESEARCH (IATR), MALAYSIA**
**9TH INTERNATIONAL CONFERENCE-SEMINAR ON TAMIL STUDIES**
(29th JANUARY – 1st FEBRUARY 2015)
ORGANIZING COMMITTEE

**PATRON**
**Y.A.B. Dato' Sri Mohd. Najib Bin Tun Haji Abdul Razak**
*Prime Minister of Malaysia & Minister of Finance*

**COMMITTEE OF HONOUR**
**Y.A.B. Tan Sri Dato' Haji Muhyiddin Bin Mohd. Yassin**
*Deputy Prime Minister & Minister of Education*

**EX-OFFICIO**
**Tan Sri Dato' Professor Dr. T. Marimuthu**
*President, International Association for Tamil Research (IATR)*

**ADVISORY BOARD**
Y.B. Datuk Seri G. Palanivel
*President, Malaysian Indian Congress &*
*Minister of Natural Resources and Environment*
His Excellency Shri T. S. Tirumurti, *High Commissioner of India to Malaya*
Professor Dato' Dr. Mohd. Amin Jalaludin, *Vice-Chancellor,*
*University of Malaya*
Tan Sri Dato' Dr. K. R. Somasundaram, *NLFCS*
Tan Sri Dato' G. Hari Narayanan
Tan Sri Datuk G. Gnanalingam, *Westports Malaysia*
Tan Sri Datuk Dr. Mohan Swami, *Perdana University*
Datuk Seri Mohammad Iqbal, *Falim Group*
Tan Sri Dato' Sri Dr. Tony Fernandes, Air Asia Sdn. Bhd.
Datuk Dr. Guna Sittampalam, HSS Sdn. Bhd.

**CHAIRMAN**
YB Dato' Seri Utama Dr. S. Samy Vellu
*Special Envoy (Ministerial Rank) to India & South Asia on Infrastructure,*
*Prime Minister's Department, Malaysia*

**VICE-CHAIRMEN**
Y.B. Datuk Seri Dr. S. Subramaniam
*Deputy President, Malaysian Indian Congress & Minister of Health*
Y.B. Datuk M Saravanan, *Deputy Minister, Ministry of Youth and Sports*
Y.B. P. Kamalanathan, *Deputy Minister II, Ministry of Education*
Tan Sri Dato' K Kumaran
Datuk B. Sahadevan, NLFCS
Dr. R. Mohana Dass, Head, *Department of Indian Studies,*
*University of Malaya*

**GENERAL SECRETARY**
*Professor Dr. N. Kanthasamy, AMN*

**DEPUTY GENERAL SECRETARY**
*Associate Professor* Dr. Krishanan Maniam
Dr. Mohana Dass Ramasamy

**TREASURER GENERAL**
Mr. Nagalingam, GOPIO
Mr. Ramesh, IATR, Malaysia

**FINANCE**
YB Dato' Seri Utama Dr. S. Samy Vellu
*Special Envoy (Ministerial Rank) to India & South Asia on Infrastructure,*
*Prime Minister's Department, Malaysia*
Tan Sri Dato' Professor Dr. T. Marimuthu

# திருவள்ளுவர் கூறும் தண்டனை

### தண்டனை (Punishment) என்பது என்ன?

ஒரு குற்றவாளிக்கு தருவது தண்டனை.

தண்டனை இருவகைப்படும், ஒன்று மரணதண்டனை (capital punishment, in Latin capital means head, re-moving the head or killing an individual is called capital punishment)

M S Vincent USA

மற்றொன்று வலி உண்டாக்குவது கிடையாது (corporal punishment = inducing pain),

இந்தியாவில் மரணதண்டனை உள்ளது. வலி உண்டாக்குவது (கை கால்களை வெட்டுவது, சவுக்கால் அடிப்பது, இப்படி பல). ஆனால் சிறையில் அடைக்கும் முறை உள்ளது.

### தண்டனை கொடுப்பதின் நோக்கம் என்ன?

குற்றம் செய்தவனைப் பழி வாங்க வேண்டும், அதற்காக அவனை துன்புறுத்த வேண்டும். இதுதான் பரவலாக உலகெங்கும் பரவி கொண்டிருந்த சிந்தனையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் பெக்காரிஸ் என்பவர், ஒரு புதிய சிந்தனையை வெளிட்டார்.

"தண்டனை என்பது, மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாதவாறு (specific deterrence = preventing recurrence) குற்றவாளியை திருத்த கூடியதாய் இருக்கவேண்டும்."

தண்டனை என்பது குற்றவாளியைத் திருத்தி நல்வழிப் படுத்த கூடியதாய் இருக்கவேண்டும்.

இது ஒரு மாபெரும் சிந்தனை, உலகநாடுகள் ஏற்றுக்கொண்ட புதிய சிந்தனை.

குற்றவாளியைப் பழி வாங்க கூடாது, திருத்த வேண்டும். ஒருவனுக்கு மரண தண்டனை கொடுத்துவிட்டால் அவன் மாண்டு போவான், அவனைத் திருத்த வாய்ப்பு இருக்காது, ஆகவே மரண தண்டனை கூடாது என்று முடிவு செய்து, இன்று உலகில் 100 நாடுகட்குமேல் மரண தண்டனையை எடுத்து விட்டார்கள். இன்னும் இந்தியா மரண தண்டனையை வைத்துக்கொண்டுள்ளது.

இந்தப் புதிய சிந்தனையை, பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிந்தனையை, 2000 ஆண்டுகட்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார் என்பதை அறிந்தால் உள்ளம் இறும்பூது எய்துகின்றது.

குறள் 561

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. (561)

தக்காங்கு நாடி = குற்றத்தைச் சரியாக ஆய்ந்து (after a proper trial) Trial = நீதி விசாரணை.

நீதி விசாரணை என்பது என்ன? குற்றம் சாட்டப்பட்டவன் தன்னைக் காபாற்றிக் கொள்ளக் கொடுக்கும் வாய்ப்பு. நீதி விசாரணை இல்லாமல் தண்டனை என்றும் தர கூடாது என்பதை திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார்,

(Modern criminal procedure says judgment without trial means default judgment', 2000 years ago Thiruvalluvar had insisted that a trial should be conducted before any judgement)

தலைச்செல்லா வண்ணத்தால் = மீண்டும் செய்யாதப்படி (According to modern penology : specific deterrence = preventing further commiting the offence by the offender . Deter = prevent the occurrence,)

Penology = the study of the punishment of crime and of prison management. = தண்டனையும், சிறை நிர்வாகமும் பற்றிய இயல்.

ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து = குற்றத்திற்கு ஏற்ப தண்டனை..

குற்றத்தைச் சரியாக ஆய்ந்து, மீண்டும் செய்யாதபடி, (deterrence = preventing recurrence)

குற்றத்திற்கு ஏற்ப தண்டனை (punishment that correlates with the gravity of the crime) தருவதே அரசு ...

"குற்றத்தை மீண்டும் செய்யாதபடி தண்டனை" இந்த சிந்தனை, இன்றைய சிந்தனையோடு ஒத்துபோகின்றது, அதை அன்றே திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பதை நினைக்கும்போது பெருமிதம் ஏற்படுகின்றது.

"தண்டனையின் நோக்கமே மீண்டும் குற்றம் செய்யாதவாறு திருத்துவது" என்ற இன்றைய மாபெரும் சிந்தனை, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகத்தில் உதித்தது என்பதை உலக மக்கள் உணரச் செய்தல் வேண்டும்.

இன்றைய உலகில், தண்டனை முடிந்து வெளியே வந்தவர்கள் நல்ல குடிமக்களாக வாழ, மறுசீரமைப்பு (Rehabilitation). திட்டங்கள் நடை முறையில் உள்ளன. குற்றவாளிகளைத் திருத்துவதற்குச் சில நாடுகளில் திறந்தவெளி சிறைச்சாலைகள் உள்ளன.

குறள் 561

நீதி விசாரணை நடத்தி, குற்றம் சாட்டப்பட்டவனுக்கு
தன்னை காப்பாற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பு தந்து,
மீண்டும் அவன் குற்றத்தை செய்யாதபடி, குற்றத்துக்கு
ஏற்ற தண்டனை தர வேண்டியது அரசின் கடமை.

மேலும் சில குறள்கள் உங்கள் சிந்தனைக்கு:

Kural 561 in English

After a trial per law, appropriate punishment should be given such that, offenders will not commit the crimes again.

### SOME MORE KURALS

காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது (102)

Even a small help done at the time of need is much greater than the world.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)

Those who have killed all the virtues in their lives can have salvation

But those who have forgotten the help done by others cannot have salvation.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (108)

நன்றி மறப்பது நன்று அன்று நன்று அல்லது அன்றே
மறப்பது நன்று (108)

Do not forget the helps done by others but forget imme-diately the evils done by others.

★ சுறுசுறுப்பாக இயங்கும் முன்னாள் நியமன நாடாளுமன்ற உறுப்பினர்
★ அதிக தமிழ் அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்
★ தேவையை அனுசரித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்பவர்
★ தமிழர் நலனில் அக்கறை காட்டுபவர்

இரா தினகரன்

# இரா தினகரன்

❖ ஒரு நாடாளுமன்ற நியமன உறுப்பினர், தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர் - இவர்களுக்கிடையே உள்ள முக்கிய வித்தியாசங்கள் என்னென்ன?

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குத் தொகுதி பொறுப்பு அதிகம். அவர்கள் தொகுதி மக்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து, அதற்கு என்னென்ன மாதிரியான தீர்வு காணலாம் என்பதில் அதிக நாட்டம் காட்ட வேண்டியது இன்றியமையாதது. அவர்கள் 'மக்கள் சந்திப்பு' கூட்டத்தில் கூறும் பிரச்னைகளை அணுகத் தெரிந்திருக்க வேண்டும். நியமன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி பிரச்சனை இல்லாவிட்டாலும், எங்களுக்கு அரசாங்கம் என்னென்ன சட்டத் திட்டங்கள் கொண்டு வருகிறார்கள் என்பதை ஆழமாக கவனிக்க வேண்டும். அப்படி முழு கவனம் செலுத்துறதுக்கு நமக்கு முழு வாய்ப்பு உண்டு. இரண்டாவதாக நமக்கு பலவிதமான அனுபவங்கள் இருக்கு. நியமன உறுப்பினருக்கு தொகுதி இல்லாவிட்டாலும் ஒரு செக்டர் (sector), அதாவது சுகாதாரம் அல்லது கல்வி போன்ற ஏதாவது ஒன்றில் ஈடுபாடு காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். வணிகம் உள்ளிட்ட பகுதியில் தான், நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

❖ நாடாளுமன்றத்தில் ஒரு நியமன உறுப்பினரின் பணிகள் என்னென்ன?

எல்லா உறுப்பினர்களுக்கும் பணி ஒன்றுதான். உள்ளே போய்விட்டால், எல்லா விஷயத்தையும் பற்றிப் பேசலாம். சில நிதி தொடர்பான தீர்மானங்கள், மாற்றங்களுக்கு ஓட்டுப் போட உரிமையில்லை. ஆனால் என் காலகட்டத்தில் அப்படி எதுவும் நடக்க வில்லை.

❖ உங்களுடைய பணி காலத்தில் நீங்கள் கவனம் காட்டிய துறைகள் என்னென்ன?

சிங்கப்பூர் மக்களுக்கு அவர்களின் மருத்துவ பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, வீட்டுப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அல்லது போக்குவரத்து பிரச்சினையாக இருந்தாலும் சரி, வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அவற்றைப்பற்றி திருப்திகரமா பேசியிருக்கிறேன். ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத்திலும் புதுப் புது சட்டங்கள், அல்லது இருக்கும் சட்டங்களில் (Bill) மாற்றங்கள் கொண்டு வருவார்கள். முதல் reading முடிச்சு, இரண்டாவது reading கொண்டு வருவார்கள். அப்போதெல்லாம் எனக்குப் பிடிச்ச சட்டங்களைப் பற்றி நிறைய பேசியிருக்கிறேன்.

❖ உங்களுக்கென்று ஒரு தொகுதி இல்லாத நிலையில், நியமன உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் நாடு சார்ந்த போக்கில் யாருக்காக உங்கள் கவனத்தை செலுத்தினீர்கள்?

மக்கள் தொடர்பாக எல்லாவற்றிலும் பேசியிருக்குறேன்., வர்த்தகம், வரி, காசினோ சூதாட்டக் கூடம். எந்தெந்த சட்டங்கள் வந்ததோ, அத்தனையிலும் பெரும்பாலும் பேசியிருக்கேன். மக்கள் தொகையை அதிகரிக்க ஒரு வெள்ளை அறிக்கை கொண்டு வந்தார்கள். குறிப்பா அதைப்பற்றி தமிழில் பேசியது எனக்கே மறக்க முடியாத ஒரு சம்பவம்தான்னு சொல்லுவேன்.

❖ வெளிநாட்டுக்காரர்கள் வருகை பற்றி உங்கள் கருத்து என்ன?

நம்மில் பலர் ,வெளி நாட்டிலிருந்து நிறைய மக்கள் இங்கு வந்து எங்களுக்கெல்லாம் இடம் இல்லாமல் செய்துட்டாங்கனு வருத்தப்பட்டுக்கிட்டிருக்காங்க. மக்கள் தங்கள் முழு சூழ்நிலையையும் அறியாமலேயே வருத்தப்படுகிறார்கள். அவர்கள் வருத்தப்படுறது ஒரு பக்கம் இருக்க, இந்த சமயத்தில் அரசாங்கம் திடீர்னு மக்கள் தொகையை 6.9 மில்லியனுக்கு கூட்டப் போறோம்னு சொன்னதும் மக்களுக்கு மலைப்பா போயிவிட்டது. விளக்கிஇருந்தா எல்லாருக்கும் புரிஞ்சிருக்கும். ஆனா விளக்கம் சொல்லாமலே ஒரு நம்பரைப் பார்த்த உடனே மக்களுக்கு ஒரு அதிர்ச்சி/மலைப்பு. அதனாலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் அதற்கு வாக்களிக்கவில்லை.

❖ நாட்டுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களையும் அரசு அறிவித்ததே?

அரசாங்கம் எல்லாவற்றையும் செய்துவிட்டு, இங்கே 6.9 மில்லியன் மக்கள் வாழ எல்லா வசதிகளையும் செய்திருக்கிறோம்– இவ்வளவு மக்கள் இருந்தால் தான் நமக்குத் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சி இருக்கும்– அன்றாடம் உள்ள செலவினங்களைப் பண்ணினாதான் நாட்டு பொருளாதாரத்தில் ஒரு நிலைத்தன்மையை அடைய முடியும் என்று ஒரு நல்ல காரணத்தை முன்கூட்டியே அறிவித்திருக்க வேண்டும்.

❖ இந்நாட்டில் இந்தியர்களின், தமிழர்களின் எதிர் காலம் எப்படி அமையும் என ஊகிக்கிறீர்கள்?

இந்தியர்களின்/ தமிழர்களின் எதிர் காலம்..50 ஆண்டுகளுக்கு முன்பு நாம் தனி நாடா பிரியறதுக்கு முன்பே இந்தியர்கள் நாட்டுப் பற்றோடு சிங்கப்பூரில் வந்து வாழ்ந்தவர்கள். பெரும்பாலான மக்கள் மொழி உணர்வோடும், இன உணர்வோடும் இருந்தாலும், சிங்கப்பூர் நமது நாடு என்று நினைச்சு பாடுபட்டார்கள். நமது நாடு என்று நினைத்து நிறைய பண்ணிகிட்டிருக்காங்க. " வெளிநாட்டுல இருந்து வர்றவங்க ." இங்கே வந்து தேசிய சேவை செய்யல, நாட்டுப் பற்று நம்ம அளவுக்கு காட்டலை. அவங்க இங்கே தற்காலிகமாக இருந்திட்டு, பணம் சம்பாதிச்சுட்டு , சந்தோஷமா இருந்திட்டு போக வந்திருக்காங்க, அவங்களுக்கு இவ்வளவு செய்றீங்களே"ன்னு ஒரு ஆதங்கம் மக்களிடையே இருக்கு. ஆனா அது முழுமையா சரின்னு சொல்ல முடியாது. மனித உழைப்பு நமக்கு ரொம்ப ரொம்ப தேவை , அதுல தான் நம் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து கட்டிக் காக்க முடியும். இதை நாம மறந்திடக்கூடாது. அதே நேரத்தில் நமக்கும் நிறைய வாய்ப்புகள் இருக்குறதை மறந்திடக்கூடாது.

❖ இந்த மனப்பான்மையை எப்படிப் போக்கலாம்?

முதல்ல நம்ம வாழ்க்கைத் தரத்தை உண்மையிலேயே அலசிப் பார்க்கணும். "இப்ப புதுசா வந்த இந்தியர்கள் வாழ்க்கைத் தரத்தைக் கூட்டிடுவார்கள். நாம் தேசிய அளவிலான வருமானத்தில் நிற்கனும். நிறைய வெளிநாட்டினர் நல்ல பதவியில் இருக்காங்க" அப்படியெல்லாம் நினைக்கிறோம். ஆனா

நாம என்ன பார்க்கனும்னா, சிங்கப்பூரிலே பிறந்து, வளர்ந்து, சில தலைமுறைகளா இங்கே இருக்கிறவர்கள் எந்த அளவிற்கு உறுதியா வளர்ந்திருக்கிறார்கள் என்று ஒரு ஆராய்ச்சி செய்து பார்க்கனும். அதன் அடிப்படையில அவர்களுக்கு வேண்டும் தேவைகளை முழு கவனத்தோடு அமைப்புகள் மூலம் தொடர்ந்து செய்துகிட்டு வரணும்.

❖ அதை எந்த அளவுக்கு செய்ய முடியும்னு நினைக்கிறீங்க?

கீழ் மட்டத்தில் இருப்பவர்களை மேல் மட்டத்துக்கு கொண்டு போவது ஒரு பெரிய இலக்கு. அந்த இலக்கை அடைவதற்கு சிண்டா போன்ற இயக்கங்கள் குறிப்பா அதி முக்கியத்துவம் காட்ட வேண்டும். அதுதான் தமிழர்களைப் பற்றிய கவலை. பொதுவா நாட்டின் மொழிக் கொள்கை, இனக் கொள்கை. தேசிய ஒருமைப்பாடு என்று சொல்கிறோம் அல்லவா, அந்த மூன்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிற அரசாங்கம் தொடர்ந்து 50 ஆண்டுகளாக நம் நாட்டில் இருக்கு. இன்னும் இது கடைசிவரை தொடரனும் . மொழி, இனம், மதம், இந்த மூன்றுக்கும் இப்ப தரப்பட்டிருக்கும் இடம், கடைசி வரை இருக்கனும். இதைக்கொண்டுச் செல்லக்கூடிய பொறுப்பு வரக்கூடியத் தலைவர்களுக்கு நிறைய இருக்கு. இது ரொம்ப உணர்வு பூர்வமான பிரச்சினை; இதை கட்டிக்காக்கும் பொறுப்பு மிகப் பெரியது. இதில்தான் நம் வெற்றியே அடங்கி இருக்கிறது. , நம் இனம், மொழி பிரச்சினைகளை எந்த அளவுக்குத் தீர்த்து, நமக்குள்ள உரிமைகளை கேட்டு வாங்க முடிகிறதோ, அதற்கு ஒரு இடம் கொடுத்திருக்காங்க, . அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு நல்ல விளக்கங்களைக் கொடுத்து எதற்காக இதைக் கட்டிக் காக்க வேண்டும் என்கிறதை இரண்டு சாராரும் புரிந்து செயல்பட வேண்டும். சிறுபான்மைத் தமிழர்களுக்கு இன்னும் அதிகமான பொறுப்பு இருக்கு.

❖ இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நீங்கள் பேசி இருக்கிறீர்களா?

நாடாளுமன்றத்தில் நான் இருந்த சமயத்தில் ஒரு சந்தர்ப்பம்: ஒரு மலாய்காரர் பேசினார். அமைச்சர் சொன்னார் மலாய்காரர்கள் 15 விழுக்காடு இருக்கிறார்கள், அதை கடைசி வரை நிலை நாட்டனும் என்றார். இதைச் சொன்னதும் என் மனதில் பதிந்திருந்த ஆழமான ஒரு சிந்தனையை அன்றைக்கு சொன்னேன்., முதலில் நான் ஆங்கிலத்தில் மக்கள் தொகை வெள்ளை அறிக்கை பற்றி பேச 20 நிமிஷம் தயார் பண்ணியிருந்தேன். அதை சுருக்கிவிட்டு, பொதுப்படையா நான் பேசினது 17 நிமிஷம்.– சிங்கப்பூரியர்களுடையப் பிரச்சினைகள், வணிகப் பிரச்சினைகள், மக்கள் தொகையைக் கூட்ட என்னென்ன செய்யனும்,எது எது மக்கள் தொகைக்கு சரிவரும் என்று. அதில் அரசாங்கத்தின் பொறுப்பு என்ன, தமிழர்களுக்கு என்ன பிரச்சினை, தமிழ் மொழிக்கு என்ன பிரச்சினை, அதை எப்படி வருங்காலத்தில் செய்யனும் என்கிறதுக்கு ஒரு சின்ன ஆலோசனை கொடுத்தேன்

❖ அதற்கு என்ன பதில் கிடைத்தது?

நான் பதில் எதிர்பார்க்கவில்லை, அரசாங்கத்தின் கவனதிற்குக் கொண்டு வந்தேன், அவ்வளவுதான் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் நிறையப் பேசியிருக்கிறேன். Accountazcy Commission Bill–ன்னு சிங்கப்பூரில் அறிமுகமானபோது, நான் பேசியது தான் என் குறிப்பிடத் தகுந்த பேச்சு. அவர்கள் கொண்டு வந்த சட்டத்தில் என்னென்ன தவறுகள் என்று கோடிகாட்டி, உலக நாடுகளில் இப்படி இப்படி இருக்கு, ஆகையால் அதை ஏன் இங்கே கொண்டுவர வேண்டும், அது தேவையா என்று பேசி யிருக்கிறேன். அதுக்கு அமைச்சர் நல்ல பதில் கொடுத்திருக்கிறார்.

❖ வேறு எந்தெந்த பிரச்னைகளில் உங்கள் குரல் ஒலித்திருக்கிறது?

நிறைய. நகர மன்றம், வீடமைப்பு,தனியார் கட்டுமான நிறுவனங்கள், போன்ற பல விவாதங்களில் நான் கலந்துகொண்டு என் கருத்துக்களை சொல்லி இருக்கிறேன். உடனே எதையும் மாற்றி அமைக்காவிட்டாலும், அரசு, நியாயமான கருத்துக்களை சந்தர்ப்பம் வரும்போது கவனித்துக் கொள்ளும்.

❖ குட்டி இந்தியா கலவரம் குறித்தும் நீங்கள் கருத்து சொல்லி இருக்கிறீர்கள். இல்லையா?

பொது மக்கள் நலன் கருதி தற்காலிக பாதுகாப்புச் சட்டம் ஒன்று நாடாளு மன்றத்தில் வந்தபோது, . அது சம்பந்தமா சில கேள்விகள் கேட்டிருக்கேன்.அமைச்சர்கள் சண்முகம், ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் விக்ரம் நாயர், நான், தொழிற்சங்கவாதிகளெல்லாம் கருத்துக்கள் சொன்னோம். அமைச்சர்களெல்லாம் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள். நான் எந்த கட்சியிலும் இல்லை. எந்த கட்சியையும் சேராத நான், “இது நமது நாடு, வெளிநாட்டிலிருந்து இங்க வந்து கலவரம் ஏற்படுத்தி, பெயரைக் கெடுத்தத்துடன், நம்ம ஊரில் நடக்காத ஒரு தவற்றைச் செய்துவிட்டார்கள். நம்ம நாட்டு சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் அவர்கள் நடந்திருக்கனும் என்பதை, மற்றவர்களைக் காட்டிலும் நல்ல விளக்கமா நான் பேசினேன். துணைப் பிரதமர் தியோ சீ ஹியான் என்னை இதற்காக பல முறை பாராட்டினார்

❖ சிங்கப்பூர் அரசுக்கும் பொது மக்களுக்குமான தொடர்பு இன்று எந்த அளவில் உள்ளது?

இன்று இணையத் தொடர்பு வழி நெருக்கம் அதிகம் – எந்த அமைச்சுடனும், எந்தத் தகவல்களையும் தெரிந்து கொள்ளும் சூழ்நிலை – அமைச்சர்கள் இணையத்தின் வழி நேரிடையாக கருத்துப் பரிமாற்றம் – எதையும் திறந்த மனத்துடன் பகிர்ந்து கொள்ளும் சித்தாந்தம்; இத்தனையும் இருக்கையில், தொடர்புக்கு என்ன குறை இருக்க முடியும் ?

❖ நம் தமிழ் சமுதாயத்திற்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள்/அறிவுரைகள் ஏதும் உண்டா?

நம் முன்னேற்றத்தை முன்னிறுத்தி அரசாங்கம் நிறையச் செய்வதை முழுமனதுடன் ஏற்று, இன்னாட்டிற்கான நம் பணிகளை செய்வதும், நாட்டில் விசுவாசத்துடன் வாழ்வதும், பல இன சமுதாயத்தின் மகத்தான வெற்றிக்கு நம்மால் முடிந்ததைச் செய்வதும் நம் தலையாய கடமைகள்.

❖ மாணவர்களின் எதிர் காலத் தமிழ் மொழி ஈடுபாடு குறையுமா? வளருமா?

ஆங்கில மொழிக்குட்பட்ட வணிக, சமூக,பொருளாதார அடிப்படையில் வாழும் இன்றைய எந்த உலக நாட்டிலும் , கடுமையான உழைப்பு, ஆர்வம்,உணர்வு இவற்றின் அடிப்படையில் தான் எந்தத் தாய் மொழியும் வளர இயலும். இதை உணர்ந்து இப்போதே தமிழ் மொழி சிறக்கும் எதிர்காலப் பணிகளில் நம் மக்கள், அமைப்புகள் ஈடுபட்டிருப்பது பாராட்டுக் குரியது.

❖ தமிழ்மணி வாசகர்களுக்கு உங்கள் ஆலோசனை-அறிவுரை என்ன?

நம் கண் முன்பாக நாம் வளர்த்த சிங்கப்பூர், இன்று உலகளாவிய பெருமையுடன் வளர்ந்துள்ளது. நவீன யுகத்தின் நாகரீக மாற்றங்களுடன் நாம் வளர்ந்து, பயன் அனுபவித்து வருகிறோம். இது நீடித்து நிலைக்க நம் ஒருமித்த ஒத்துழைப்பும், பல இன உறவும் தொடர்ந்து கட்டி காக்கப்பட வேண்டும். தமிழ் சமுதாயம் ஒற்றுமையுடன் விளங்குவதுடன், கலை–கலாச்சாரங்களை கட்டுக் கோப்புடன் வைத்திருக்க வேண்டும். தமிழவேள் கோ.சாரங்கபாணி போன்ற பெரியார்கள் நமக்கு நல்வழி காட்டிச் சென்றுள்ளனர்.

அனைவரையும் இணைத்து மகிழ்ச்சி காணும் நோக்கத்துடன் வெளிவரும்’தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் “தமிழ்மணி” இதழ் மேலும் சிறக்க வாழ்த்துகள் !

*– பேட்டி : திருவாட்டி புஷ்பலதா நாயுடு*

# தமிழுக்கு உழைத்த தகைமையாளர் சங்கரன் ஐயா !

**தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் துணைத் தலைவராக பணியாற்றிய பெருமைக்குரியவர். கழகத்தின் சார்பாக கோலாலம்பூரில் உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் திருக்குறள் விழா, சென்னையில் உலக தமிழ் ஒப்புரவாளர் மாநாடு, கோவையில் உலக தமிழ் செம்மொழி மாநாடு ஆகிய விழாக்களில் பங்கேற்ற பெருமை உடையவர். சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உலகத் தமிழ் திருக்குறள் விழாவுக்கு தன் சொந்த செலவில் பயணம் மேற்கொண்டு கழக இதழான தமிழ்மணியை பல நாடுகளிலிருந்து வந்திருந்த பேராளர்களுக்கு வழங்கி பாரட்டுகளை பெற்றவர்.**

**கழகத்தின் நிகழ்வுகளுக்கு நிதி திரட்டும் பெரும் பணியை வெற்றிகரமாக செய்தவர். கடந்த 30 ஆண்டுகளாக கழகத்திற்கு இவர் செய்துள்ள தொண்டு அளவிடற்கரியது. 1986 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதல் திருக்குறள் விழாவிலிருந்து கழகத்திற்காக செயல்படத் தொடங்கி திருக்குறள் விழாவில் விருது பெறும் அளவுக்கு உயர்ந்துள்ள ஒரு உன்னத தொண்டர். கழகத்தின் வழி தமிழுக்காகவும், சிங்கை வாழ் தமிழ் சமுதாயத்திற்காகவும் தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை அர்ப்பணித்து சிறப்பாக தொண்டாற்றி வந்த திரு சங்கரன் ஐயா அவர்களுக்கு, திருவள்ளுவர் விருதினை வழங்கிச் சிறப்பித்தது, தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.**

சிங்கப்பூர் சமுதாயத்தில் நீண்ட கால சேவையாற்றிய திரு.சங்கரன் அவர்களை 'தமிழ்மணி' பேட்டி கண்ட போது முகமலர்ந்து அவர் தந்த விவரங்கள் இதோ:

**ஐயா, உங்களின் தொடக்க கால சமுதாய ஈடுபாடுகளை தெரிந்து கொள்ளலாமா?**

பதில்: 1951ல் சிங்கப்பூர் வந்த நான், 1954 ஆம் ஆண்டு அமைந்த திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்து திரு.கே.வி.கே.சாமி தொண்டர் குழுவில் சேர்ந்து தமிழர் திருநாள் நிகழ்ச்சிகளில் பணியாற்றினேன். பிரிட்டிஷ் காலனியிலிருந்து சிங்கப்பூர் விடுதலை பெற பாடுபட்ட மக்கள் செயல் கட்சியில் 1956 லிருந்து 1959 வரை உறுப்பினராக செயலாற்றினேன்.

**நீங்கள் திருக்குறள் விழாக்களின் சிறப்பிற்கு நிறையப் பங்காற்றி இருக்கிறீர்கள். அதைப்பற்றி விவரங்கள் தாருங்களேன்.**

பதில்: பெரியவர் திரு.ஊ.குமாரசுவாமி அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, திரு.வை.திருநாவுக்கரசை மதியுரைஞராக கொண்டு அமைந்த 11 பேர் குழு 1986ல் முதல் திருக்குறள் விழாவை வெற்றிகரமாக நடத்தியது. அந்த குழுவில் ஒருவனாக இடம்பெற்று "சங்கரன் இல்லாமல் திருக்குறள் விழா இல்லை" என்ற பாராட்டை பெற்றேன். நான் கழகத்தில் நிதி வசூலிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆண்டுகளில் குறள்விழாவிற்கு வாரி வழங்கிய வணிகப் பெருந்தகைகளை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை.."செயலவை ஒப்புதலுடன் என்னை துணைத் தலைவராக நியமித்துப் பெருமைப்படுத்தினார், கழகத்தின் தலைவர் திரு.மு.அரிகிருஷ்ணன்.

**உங்களின் மற்றையப் பணிகள் பற்றியும் சிறிது கூற முடியுமா?**

பதில்: கழகத்தின் சார்பாக கோலாலம்பூரில் உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் திருக்குறள் விழா, சென்னையில் உலக தமிழ் ஒப்புரவாளர் மாநாடு, சுவிட்சர்லாந்தில் உலக தமிழ்த் திருக்குறள் விழா, கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஆகிய விழாக்களில் பங்கேற்றதில் பெருமை அடைகிறேன். இந்த 29 ஆண்டுகள் கழகத்திற்கு நான் செய்த சேவை மிக சிறியதுதான் என்றாலும், என்னை கழகமும்தான் உறுப்பினர்களும் பெரிதும் மதித்துக் கௌரவித்தது என் வாழ்நாளில் மறக்க முடியாதது.

**சிங்கப்பூர் தமிழ் சமுதாயத்திற்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: ஒற்றுமை... அதுதான் நமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். நம்மில் ஒற்றுமை குறைந்தால், நாமும் நம் தலைமுறையினரும் நம் தகுதியை இழக்க நேரிடலாம். ஐம்பதாவது தேசிய தினத்தைக் கொண்டாடும் சிங்கப்பூருக்கும், மக்களுக்கும் நிறைவான வாழ்த்துகள்!

– ராம்கி

**தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் பெருமைப்படுத்திய சாதனையாளர்கள்**

# அன்பழகனுக்கு பாரதி விருது

புதுமைத்தேனீ மா.அன்பழகன் அண்மையில் தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் சென்ற ஆண்டிற்கான பாரதி விருதைப் பெற்றவர். பேச்சு, கவிதை, எழுத்து, இலக்கியப் பணிகளில் பெயர் பதித்த அவர் தன் விருதுபற்றி என்ன கூறுகிறார்?

"இதுவரை நான் ஆற்றிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டி, அங்கீகரித்து, தமிழ் மொழிப் பண்பாட்டுக் கழகம் எனக்கு அளித்த பாரதி விருதை மகிழ்வோடு ஏற்கிறேன். என் தொடர்ந்த பணிகளுக்கு இது ஊக்கமூட்டும் எனவும் திடமாக நம்புகிறேன். என்னைப் போல் உழைத்தால், இது போன்ற சிறப்புகள் மற்றவர்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பு உருவாவதாக இந்த விருது உணர்த்துகிறது.

பாரதிக்கு முன் – பின் என்ற இரு நிலை இருப்பதை நாமறிவோம். செம்மொழி செய்யுளை சுலமமாக அறிய முடியாத நிலை, பாரதிக்கு முன் இருந்தது. அதை உடைத்தெறிந்து, தமிழ் மொழியை சாதாரண மக்களிடம் கொண்டு சேர்த்தவர் பாரதி தான். தமிழை, 'மக்கள் மொழி'யாக்கிய பெருமை பாரதிக்கு மட்டுமே சேரும். உலகத்தை மக்களுக்குக் காட்டி மற்றவர்களினின்று மாறுபட்டு, எளிய கவிதைகளை தமிழ் உலகெங்கும் பரவச் செய்த ஒரு கவிஞரின் பெயரால் கொடுக்கப்பட்ட விருதை பெருமை யாகக் கருதுகிறேன்.'

இவ்வாறு நம்மிடம் கூறிய கவிஞர் மா.அன்பழகன், தான் அன்று பாரதிபற்றி மேடையில் படித்த தன் ஏக்கக் கவிதையையும் நம் பார்வைக்கு வைக்கிறார்.

– பராந்தகன்

### பாரதிபோல் பாடமுடியவில்லை

எட்டயபுரத்தானின் கவிதைகள்
எளிமையினால் இனிமையாயின
கருத்துகளினால் கவர்ந்திழுத்தன
சந்த இசையினால் நாவினில் சிந்துபாடின
மனச்சந்துகளில் நிலைபெற்று பந்தமாயின
அவன் வாயிலிருந்து புறப்பட்ட
வரிகளெல்லாம் வைரம்பாய்ந்த இலக்கியமாயின

வற்கடம் புகுந்து வாழ்ந்துபோன ஆயுளில்
சாலை ஓரத்திலும்; காலை உதயத்திலும்
வாய்க்கால் வரப்பிலும்; வரண்டுபோன ஆற்றிலும்
சோலைகளின் நிழல்களிலும்; சோரம்போன மனிதத்திலும்
கடலோர மணல்களிலும்; காற்றுப்பட்ட திசைகளிலும்
காக்கைக் குருவிகளைக் கண்டுவிட்டபோதினிலும்
நாற்று நடும் சகதியிலும்; நாதியற்ற சமுதாயம் நலம்பெறவே
ஆம்பல் மலர்ந்தபோதும்; ஆங்கொரு குயில் கூவும்போதும்
சோம்பல் முறித்தெழவே சொற்கடலைத் திறந்துவிட்டான்!

அடிமைத்தள நாட்டை ஆர்ப்பரித்தபோதும்
ஏற்றத்தாழ்வுகள் நம்மை எட்டிப் பார்த்தபோதும்
பெண்ணினத்தின் கொடுமைகள் பேயாட்டம் போட்டபோதும்
கூடவேயிருந்தவரின் கோணங்கித்தனத்தைச் சகித்துக்கொண்ட
கூடல்மாதேவி செல்லம்மாள் கொண்டிருந்த பொறுமையிலும்
கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்த கவிக்கோமான்!

கூடை கூடைகளாய்க் கவிதைகளைக்
கொட்டித் தீர்த்திட்ட கோட்டுடைக் கவிஞன்
விடுதலைக்குப் பரணிபாடிய வேங்கைப் புலவன்
பிறவிக் கவிஞனவன் பிரசவித்த பாடல்கள்
சொல்லோடும் பொருளோடும் சுதிசேர்த்து
அசைகூட்டி இசைத்தன; இசைகூட்டி அசைந்தன.

புதுக்கவிதைகளின் பிதாமகனே – உன்னைப்போல்
எங்களால் பாடமுடியவில்லை – காரணம்
வலியறியா தேசத்தில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருப்பதால்
வீரியமிக்க கவிதைகளை நாங்கள்
விளைவிக்க முடியாத விவசாயிகள் ஆகிவிட்டோம்!

– மா அன்பழகன்

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் பெருமைப்படுத்திய சாதனையாளர்கள்

- தமிழ் ஆர்வலர்
- ஆங்கிலத் திறனாய்வு
- மொழித் தொடர்பான இடையறா சேவைகள்
- ஔவை சிறப்பு பெற்ற அருங்குணத்தவர்
- மிகப் பெரிய பாரம்பரியப் பின்னணி
- சிரித்த முகம்
- அவர் தான் முனைவர்

# சித்ரா சங்கரன்

**பயணங்களுக்கிடையே நேரத்தோடு போராடி வரும் டாக்டர் சித்ரா சங்கரனுடன் பேட்டி காண நம் துணையாசிரியர் புஷ்பலதாவும் சற்று போராடவே வேண்டி இருந்தது. அலுவலக மற்றும் விடுமுறை காரணமாக அவரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கிடையே, அன்றாட நெருக்கடி நிகழ்வு களுக்கிடையே, நமக்காக நேரம் ஒதுக்கி தமிழ்மணியின் கேள்விகளுக்கெல்லாம் இன்முகத்துடன் பதில் தந்தார் சித்ரா சங்கரன். சுவைத் தகவல்கள் நிறைய உள்ளன.**

**– ஆசிரியர்**

**புஷ்பா:** சித்ரா தமிழ்மணியின் சார்பில் எங்கள் வாழ்த்துகளும், பாராட்டுகளும்.

**சித்ரா:** நன்றி புஷ்பா. அதேபோல் தமிழ்மணி வாசகர்களுக்கு என் வாழ்த்தும் வணக்கமும்.

**புஷ்பா:** டாக்டர் சித்ரா மிகப் பெரிய தமிழ்ப் பின்னணியைக் கொண்டவராக எங்கள் பார்வையில் தெரிகிறீர்கள். முதலில் அதைப் பற்றி கூற இயலுமா?

**சித்ரா:** என் தாத்தா நாவலர் சோமசுந்தரம் அவர்களை மனத்தில் கொண்டு கேட்கிறீர்கள் என நினைக்கிறேன். என் தாத்தா நாவலர் சோமசுந்தரம், 1879 முதல் 1959 வரை வாழ்ந்தவர். பாடல்கள், நூல்கள், ஆய்வுகள் நிறையச் செய்தவர். ஒரு காலத்தில் மதுரை மாவட்ட தீண்டாமை ஒழிப்பு இயக்கத் தலைவர். பாரதியின் நட்பு கிடைத்து, எட்டயபுரம் அரண்மனையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த புலவர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க நாவலரும், பாரதியோடு பாட்டமைத்து, ‘பாரதி’ என்ற பட்டம் பெற்றவர். இந்தியாவின் தேசிய போராட்டம் காரணமாக என் தாத்தா குடும்பத்தோடு சிறை சென்றனர். தூத்துக்குடியில்-மதுரையில் வழக்குத் தொழில் செய்த அவர் பின் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்றார். மொழிக்காகவும், நாட்டிற்காகவும் தன்னையும் தன் குடும்பத்தையும் அர்ப்பணித்த நாவலர் அவர்களை தாத்தாவாகப் பெற்றதற்கு நான் இன்றும் பெருமைப்படுகிறேன்.

**புஷ்பா:** உண்மைதான் சித்ரா. இப்போது உங்கள் தாயாரைப் பற்றி கொஞ்சம் கூறுங்களேன்.. அவரும் மருத்துவத் துறையில் மகத்தான சாதனை புரிந்தவர் ஆயிற்றே?

**சித்ரா:** என் தாயார் பற்றிய நினைவுகள் என் வாழ்வில் என்றுமே மறக்க முடியாதவை. என் தாயார் தான் எனக்கு ஒரு சரியான முன்மாதிரி.. மருத்துவம் கற்பதற்காகப் போராடி, அதன் மேற்படிப்பிற்காக என் தந்தையுடன் லண்டன் சென்று படித்துத் தேர்ந்து இந்தியா திரும்பியவர்...... என் பெற்றோர்கள் பல எல்லைகளைக் கடந்தவர்கள். 1960கள் என நினைக்கிறேன். அவர்கள் இருவரும் இந்திய மருத்துவத் துறையின் உயர்ந்த பதவிகளை ஏற்றனர். அந்தக் காலத்தில் பெண்கள் எளிதாக மருத்துவ உயர் பதவிகளைப் பெற இயலாது. ஆனால் என் தாயார் அத்தனை தடைகளையும் தாண்டி, மெட்ராஸ் மெடிகல் காலேஜின் முதல் பெண் தலைவராக, தமிழ் நாட்டின் மருத்துவக் கல்விக் குழுவின் முதல் பெண் இயக்குனராக வெல்லாம் செயலாற்றிப் பெண் இனத்திற்கே பெருமை சேர்த்தார். இவையன்னியில் தமிழ் நாட்டின் இரு மருத்துவக் கல்லூரிகளின் தலைமைப் பதவிகளை ஏற்றவர். என் தாயாரைப் பற்றிப் பெருமை கொள்ள எனக்கு நிறையவே உள்ளன. அவர் சாகும் தருவாயில், சுகாதாரத்திற்கான திட்டக் கமிஷனின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**புஷ்பா:** உங்கள் தாயார் பற்றிய கருத்துகள் உண்மையிலேயே பெருமைக்குரியவை.

**சித்ரா:** என் தாயாரிடம் நான் கற்ற பாடங்கள், பொது நல நோக்கங்கள், தொண்டார்வம் அனைத்துமே என் நெஞ்சில் இன்றும் நிழலாடுகின்றன. ஒரு பொறுப்பான இல்லத்தரசியாகவும், அதே நேரத்தில் பொது மக்களின் நலனில் அக்கறை காட்டும் பெண்மணியாகவும் திகழ்ந்து விளங்கிய என் தாயாரை என்னால் என்றுமே மறக்க முடியாது.

**புஷ்பா:** தாத்தா நாவலர் சோமசுந்தரம் மாபெரும் இலக்கியகர்த்தா. தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பற்பல ஆய்வுகள் நடத்தியவர். இவர்களிடம் நீங்கள் இளமையில் தமிழ் மொழியை எந்த அளவில் கற்க முடிந்தது?

**சித்ரா:** என் தாத்தாவின் காலத்தில் நாங்கள் மிகவும் சிறு பிள்ளைகள். என் பெற்றோர்கள் தான் எங்களை கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கப் பெரிதும் பாடுபட்டவர்கள். தமிழ் கலாச்சாரம், மொழி பற்றி எல்லாம் நிறைய எடுத்துச் சொன்னவர்கள். என் தந்தையார் நேரம் கிடைக்கும்போதெல்லாம் மதுரையில் உள்ள பாரதி பதிப்பக நிலையத்திற்கு அழைத்துச் சென்று நிறைய நூல்கள் வாங்கித் தந்தது பசுமையாக நினைவிருக்கிறது. படித்த நூல்கள் பற்றி பெற்றோர்களுடன் விவாதிக்கும் பழக்கமும் இருந்ததால், படிப்பில் என் ஆர்வம் கூடியது. இன்னொரு விஷயம் தெரியுமா? தினசரி ஒரு திருக்குறள் மனனம்

முனைவர் சித்ரா சங்கரன் அவர்களின் சிறப்பு

செய்து ஒப்பிக்கும் பழக்கத்தையும் என் பெற்றோர்கள் என் மீது திணித்திருந்தனர். அதன் காரணமாக நான் இன்றும் திருக்குறளை ரசித்துச் சுவைக்க முடிகிறது.

புஷ்பா: சித்ரா உங்கள் இளமைக் காலம், பள்ளிக் காலம், மற்ற அன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு எந்த அளவில் அமைந்தன?

சித்ரா: சிறு வயதிலிருந்தே, அவரவர் சொந்த முயற்சியாலேயே எதிலும் வெற்றி காண முடியும் என்ற அரிய கருத்தை அறிந்திருந்தேன். என்னை சுற்றி என் பெற்றோர்கள் கண்ட உழைப்பு நிறைந்த வெற்றிகளைக் கண்டபோது, நானும் உற்சாகத்துடன் படிப்பில் கவனம் காட்ட முடிந்தது.

புஷ்பா: இன்று நீங்கள் இந்த அளவுக்கு தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றிருப்பதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள்?

சித்ரா: என் தாயாரின் அறிவாற்றலை எண்ணும்போது, நிச்சயமாக நான் அந்த அளவுக்கு தமிழில் பெரிய புலமை பெற்றவளாக என்னை நினைக்கவில்லை. நான் இன்றும் தமிழ் கற்கும் ஒரு மாணவனாகவே கருதிக் கொள்கிறேன். தமிழ் இலக்கியங்களை ஆங்கில இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்வதில் எனக்கு அலாதி ஆசை உண்டு. புதிய கோணங்களில் தமிழ் இலக்கியங்களைக் காணும் அரிய வாய்ப்பை என் தமிழறிவு எனக்குத் தருவதாக நினைக்கிறேன்.

புஷ்பா: நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்... நீங்கள் உங்கள் குடும்பத்தோடு எந்த அளவுக்கு உறவாட முடிகிறது? நேரம் கிடைக்கிறதா?

சித்ரா:எங்கள் குழந்தைகள் சிறு வயதினராக இருந்தபோது, அவர்களுக்கு தமிழ்க் கலாச்சாரங்களைக் கற்றுக் கொடுக்க நாங்கள் தவறியதில்லை. தமிழில் பேசுவதை வலியுறுத்திய என் கணவர், குழந்தைகள் தமிழில் பேசத் தொடங்கினால், அதை தமிழிலேயே முடிக்கவேண்டும் என நிர்ப்பந்திப்பார். இள வயதுக் குழந்தைகளுடன் பெற்றோர்கள் செலவிடும் நேரம் மகத்தானது. இதுதான் நம் உறவைப் பலப்படுத்தும். இன்றும் என் பேரக்குழந்தைகளுடன் நான் போனில் பேசி மன மகிழ்கிறேன்..இது எங்களை மேலும் இணைக்கிறது.

புஷ்பா: ஔவை விருது கிடைத்தபோது உங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி?

சித்ரா: நான் லண்டனில் இருந்தபோது ஹரிகிருஷ்ணன் தொலைபேசியில் அழைத்து விருது பற்றி அறிவித்தார். நான் அதற்குத் தகுதி இல்லை என அவருடன் வாதிட்டேன். ஆனால் அவர் கேட்கவில்லை. அந்தப் பெருமையைத் தந்ததற்காக நன்றி சொல்கிறேன். அதன் தொடர்பில் என்னால் இயன்ற தமிழ்ப் பணிகளை செய்ய முயல்வேன்.

புஷ்பா: தமிழ்மணியின் முதல் இதழ் பார்த்திருப்பீர்கள். அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன ?

சித்ரா: மிகவும் பிடித்த இதழ். சமூகத்தை ஒன்றிணைக்கும் நோக்குடன் பல அமைப்புகளை இணைக்கும் பாங்கு பாராட்டுக்குரியது. இந்த நல்ல பணி தொடரட்டும்.

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் பெருமைப்படுத்திய சாதனையாளர்கள்

**நம் பெருமைக்குரிய கவிஞர் இக்பால் அவர்கள்,
அண்மையில் சிங்கப்பூர் அரசின் உயரிய கலாச்சார விருது
அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பெருமைக்குப்
பெருமை சேர்க்கும் இந்த விருதைப் பெற்ற கவிஞர்
இக்பால் அவர்களிடம் தமிழ்மணி வைத்த கேள்விகளும்,
அன்னார் தந்த பதில்களும் இதோ உங்கள் பார்வைக்கு**

# கவிஞர் இக்பால்

வணக்கம் கவிஞர் இக்பால் அவர்களே.
அரசின் கலாச்சார விருதினைப் பெற்ற தங்களுக்கு தமிழ்மணியின் வாழ்த்தும், பாராட்டுகளும்!

ராம்: கவிதை என்ற சொல்லின் உங்கள் பார்வையில் உட்பொருள் என்ன?

**இக்பால்: அழகிய , சுருங்கிய சொற்களில் உவமையும் ஓசை நயமும் கலந்து உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவது கவிதை.**

ராம்: இந்த பெருமைமிகு கலாச்சார விருதை நீங்கள் பெற்றது பற்றிய உங்கள் கருத்து?

**இக்பால்: அரசாங்க அங்கீகாரம் , மனநிறைவும் மகிழ்ச்சியும் தருகிறது.**

ராம்: இக்கால இளங் கவிஞர்களின் கவித்திறன் பற்றி உங்கள் பார்வை?

**இக்பால்: நம் இளங்கவிஞர்கள் செல்ல வேண்டிய தூரம் இன்னும் அதிகம் உள்ளது.**

ராம்: நீங்கள் உருவாக்கிய கவிதைகளில் உங்களையே மிகவும் கவர்ந்த கவிதை வரிகளைச் சொல்லுங்களேன்.

**இக்பால்: எனக்கு மிகவும் பிடித்த பல கவிதைகளில் தண்ணீர் என்ற கவிதையும் அடங்கும்**

ராம்: கலாச்சார விருதளித்து கவுரவிக்கும் சிங்கப்பூர் அரசின் கொள்கை எந்த விதங்களில் நம் கவிஞர்களை ஊக்குவிக்கும்?

**இக்பால்: நம் அரசின் கலாச்சார விருது மேன்மேலும் சிறந்த படைப்புகளைக் கொணர நம் கவிஞர்களை நிச்சயம் ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.**

ராம்: வளரும் கவிஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும், மற்றவர் சொல்லாத, அறிவுரை?

**இக்பால்: மற்றவர்கள் இதுவரை வளரும் கவிஞர்களுக்கு என்னென்ன அறிவுரைகள் சொல்லியிருக்கிறார்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது.**

**இளங்கவிஞர்கள் வளமான நம் பழந்தமிழ் இலக்கியங்களையும் நிச்சயம் படிக்க வேண்டும். கட்டாயமாக யாப்பிலக்கணப் பயிற்சியும் பெற வேண்டும். இன்று புதுக்கவிதையில் புகழ்பெற்று விளங்கும் முன்னணிக் கவிஞர்கள் பெரும்பாலோர், மரபுக் கவிதையில் தொடங்கிப் புதுக் கவிதைக்கு வந்தவர்களே.**

## தண்ணீர்

வெயிலின் வாய் உன்னை
விழுங்கி விட்டதாக
நினைத்துக் கொண்டிருந்தேன்..
மழையாக நீ
மண்ணுக்குத் திரும்பும் வரை

கடலுக்குள் ஆறாய்க் கலந்து நீ
களங்கப் பட்டு விட்டதாகக்
கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்..
ஓரக் கரையில் நீ
ஊற்றாகச் சுரக்கும் வரை

இறங்கிவர மட்டுமே உனக்குத் தெரியும் என்று
எண்ணிக் கொண்டிருந்தேன்...
ஆவியாக நீ
ஆகாயத்தில் ஏறும்வரை

உயிர்களை உண்டாக்கும்
உன்னைப் பொருளாகவே
உன்னைப் பாடிக் கொண்டிருந்தேன்..
மூழ்கிச் செத்தவர்களை நீ
முதுகில் சுமந்து காட்டும் வரை..

தண்ணீரே...
புற அழுக்கை மட்டுமே உன்னால்
போக்க முடியும் என்றிருந்தேன்......என்
சோக அழுக்கை
நீ கண்ணீராக வந்து
சுத்தம் செய்யும் வரை

– *கவிஞர் க து மு இக்பால்*

# தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், சிங்கப்பூர்

## ஒரு பார்வை

சிங்கப்பூரில், "தமிழைக் கற்கவும், அன்றாட வாழ்க்கையில் அதனைப் பயன்படுத்தவும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு, இந்தியப் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக் காப்பதையும் தலையாய நோக்கமாகக் கொண்டு தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது" என்ற கொள்கைப் பிரகடனத்தோடு 2-8-1980ல் துவங்கப்பட்டது தான் சிங்கப்பூர் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.

கொள்கை முழக்கம் செய்தவர் கழகத்தின் முதல் மேலாண்மைக் குழுத் தலைவரும் தேசிய தொழிற்சங்க காங்கிரசின் தலைமைச் செயலாளராகவும் பின்னாளில் சிங்கப்பூரின் அதிபராகவும் பதவிபுரிந்த மறைந்த திரு சி வி தேவன் நாயர் அவர்கள்.

### தொடங்கிய நோக்கமும் வரலாறும்

இதற்கு முன் 9-4-1977ல் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் சிங்கப்பூரில் தமிழ்மொழி மற்றும் கலாச்சாரம் குறித்த கருத்தரங்கில் உரையாற்றிய திரு தேவன் நாயர் "தமிழ்மொழி, இந்தியப் பண்பாடு இவற்றைக் கட்டிக்காக்க ஒரு வலுவான இயக்கம் தேவை" எனத் தெரிவித்திருந்தார்.

திரு தேவன் நாயர்

மேலும், "தமிழ் பேசும் பெற்றோர்களும் கல்வியாளர்களும் ஒன்று சேர்ந்து தமிழ்மொழியின் முன்னேற்றத்துக்காக ஓர் அமைப்பை உருவாக்குவார்களாயின், அது மிகவும் பயனுடையதாக அமையும். இது குறுகிய மொழிவெறி கொண்டதாக அமையாமல், தொன்றுதொட்டுவரும் இந்தியப் பண்பாட்டுச் செல்வங்கள், சீன, மலாய் மரபுகளிலிருந்து நாம் பெறக்கூடிய சிறந்த பண்பாட்டுக் கூறுகளுடன் இணைந்து நின்று வருங்காலச் சிங்கப்பூரை உருவாக்குவதற்கு உதவும் வகையில் அமையவேண்டும்" என்றும் தெரிவித்திருந்தார்.

### கழகம் துவங்கப்பட அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சி இதுதான்!

இதை ஒட்டி திரு சி வி தேவன் நாயர் தலைமையில் ஒரு முன்னிலைக் குழு அமைக்கப்பட்டு சட்டதிட்டங்கள் வகுத்து, அமைப்பை அதிகார பூர்வமாக பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

2-8-1980ல் அன்றைய துணைப் பிரதமர் திரு கோ கெங் சுவீ தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடந்த விழாவில் கழகம் அதிகாரப்பூர்வமாக துவக்க விழா கண்டது.

முதல் அறங்காவலர்குழுத் தலைவராகவும், செயலவைக் குழுத் தலைவராகவும் திரு தேவன் நாயர் பொறுப்பேற்றார். பேராயர் திரு டி ஆர் துரைசாமி, திரு டி ஏ அமீனுல்லா, திரு சூர் சிங் ஆகியோர் மற்ற அறங்காவலர்களாக பொறுப்பேற்றனர்.

தமிழை ஆட்சி மொழியாக தக்க வைத்துக்கொள்வது, இந்திய பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பது என்ற கழகத்தின் நோக்கங்களையும் வெளிப்படுத்தவே திரு சூர் சிங் நியமனம் பெற்றார்.

### கலாசார நடவடிக்கைகள்

இந்திய இசை, நடனம் போன்றவற்றில் தானே நேரடியாக ஈடுபடாமல் இவற்றில் ஏற்கெனவே முனைந்திருக்கும் அமைப்புகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

### தமிழ் துணைப்பாட வகுப்புகள்

70-களிலும் 80-களிலும் பெரும்பாலான பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படவில்லை. தமிழை இரண்டாம் மொழியாகப் பயில மாணவர்கள் வகுப்பு நேரத்திற்குப் பின் வேறு பள்ளிகளுக்குச் செல்ல வேண்டி இருந்தது. இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளில் தமிழ் முதல் மொழியாகவே கற்பிக்கப்பட்டு வந்ததால் இரண்டாம் மொழிக்கான பாடத்திட்டம் தமிழுக்கு முன்னோடியாக எங்குமே இல்லை. கல்வியாளர்களும் அறங்காவல குழு உறுப்பினருமான திரு வன்னியசிங்கம், பேராயர் துரைசாமி மற்றும் கழகத் தலைவர் திரு தேவன் நாயர் ஆகியோர் கல்வி அமைச்சிடம் இதற்கான பாடத் திட்டத்தை வகுக்க நிபுணர் குழுவின் நியமனத்திற்குப் பரிந்துரைத்தனர். இதன் அடிப்படையில் பாடத்திட்டம் பின்னர் உருவானது.

இந்திய மாணவரின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்கத்தில், படிப்பில் பின் தங்கிய மாணவர்களுக்குத் துணைப்பாட வகுப்புகளைக் கழகம் நடத்தத் தொடங்கியது. கழகத் தலைவர் திரு தேவன் நாயர் தன் பெரும் முயற்சியால் "ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்" நாளிதழில், சீனமொழியைப் போலவே, தமிழ், மலாய் மொழிகளில் வாரம் ஒரு முறை இரு மொழிப் பக்கம் வெளியிடச் செய்தார்.

### தொடக்ககால நோக்கங்கள்

தொடக்கத்தில் கழகத்தின் முக்கிய நோக்கங்கள்

இந்தியச் சிறுவர்களின் கல்வித்தர மேம்பாடு

தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றைப் பரப்புதல்

இந்தியப் பண்பாட்டினை வளர்த்தல்

## அறங்காவலர் குழுத் தலைவர் பேராசிரியர் எஸ். ஜெயகுமார்

பேராசிரியர்
திரு ஜெயகுமார்

திரு தேவன் நாயர் நாட்டின் அதிபர் ஆவதற்கு முன்னரே, பேராசிரியர் ஜெயகுமார் (அன்றைய துணைப் பிரதமராகவும் செயலாற்றியவர்) அறங்காவலர் குழுத் தலைவரானார், திரு சூர் சிங் துணைத்தலைவர் ஆனார். திரு நாயர் சிறிது காலத்திற்கு மட்டுமே செயலவைத் தலைவராக இருந்து விலகியபின், திரு வன்னிய சிங்கமும், பேராயர் துரைசாமியும் தலைவர் பதவியை ஒவ்வொரு முறை வகித்தனர். 1984 முதல் 1999 வரை திரு வை திருநாவுக்கரசு தலைவர் பதவி வகித்தார். அவரது தலைமையில் கழகம் பல அடிப்படையான, குறிப்பிடத்தக்க நற்பணிகளை செய்து முத்திரை பதித்தது. 1999ல் தலைவர் பதவியேற்ற திரு மு ஹரிகிருஷ்ணன் தலைமையில் கழகம் பல்வேறு புதுப்புது திட்டங்களோடும், நிகழ்ச்சிகளோடும் மிடுக்கோடு பீடு நடைபோட்டு வருகிறது.

### சிண்டா

சிண்டா (சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுக் கழகம்) அமைவதற்கு முன்பாகவே, கழகம் முன் வந்து இந்திய மாணவர்களின் கல்வி நிலையை ஆராய்ந்து அனைத்துப் புள்ளி விவரங்களுடன், பின் தங்குதல்களைக் களைய தனது பரிந்துரைகளை தேசியச் செயல் திட்டமாக பேராசிரியர் ஜெயகுமாரிடம் சமர்ப்பித்தது.

### "உங்கள் பிள்ளையால் முடியும்"

மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு பேராசிரியர் ஜெயகுமார் கழகத்தை நியமித்தார். பிள்ளைகளின் படிப்பில் பெற்றோர்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டினால் முன்னேற்றம் எளிதாகும் என்ற அடிப்படையில் கழகம் "உங்கள் பிள்ளையால் முடியும்" என்ற தலைப்பில் பெற்றோரை எட்டும் திட்டம் ஒன்றை வகுத்து நடத்தியது. தரம்பிரித்தல் என்னும் "ஸ்ட்ரீமிங்" முறை கண்டிப்பாக இருந்த அந்தக் காலக்கட்டத்தில், இந்திய மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இத்திட்டத்தின் மூலம் இந்தியப் பெற்றோர் பலர், கல்விமுறையைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளவும், பிள்ளைகளைப் படிப்பில் ஊக்குவிக்கவும் நல்ல ஒரு வாய்ப்பாக அமைந்தது.

### பாடத்திட்ட விளக்கக் கூட்டம்



பேராயர்
திரு டி ஆர் துரைசாமி

கழகம் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் சிங்கையில் அமுலில் இருக்கும் பாடத்திட்டத்தை விளக்கி, துணைக்கல்வி வசதிகள், "ஸ்ட்ரீமிங்" முறையினால் பிள்ளைகள் எதிர் நோக்கும் சவால்கள், அவர்களை ஊக்குவிக்கும் வழிகள், இவற்றை விவரமாகத் தெரியப்படுத்தியது. இது குறித்து கழகம் நடத்திய நிகழ்ச்சிகளுக்கு மாணவர்களும் பெற்றோர்களும் திரளாக வருகை தந்தது பள்ளி முதல்வர்களை வியப்பில் ஆழ்த்தியது.

பரவலாக நாட்டின் பல பகுதிகளிலும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அப்போதைய சிங்கப்பூர் இன்டர்நேஷனல் ஏர்லைன்ஸின் தலைவர் திரு ஜே ஒய் எம் பிள்ளை கழகத்தின் "பெற்றோரை எட்டும் திட்டத்தை" வெகுவாக பாராட்டினார். சிண்டா உருவானதும், இந்த திட்டத்தை தானே ஏற்க முன்வந்தது. கழகம் சிண்டாவுடன் சேர்ந்து நடத்தவும், தன்னால் இயன்ற அளவில் நிதி உதவி செய்யவும் இணங்கியது.

### நன்கொடை

சிண்டாவிற்கும் மற்ற கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் ஆண்டுதோறும் கழகம் நன்கொடை அளித்து தொடர்ந்து ஆதரித்து வருகிறது.

### சொல்லாக்கக் குழு

இந்த அறிவியல் தொழில்நுட்ப உலகில் புதுப்புது வரவுகளுக்கு ஏற்ப புதுப்புதுச் சொற்களும் உருவாக்கம் பெற்று வருகின்றன. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் நடைபெற்றுவரும் கலைச்சொல்லாக்கப் பணிகளை சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம் செய்ய முற்பட்டது. 15-3-1986ல் கழகத்தலைவரும் மொழிபெயர்ப்புத் துறையில் பல்லாண்டுக் கால அனுபவமும் முதிர்ச்சியும் பெற்ற தமிழறிஞருமான திரு வை திருநாவுக்கரசு அவர்களின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதன் விளைவாக இரண்டு சொல்லாக்க தொகுப்புகள் உருவாக்கப்பட்டன.

### குடும்ப தினம்

ஆரம்ப காலங்களில் திருக்குறள் போட்டிகளை குடும்ப தினத்தை மையமாக வைத்து கழகம் நடத்தியது. சிறுவர்களுக்கான திருக்குறள் போட்டிகள், ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல் மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கு குடும்ப தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கேளிக்கைக்காக பண்டைய தமிழரின் தற்காப்புக் கலையான சிலம்பாட்டம் போன்றவைகள் அங்கு நிகழ்த்திக் காட்டப்பட்டன. கயிறிழுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன. குடும்பப் பிணைப்பை ஏற்படுத்தவும், தமிழ்மொழி புழக்கத்தை குடும்ப சூழலில் அதிகமாக பயன்படுத்தவும் குடும்பதினம் உதவியது. சிங்கப்பூரிலுள்ள பல பூங்காக்களிலும் இந்நிகழ்வு நடந்தேறியது. இதே போன்ற நிகழ்ச்சிகளை மற்ற அமைப்புகள் நடத்த முற்பட்டதும் கழகம் இதைத் தொடராமல் புது நிகழ்ச்சிகளை நடத்த முனைந்தது.

### கழகத்தின் மற்ற ஆக்கக்கரமான பணிகள்

பொதுத் தேர்தலில் குழுத்தொகுதிகளுக்கு வழிவகுக்கும் மசோதா பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டபோது, இந்தியர்கள் "மலாய் அல்லாதோர்" என்ற பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டனர். தமிழ்மொழியின் நலனையும் சிங்கப்பூர் இந்திய மக்களின் நலனையும் உறுதிப்படுத்த கழகம் பாராளுமன்றச் சிறப்புக் குழுவினரிடம் சிங்கையின் மூன்றாம் பெரிய இனத்தவரான இந்தியர்களின் பிரதிநிதித்துவம் "இந்தியர்" என்ற தலைப்புடனேயே அமையவேண்டும் என்பதை 29-1-1988ல் எழுத்து மூலம் வலியுறுத்தியது. பின்னர், கழகத்தின் தலைவர் திரு அரசு, செயலாளர் திரு பழனிவேலு ஆகியோர் பாராளுமன்றச் சிறப்புக் குழுவின்முன் இருமுறை ஆஜராகி விவாதித்தனர். இந்த நிகழ்வுகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாயின.

நகல் மசோதாவில் “மலாய் இனத்தவருக்கும், ஏனைய சிறுபான்மையினருக்கும்”, பிரதி நிதித்துவம் அளிக்க விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. மலாய் இனம் தனியாகப் பெயர்

திரு வை திருநாவுக்கரசு

குறிக்கப்பட்டும் அவர்கள் பிரதிநிதித் துவத்திற்காகத் தனி விதிகள்

அமைக்கப்பட்டும் இருந்த நிலையில், இந்தியர்கள் பெயர் குறிப்பிடப்பட வில்லை.

## இந்தியர் பிரச்சனை

“மலாய்க்காரர் அல்லாத பிறர் சிறுபான்மையர்” பிரிவில் இந்தியர் என்று பெயர் குறிப்பிடபடாமல் இருந்தது. வரலாற்று பூர்வமாக, சிங்கப்பூரின் முப்பெரும் இனங்களுள் ஒன்றாக இந்தியர்கள் எப்பொழுதுமே அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். இந்த அங்கீகாரம் புதிய சட்டத்தில் இடம் பெறாதது குறித்து இந்தியர் பலர் கவலையும் கலக்கமும் அடைந்த நிலையில் கழகம் இப்பிரச்சினையை முன்னெடுத்துச் சென்றது.

கழகம் தலையிட்ட பின், முன்பு “மலாய்க்காரர் அல்லாத பிற சிறுபான்மையினர்” என்றிருந்த வாசகம் “இந்தியரும் ஏனைய சிறுபான்மையரும்” என்று திருத்தம் செய்யப்பட்டது. அதிபர் அங்கீகாரமும் கிடைத்து அது சட்டவடிவமும் பெற்றுவிட்டது.

- தேசியப் பல்கலைக்கழகத்திலும் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறை உருவாவதற்கு 1991-ம் ஆண்டிலேயே கழகம் கல்வி அமைச்சுக்கு கடிதம் எழுதியுள்ளது.
- “தொழிலாளர்கள் சட்ட விதிமுறைகளை” கழகம் மொழிபெயர்ப்புச் செய்துகொடுத்திருக்கிறது.
- மருந்து பாட்டில்களில் இடம்பெற்றிருக்கும் குறிப்புகளை (PSB-LABEL) கழகம் உற்பத்தித்திறன் மற்றும் தர நிர்ணயக் கழகத்திற்குப் பொதுவான எச்சரிக்கை குறிப்புகளுடன் மொழிபெயர்த்துத் தந்துள்ளது.
- லிட்டில்இந்தியாவில்“குப்பைபோடாதீர்கள்”அறிவிப்புகளும் தேசிய தொழிற் சங்க காங்கிரசின் பல மொழி பெயர்ப்புகளும் கழகம் செய்து கொடுத்தவையே.
- மேலும் எங்கெல்லாம் தமிழ் இல்லையோ அல்லது எழுதப்படாமல் விடுபட்டிருக்கிறதோ அங்கெல்லாம் தமிழ் இடம்பெற கழகம் முனைப்புடன் செயல்பட்டுவருகிறது.
- சமய நல்லிணக்கம் தொடர்பான கோட்பாடு ஒன்றை உருவாக்குவது குறித்த யோசனை முதன் முதலில் 2002-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தெரிவிக்கப்பட்டது. அன்றைய துணை அமைச்சர்களில் ஒருவரான திரு சான் சூ சென் தலைமையில் ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டு பின்னர் பல சமய அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றியது. இக்குழுவில் கழகம் முக்கிய அங்கம் வகித்தது. அதோடு இந்தக் கோட்பாடு தமிழில் மொழி பெயர்க்கப்படுவதில் கழகம் முக்கிய பங்காற்றியது. கோட்பாட்டு உறுதி மொழியின் தமிழாக்கத்தை இன்றும் இணையதளத்தில் காணலாம்.

## சமூக நற்பணிகளுக்குக் கழகத்தின் ஆதரவு

கழகம் நடத்தும் முக்கிய விழாக்கள் மற்றும் போட்டிகள், செயல்பாடுகளோடு மட்டும் தனது வட்டத்தை சுருக்கிக் கொள்ளாமல் உதவி நாடும் மற்ற அமைப்புகளுக்கும் ஆதரவளித்து வருகிறது. அந்த வகையில் 5-1-2002 தொடங்கி இரு நாட்கள் நடைபெற்ற “அனைத்துலக அரங்கில் தமிழ்” என்ற மாநாட்டில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைகழகத்தின் தமிழ் மன்றத்துடன் இணைந்து பணியாற்றியது.

மொழி - பண்பாடு போன்றவற்றை முன்னிருத்தி நடத்தப்பட்ட பிற அமைப்புகளின் நிகழ்ச்சிகளுக்குக் கழகம் நிதியுதவி அளித்து ஆதரவு வழங்கி வருகிறது.

தமிழவேள் கோ சாரங்கபாணி கல்வி அறநிதிக்கும் கழகம் நிதி ஆதரவு வழங்கியது.

குறிப்பிடத்தக்க மற்ற அமைப்புகள் நடத்தும் - அழைக்கும் நிகழ்ச்சிகளுக்கு கழகத்தின் சார்பில் தலைவர் அல்லது செயலவை உறுப்பினர்கள் கழகத்தைப் பிரதிநிதித்து தவறாது கலந்து கொள்வது வழக்கம்.

## கழகத்திற்குப் பெருமை சேர்த்த முப்பெரும் விழாக்கள்

சிங்கபூரிலுள்ள அனைத்து இந்திய அமைப்புகளும் ஒருங்கிணைந்து கொண்டாடிய தேசிய தின விருந்து நிகழ்ச்சியை 1998-ம் ஆண்டு கழகம் தலைமையேற்றுநடத்தியது.இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக அன்றைய சட்டம் மற்றும்வெளியுறவுஅமைச்சர்பேராசிரியர் எஸ் ஜெயகுமார் கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூர் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திரு மு ஹரிகிருஷ்ணன்

தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1998- ல் அதிகாரத்துவப் பயணம் மேற்கொண்டு சிங்கப்பூர் வந்தபோது சிங்கப்பூர் உள்ளரங்கில் நடைபெற்ற இலக்கியப் பேருரை நிகழ்ச்சியை சிறப்பாக முன்னின்று நடத்தியது.

கழகம் தொடங்கி 25 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடி மகிழவும் கழகத்தின் நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டும் வகையிலும் 2005- ல் வெள்ளி விழா விருந்து நிகழ்ச்சியை கழகம் நடத்தியது. “ராபிள்ஸ் டவுன் க்ளப்பில் நடைபெற்ற வெள்ளி விழா விருந்தில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் திரு தருமன் சண்முகரத்தினம் கலந்துகொண்டார்”.

## கலந்துரையாடல்

- ஊடகங்கள், நாளிதழ்கள் அவ்வப்போது கழகத்தின் கருத்துகளைக் கோருகின்றன. அரசாங்கம் நடத்தும் பல்வேறு கலந்துரையாடல் நிகழ்ச்சிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்களிலும் கழகம் பங்கேற்று பல ஆக்ககரமான கருத்துகளை முன்வைத்து வருகிறது.

## கழகத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்

1. எல்லா இனத்தினரின் முக்கிய பண்டிகைகளுக்கு தமிழ்முரசு நாளிதழில் வாழ்த்து விளம்பரங்களை வெளியிடுவது.
2. உறுப்பினர், முக்கிய தமிழினத்தவர் மறைந்தால், இரங்கல் செய்தி வெளியிடுவது.
3. முதன்முதலில் பட்டிமன்ற நிகழ்ச்சிகளைப் பல சமூக மன்றங்களில் நடத்தியது.
4. சிங்கப்பூரில் முதல் முதலாக 2001-ல் மதுரை பேரசிரியர் டாக்டர் ஞானசம்பந்தன் தலைமையில் வழக்காடு மன்ற நிகழ்ச்சியை அரங்கேற்றியது.
5. அரசாங்க நிதியரிக்கை (பட்ஜெட்) மற்றும் பல்வேறு வானொலி, தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் பங்கேற்றது.
6. சிங்கை வரும் தமிழ் நாட்டுப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளை அரங்கேற்றுவது.
7. தமிழ் பேசாதோருக்குப் பேச்சுத்தமிழ் வகுப்புகள் நடத்தியது.
8. ஆண்டுதோறும் வளர்தமிழ் இயக்கம் நடத்தும் தமிழ்மொழி விழாவில் இணைந்து பணியாற்றுவது.

அமைச்சர் நிலையில் பல கலந்துரையாடல்களை முன்னின்றும் நடத்தியுள்ளது. தேசிய நூலக வாரியமும், ஒலி 96.8ம் இணைந்து ஏற்பாடு செய்த "வாசிப்பை நேசிப்போம்" நிகழ்ச்சியில் கழகம் பங்கெடுத்தது. சிண்டாவில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் தலைவர் திரு ஹரிகிருஷ்ணன் "வெற்றி நிச்சயம்" என்ற புத்தகத்திலிருந்து வாசித்து விழாவைத் தொடங்கி வைத்தார். தரமான நூல்களை எழுதி வெளியிடும் எழுத்தாளர்களின் நல்ல நூல்களை வாங்கி ஆதரவு வழங்குவதை கழகம் வழக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ் முரசுடன் இணைந்து புதிர் போட்டிகள் பல நடத்தியுள்ளது. தற்போது தமிழ் முரசு வழங்கும் நல்லாசிரியர் விருதுக்கு ஆண்டுதோறும் ஆதரவு வழங்கி வருகிறது. மக்கள் கழக நற்பணிப் பேரவை நடத்தும் சொற்களம், சொற்சிலம்பம், குடும்ப தினம் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அமைப்பாகக் கழகம் திகழ்ந்து வருகிறது.

✤ ஒலி 96.8-டன் இணைந்து தமிழ் நாடகம், வசனம் எழுதும் போட்டிகளை கழகம் நடத்தியுள்ளது. நேரடி ஒலிபரப்பாகப் புதிர் அங்கமும் நடத்தப்பட்டுள்ளது. சிங்கப்பூர் பிரபலங்கள் வானொலியில் பேசும் "என்னைக் கவர்ந்த திருக்குறள்" எனும் நிகழ்ச்சியை நடத்தியுள்ளது. திரு சுகி சிவம் போன்ற தமிழறிஞர்களின் "வெற்றி நிச்சயம்" தன்முனைப்பு உரையை வானொலியில் கழகம் படைத்தது. வானொலியின் சமூக நேரம் நிகழ்ச்சிகளில் பங்கேற்றது.

✤ 2004-ம் ஆண்டு திருக்குறள் விழாத் தொடர்பில் பொது மக்களுக்காக எழுத்தாற்றல் போட்டியை கழகம் நடத்தியது. கழகம் அதன் செயல்பாடுகள் குறிப்பாக மாணவர்களிடம் கொண்டு செல்லும் வகையில் பல பட்டறைகளையும் கண்காட்சியையும் நடத்தியுள்ளது. 5-6-2003ல் ஆங்கிலோ-சீன தொடக்கப்பள்ளியில் "தமிழில் மேடைப்பேச்சு" என்ற மாதிரிக் கூட்டத்தையும் 29-6-2003ல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் "தொடர்புத் திறன்கள்" என்ற மாதிரிக் கூட்டத்தையும் மற்றும் தமிழில் விவாதத்திறன், விவாதமன்றம், சொல்வேந்தர் 2003 ஆகிய நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளது. கழகம், சிங்கையில் உள்ள தமிழ்ப் பேச்சாளர் மன்றங்கள் வளர்வதில் பெரும் அக்கறை காட்டி வருகிறது. பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் இணையத்தளம் வடிவமைக்கும் போட்டியை வளர்தமிழ் இயக்கம் மற்றும் சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கத்துடன் இணைந்து கழகம் நடத்தியது. இப்போட்டி சிங்கப்பூரிலேயே முதல் முறையாக நடத்தப்பட்டது.

✤ இந்து அறக்கட்டளை வாரியம் மற்றும் மோல்மின் சமூக மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து சிராங்கூன் ரோடு - சிராங்கூன் பிளாசா எதிரேயுள்ள திடலில் தீபாவளிச் சந்தையை ஆண்டுதோறும் கழகம் நடத்திவருகிறது.

### இறுதியாக

தொலைநோக்கு மற்றும் பரந்த மனப்பான்மையுடன் தமிழ் மொழி, பண்பாடு மற்றும் ஒட்டுமொத்த இந்திய சமூதாயத்தின் நன்மைக்காகப் பாடுபடும் அமைப்பு தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்.

தனது பல்வேறு உயர்ந்த குறிக்கோள்கள் வெற்றியுடன் நிறைவேற தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் அனைவரின் நல்லாசிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

34 ஆண்டுகால வரலாற்றில் கழகம் தடம் பதித்த ஆக்கப்பணிகள் கலாச்சார - தமிழ்ப் பணிகள் பலப்பல. குடியரசில் சாதனை சரித்திரம் படைத்துவரும் முன்னணி தமிழ் அமைப்பு தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் என்று கூறினால் அது மிகையல்ல. தற்போது கழகம் ஆண்டுதோறும் கீழ்கண்ட நிகழ்ச்சிகளை கொண்டாடிவருகிறது:

1. திருக்குறள் விழா
2. பாரதியார் விழா
3. ஔவையார் விழா
4. நீரிழிவு நோய் மருத்துவ முகாம்
5. இரத்ததான முகாம்
6. பேச்சாளர் மன்ற மாதாந்திர நிகழ்ச்சிகள்
7. அனைத்துலக பேச்சாளர் மன்ற போட்டிகள்
8. தொண்டூழியர் தினம்
9. இந்திய புத்தாண்டு கொண்டாட்டம்
10. பொங்கல் திருவிழா

# ஆனந்த பவன்
## சைவம்

since 1924

# ANANDA BHAVAN
## Vegetarian

உங்கள் இல்லத்தின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் நாங்கள் சிறந்த முறையில் என்றும் மாறாத தரக்கொள்கையுடன் உணவு சேவை வழங்கி வருவதில் பெருமைகொள்கிறோம்.

We proud to be endorsed as caterers of choice by many elegant venues, we bring you our heritage of meticulous & creative planning, exquisite cuisine and exemplary service.

**Our Pro-health Values**
No MSG
No Trans Fat
No Additives & Artificial Preservatives
No Re Use of Cooking Oil

**எங்களது சிறப்புகள்**
செயற்கைச் சுவையூட்டிகள் (MSG) இல்லை
செயற்கைக் கொழுப்பு இல்லை
வேதிப்பொருட்கள் கலப்பு இல்லை
சமையல் எண்ணெய் மறு பயனீடு இல்லை

பாரம்பரியம் - புதுமை - தரம் - நம்பிக்கை - Tradition - Creative - Quality - Trust

FOR
ONLINE ORDER / HOME DELIVERY / CATERING NEEDS
CALL US @ 62 97 95 22 / 62 95 95 95
OUR CATERING HOSTS WILL ASSIST YOU.

*Visit our Cyber outlet at*
***www.anandabhavan.com***

**Function Hall Available**

*Visit our Cyber outlet at*
*www.anandabhavan.com*

**Branches:**
- 221, Selegie Road
- 58, Serangoon Road
- Blk 663, Buffalo Road, #01-10
- 95, Syed Alwi Road - 24 Hrs
- Changi Airport, Terminal 2, Level 3 (Unit 036-056) - 24 Hrs
- No.6 Changi Business Park Ave 1, #01-29 UE Biz Hub East

# தமிழ் மின்மரபுடைமைத் திட்டம் பொதுமக்களை பங்கு பெற வைக்கும் நிதி திரட்டும் முயற்சி!

சிங்கப்பூர் எழுத்தாளர்களின் தமிழ் நூல்களை நிரந்திர மின்முறையில் எதிர் காலச் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் நாட்டின் மிகப் பெரிய–அரிய முயற்சியில் ஈடுபட்டு, பல கட்டங்களை நாம் தாண்டி முன்னேறி வரும் செய்தி வாசகர்களுக்கு முன்பே தெரிந்த செய்தியே! நூல் தேர்ந்தெடுப்பு, நூல்களுக்கு சட்ட ரீதியாக ஒப்புதல் பெறுவது, அத்தகைய நூல்களை தொழில் முறை நுணுக்கத்துடன் அச்சடிப்பது, அவற்றைத் திருத்துவது போன்ற பல கடுமையான செயல்முறைத் திட்டங்களை கட்டம் கட்டமாக பல நூறு தொண்டூழியர்களின் உதவியுடன் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

“தேசிய நூலக வாரியம், மரபுடமைக் கழகம், புத்தக மேம்பாட்டுக் கழகம் போன்ற அமைப்புகளைச் சார்ந்தவர்களும், நிர்வாகக் குழுவினரும் இதற்கான பணிகளை முன்னின்று முழு மூச்சுடன் நடத்தினாலும், தமிழ் எழுத்தாளர்கள் – தமிழார்வலர்கள் பல்லோர் தந்துவரும் ஒத்துழைப்பு எங்களை பிரமிக்க வைக்கிறது” என்கிறார், இத்திட்டத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு.அருண் மகிழ்நன்.

வருகிற ஆகஸ்ட் மாத ஐம்பதாவது தேசிய தினத்தன்று, மக்கள் பயனீட்டிற்காக அரசாங்கத்திடம் அர்ப்பணிக்கப்படும் இத்திட்டத்தின் செலவினங் களை அரசே ஏற்றுக் கொண்டாலும், நம் தமிழ் மக்களின் பங்கையும் உணர்த்துவதற்காக பொது மக்களிடம் ஒரு நிதி திரட்டும் பணியில் இத் திட்டக் குழு ஈடுபட்டிருக்கிறது. இதில் நீங்கள் நேரடியாகப் பங்கு பெறலாம் – உங்கள் நண்பர்களை – குழந்தைகளை – மாணவர்களை பங்கு பெறச் செய்யலாம். அதற்கான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. நம் நாட்டின் பெருமையை, நம் தமிழ் மக்களின் எழுத்துப் பணியை, எதிர் காலப் பரம்பரையினர் பலனடைவதை உறுதி செய்ய இந்த நிதி திரட்டலில் உங்கள் பங்கை உடன் தவறாமல் செய்யுங்கள்.

# தமிழ் மின்மரபுடைமைத் திட்டநிதி
# வழக்கமாகக் கேட்கப்படும் கேள்விகள்

**1. தமிழ் மின்மரபுடைமைத் திட்ட (த.மி.தி.) நிதி எதைப் பற்றியது ?**

தமிழ் மின்மரபுடைமைத் திட்டத்திற்கு நன்கொடை திரட்டுவதற்காக இந்த நிதி தொடங்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தொடர்பான சமூக முயற்சிகளுக்கு ஆதரவளிக்க இந்நிதி பயன்படுத்தப்படும். உதாரணத்திற்கு, சேகரிக்கப்பட்ட நூல்களுக்குக் குறிப்புரை எழுதுவது, மின்மயமாக்கப்பட்ட நூலை மூலத்தோடு ஒப்பிடுவது, நூலாசிரியர் களிடமிருந்து உரிமைகள் பெறுவது, கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிப்பது போன்றவை. இந்த நிதியைத் தேசிய நூலக வாரியம் நிர்வகிக்கத் த.மி.தி குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த நிதியைத் தொடங்கி வைக்கத் த.மி.தி குழுவிற்குத் தேசிய நூலக வாரியம் உதவியிருக்கிறது.

**2. த.மி.தி நிதிக்கு நான் எவ்வாறு நன்கொடை வழங்கமுடியும் ?**

த.மி.தி நிதிக்கு நீங்கள் காசோலை வழியாகவோ கடன்பற்று அட்டை வழியாகவோ நன்கொடை வழங்கலாம். [நீங்கள் த.மி.தி தொண்டராகவோ மின்மயமாக்கப்படும் நூல்களின் ஆசிரியராகவோ இருப்பீர்களேயானால், நிதி தர அவசியமில்லை. நீங்கள் ஏற்கனவே தந்து வரும் ஆதரவு போதுமானது. நன்றி.]

**3. நன்கொடையை நான் எவ்வாறு வழங்குவது ?**

காசோலைகள் “National Library Board” என்னும் பெயருக்கு எழுதப்பட வேண்டும். அன்புகூர்ந்து நன்கொடைப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து அதனை நிரப்புங்கள்.

காசோலையின் பின்புறத்தில் “Tamil Digital Heritage Project” என்று குறிப்பிடுங்கள். பூர்த்தி செய்த படிவத்தையும் காசோலையையும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:

**National Library Board**
**100 Victoria Street**
***#14-01 National Library Building Singapore 188064***
***Attn: Catherine Lim/ Fion Fan, NLB Finance***

கடன்பற்று அட்டை வழியாகவும் நன்கொடை வழங்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

நன்கொடை, அர்த்தமுள்ளதாகவும் பயன்மிக்கதாகவும் அமையும் பொருட்டு, பெரியவர்களுக்கு 50 வெள்ளியும் மாணவர்களுக்கு 2 வெள்ளியும் குறைந்தபட்சத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நன்கொடை காசோலை அல்லது கடன்பற்று அட்டை மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**4. நான் வழங்கும் நன்கொடைக்கு வரிக்கழிவு கிடைக்குமா ?**

த.மி.தி நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வரிக் கழிவு கிடைக்காது.

**5. எனது நன்கொடை எவ்வாறு பதிவு செய்யப்படும் ?**

த.மி.தி குழு உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கும். மேலும், உங்கள் பெயர் www.singaporetamil.sg என்னும் த.மி.தி திட்ட இணையப் பக்கத்தில் உள்ள நன்கொடையாளர்களின் பெயர்ப் பட்டியலில் இடம்பெறும்.

**6. நான் மேல் விவரங்கள் பெற யாரைத் தொடர்புகொள்ளலாம் ?**

மேல் விவரங்களுக்குத் திருமதி மகாதேவி பாலசுந்தரத்தை
devibt@gmail.com
என்னும் மின்னஞ்சல்வழி தொடர்புகொள்ளலாம்.

# எழுத்துத்தமிழ்

## தவறுகளைத் தவிர்ப்பது எப்படி?

கதை, கவிதை, கட்டுரை என எழுதுபவர்களுக்கு அதன் அடிப்படைகளும் தெரிந்திருக்க வேண்டும். இங்கே தவறை தவிர்க்க சில ஆலோசனைகள்!!

இந்தத் தொடரில் நான் எழுதுவது பிழை இல்லாமல் எழுத முற்படும் சாதாரண தமிழ் உணர்வாளர்க்குச் சில எளிய வழிமுறையைத் தெரிவிப்பதுதான். 37 ஆண்டுகாலம் தமிழாசிரியராக மாணவர்களோடு பழகிய அனுபவத்தில் நான் அறிந்தவரை என் கருத்தை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இது நன்னூல் மற்றும் தொல்காப்பியத்தின் முழுமை என்று எண்ணவேண்டா.

தமிழ்மொழிப் பண்பாட்டுக்கழகம் வெளியிடும் 'தமிழ்மணி' காலாண்டிதழுக்கு, எளிய முறையில் நகைச்சுவை ததும்பப் பிழையின்றி தமிழ் எழுதுவது குறித்து எழுதப் பணித்தார் அதன் ஆசிரியர் திரு ஏ.பி.ராமன். நகைச்சுவையோடு பேசலாம், எழுதுவது எளிதல்ல என்றாலும், முயற்சி செய்யலாம் என்று நினைக்கிறேன். பேசும்போது எழுத்துப் பிழை வராது; வந்தாலும் கேட்பவருக்குப் புரியாது; புரிந்தாலும் சாமர்த்தியமாக சமாளித்துவிடலாம். எழுதும்போது தான் நமக்குப் பயம் வரும்; பயம் வந்தால் எழுதவே வராது.

உதாரணமாக சிறியது பெரியது; இதில் நமக்குப் பிரச்சனை ரி, றி தான். இதை எப்படி நினைவில் கொள்வது? சின்னதுக்கு பெரிய 'றி' போடு, பெருசுக்கு சின்ன 'ரி' போடு என்று சாதாரணமாக எளிமைப்படுத்தி நினைவில் கொள்ள வேண்டும். எழுதும் போது சற்று கவனமாக இருக்க வேண்டும். சிலவற்றைச் சேர்த்து எழுத வேண்டும். சிலவற்றைப் பிரித்து எழுத வேண்டும். எழுதிப் பழகினால் இது சர்வ சாதாரணமாகிவிடும்.

இது சற்று அந்தக்கால ஜோக்குதான்! அந்தணர்கள் சாப்பிடும் இடம் என்று போர்டு வைத்த காலம் இருந்தது. அந்தணர்கள் என்பதைச் சேர்த்து எழுத வேண்டும். இதைப் பிரித்து எழுதினால் அந்தணர் கள் சாப்பிடும் இடம் என்று மாறுபடும்.

குமரன் வீட்டிலிருந்துப் புறப்பட்டான் என்று எழுதும்போது வீட்டிலிருந்து என்னும் சொல்லை வீட்டில் இருந்து என்று பிரித்து எழுதினால், வீட்டில் தங்கி விட்டுப் புறப்பட்டான் என்று பொருள்படும்.

எங்கோ மணம் வீசுகிறது என்ற தொடரில் எங்கேயோ வாசனை வீசுகிறது என்று இதைப் பிரித்து எங் கோமணம் வீசுகிறது என்று எழுதினால் பொருள் என்னவாகும் என யோசித்துப் பாருங்கள்.

எனவே எழுதும் போது கவனம் தேவை. பொதுவாக நமக்கு வரும் பிரச்சனை க்ச்த்ப் என்ற ஒற்றெழுத்தை எங்கு போடுவது, எங்கு விடுவது என்பனதாம். ஒரு சில இடங்களில் ஒற்றெழுத்து இல்லாவிட்டாலும் பொருள் மாறுபடாது. சில இடங்களில் பொருள் மாறுபடும்.

எங்கு சென்றான் இங்கு 'ச்' போட்டுத்தான் எழுத வேண்டும், எங்குச் சென்றான். 'ச்' போடாமல் எழுதினால் இலக்கணப் பிழை, அவ்வாறு எழுதக்கூடாது. பல இடங்களில் ஒற்றெழுத்துப் போடாமல் எழுதினால் பொருளே மாறிவிடும். முக்கியச் செய்தி 'ச்' போடாமல் எழுதினால் முக்கின செய்தி என்று பொருள்படும். ஆகவே ஒற்றெழுத்துப் போடுவது என்பது மிகவும் முக்கியச் செய்தியாகும். சிலருக்கு முக்கிய செய்தியாகும்.

எந்த இடங்களில் இந்த வல்லொற்றுகள் மிகும் என்பதைப் பார்ப்போம். க்,ச்,த்,ப் இந்த நான்கு எழுத்துக்களும் படுத்தும் பாடு இருக்கிறதே, சொல்லில் அடங்காது. அ, இ, எ இந்த மூன்று எழுத்துக்களுக்குப் பின் ஒற்று மிகும்.

| | | |
|---|---|---|
| அ + காடு | = | அக்காடு |
| அ + சக்கரம் | = | அச்சக்கரம் |
| அ + தெரு | = | அத்தெரு |
| அ + பாடம் | = | அப்பாடம் |
| இ + கூடை | = | இக்கூடை |
| இ + சாதனை | = | இச்சாதனை |
| இ + தேங்காய் | = | இத்தேங்காய் |
| இ + பக்கம் | = | இப்பக்கம் |
| எ + கோட்டை | = | எக்கோட்டை |
| எ + சோதனை | = | எச்சோதனை |
| எ + திருடன் | = | எத்திருடன் |
| எ + பீடம் | = | எப்பீடம் |

இதுவரை ஒரு எழுத்தில் வல்லெழுத்து மிகும் இடம் பார்த்தோம். இதை மனதில் கொண்டால் இதுபோல் வரும் சொற்களைப் பிழை இல்லாமல் எழுதலாம்.

அந்த, இந்த, எந்த

| | | | | |
|---|---|---|---|---|
| அந்த | + | காடு | = | அந்தக் காடு |
| இந்த | + | சன்னல் | = | இந்தச் சன்னல் |
| எந்த | + | பெட்டி | = | எந்தப் பெட்டி |

அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு

| | | | | |
|---|---|---|---|---|
| அங்கு | + | தொலைந்து | = | அங்குத் தொலைந்தது |
| இங்கு | + | கண்டேன் | = | இங்குக் கண்டேன் |
| எங்கு | + | போனான் | = | எங்குப் போனான் |
| ஆங்கு | + | பாடினான் | = | ஆங்குப் பாடினான் |
| ஈங்கு | + | பார் | = | ஈங்குப் பார் |
| யாங்கு | + | பிரிந்தான் | = | யாங்குப் பிரிந்தான் |
| யாண்டு | + | கொடுத்தான் | = | யாண்டுக் கொடுத்தான் |

அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்களின் பின் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அப்படி | + | கேள் | = | அப்படிக் கேள் |
| இப்படி | + | செய் | = | இப்படிச் செய் |
| எப்படி | + | கேட்பாய் | = | எப்படிக் கேட்பாய் |

அதற்கு, இதற்கு, எதற்கு என்பவற்றின் பின் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அதற்கு | + | காரணம் | = | அதற்குக் காரணம் |
| இதற்கு | + | செய் | = | இதற்குச் செய் |
| எதற்கு | + | தருவான் | = | எதற்குத் தருவான் |

எட்டு, பத்து என்பனவற்றில் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | + | கோவில்கள் | = | எட்டுக் கோவில்கள் |
| பத்து | + | தலைகள் | = | பத்துத் தலைகள் |

(தொடர்ந்து வல்லெழுத்து மிகா இடங்களைப் பார்ப்போம்.)

**– புலவர் மு சந்திரசேகரன் எம். ஏ., எம் எட்.,**

# கவிதைகள்

## மழையே...

– ராஜூ ரமேஷ்

எத்தனை வயதானாலும்
உன்னை எனக்குப் பிடிக்கும்!
உன் அறிவிக்கப்படாத
ஒவ்வொரு வருகையும்
எனக்கு இன்ப அதிர்ச்சிதான்!
உன்னுடன் கலந்திட ஆசைதான்!
ஊர் பார்க்குமே என்ற நாணத்தால்
சாளரம்வழி கைநீட்டி
குறைந்தபட்சத் தீண்டுதலோடு
குதூகலம் அடைகிறேன்!
என்
மாலைநேர தேநீரை
மேலும் அர்த்தமுள்ளதாக்கும்
மழையே
நீ கிளறுவது
மண்ணை மட்டும் அல்ல
என்னையும்தான் !

## இன்றைய காதல்

–கோபால் கண்ணன்

குளம், ஓடை, அருவி
ஆறு, நதி, கடல்
மண், மலை, வனம்
மரம், மலர், காற்று
வானம், முகில், மழை
இரவு, நிலா, விண்மீன்... என
இயற்கை இயற்கையாய் இருந்தது
கண்பேச்சு புன்சிரிப்பு
நாணம் கால்விரல் கோலம்
தவிப்பு காத்திருப்பு... என
அனைத்திலும் மனம் சுவை கண்டிருந்தது
புறா கிளி தோழி என
உயிருள்ளவை துணையாகவும்
தூதுவர்களாகவும் இருந்தன
காதல்
அமுது சுரந்தபடி இருந்தது
காலம்
இயற்கையைச் சிதைத்து
செயற்கைக்கோலம் பூண்டது
மனித மனம்
உயிருள்ளவைத் தவிர்த்து
ஜடக்கருவிகளையே துணையாகவும்
தூதுவர்களாகவும் கொண்டிருக்கின்றன
காதல்
விஷம் அருந்திக் கொண்டிருக்கிறது

## கை நீட்டி...!

– பனசை நடராஜன்

அருகாமை மட்டுமல்ல,
வருவாயும் தேவையென்பதால்
சமாதானமாகிக் காத்திருக்கின்றன
உறவுகள்...

சவாலான இரட்டைப்
பாதைப் பயணத்தால்
தவிர்க்க முடிவதில்லை
தாமதங்களை...

முடிவின்றி தொடரும்
இலக்கை நோக்கிய
தொலைதூர ஓட்டத்தால்
இயந்திரமாகிப் போனாலும்,

இணையம் வழியாக
கணினித் திரையில்
கைநீட்டி அழைக்கும்
குழந்தையைப்
பார்க்கும் போது மட்டும்
உயிர்த்தெழுகிறது மனசு..!!!

## பிஞ்சுக் கடவுள்கள்

– சி. கருணாகரசு

புரிந்து கொள்ளுங்கள்
குழந்தைகள்தான்
புன்னகையின் விளைநிலங்கள்.
நாளைய உலகின்
நம்பிக்கை ஒளிச்சுடர்கள்
இவர்கள்தான்,
பகையைப் பட்டென மறந்து
கைகோர்த்துக் கொள்ளும் கவிதைகள்.
நெஞ்சில்
வஞ்சம் முளைக்காது வாழும்
பிஞ்சுக் கடவுள்கள்.
குரோதம் ...
குடிகொள்ள மறுக்கும் இந்த
குழந்தைகளின் மனமே
கோயில்கள்.
இவர்கள்தான்
மகிழ்ச்சிக்கு நுழைவாயில்
இவர்கள் நம்மிடம்
கற்பது அறிவை.
இவர்கள் நமக்கு
கற்பிப்பது அன்பை.
அன்பைச் சுமந்த மனதோடு ...
அவர்களை வாழ்த்துவோம் மகிழ்வோடு...

## அந்தப் பார்வை

– மா. அன்பழகன்

எத்தனையோ பேர்
என்னைப் பார்க்கிறார்கள்
எத்தனையோ பேரை
நானும் பார்க்கிறேன்

அன்று
அவன் என்னைப் பார்த்தான்
நான்அவனைப் பார்த்தேன்

அன்றுதான்
வீட்டிற்குச் சென்று
என்னை நான் பார்த்தேன்
கண்ணாடியில்

இப்போதெல்லாம்
கழிவறை குளியலறையில்
செலவாகும் நேரத்தைவிட
கண்ணாடிமுன் செலவாகிறது
அதிக நேரம்.

## சேரிகள் இல்லா நாடு

– நா. ஆண்டியப்பன்

சீர்வளரும் சிங்கப்பூரில்
சிறப்பான இடங்களுண்டு
வேர்விட்டு வளர்கின்ற
விருட்சங்கள் நிறைய உண்டு
ஊர்விட்டு ஊர்வந்து
உழைக்கின்ற மக்களுண்டு
பேர்பேற்ற கலைஞரெல்லாம்
பெருமைசொல்ல வருவதுண்டு!

நீர்வளம் இல்லையென்பார்
நிலவளம் இல்லையென்பார்
கார்வளம் பொழிகின்ற
கருணையை மறந்துபோனார்
ஊர்வலம் நடத்தியிங்கே
உருப்படா முழக்கமிடும்
போர்வழிகள் இல்லாநாடு
பெருமையன்றோ சிங்கைக்கு!

சட்டத்தின் ஆட்சியிங்கே
சரியாக நடக்கின்றது
திட்டங்கள் யாவுமிங்கே
தெளிவாய் முடிகின்றது
பட்டங்கள் பெற்றோரெல்லாம்
பாங்காக உழைக்கின்றார்
கட்டங்கட்ட மாய்நாம்
கச்சிதமாய் வளர்கின்றோம்.

சரித்திரங்கள் படைப்பதற்குச்
சாதனைகள் புரிந்திட்டோம்
தரித்திரத்தை மாற்றுதற்குத்
தன்முனைப்பாய் உழைத்திட்டோம்
பூரிக்கும் நெஞ்சத்தோடு
பொன்விழா காணுகின்றோம்
சேரிகள் இல்லாநாடாய்
சிறப்புடன் உயர்ந்துவிட்டோம்!

## நீ...

– இன்பா

முக்கால் கோப்பை
இரவு மதுவை
அருந்திவிட்ட
மயக்கத்தில் நான்...

நீண்டு போன நினைவுகள்
இன்னும் பயணித்துக்கொண்டே
இருக்கின்றன அந்த
நிலாவோடு சேர்ந்து...

நான்
கையசைத்துக் கூப்பிடும்
தூரத்தில் நிலா,
ஆனால் நீ?

என் தூக்கத்தைப் பறித்த
உன்னைத் துரத்திவிட்டு
சூரியனை எழுப்ப
தயாராகிறேன்...

## பாத யாத்திரை

– க.து.மு.இக்பால்

என் பாதங்களே
இன்னும் எத்தனை
ஆண்டுகள்
இந்தப் பயணம் ?

சுமை தாளாமல்
என்னை எங்கே
இறக்கி வைக்கப் போகிறீர்கள்
?

கால்களே
உங்களுக்குச் செய்யும்
கைம்மாறு எதுவோ ?

ஒருநாள்
உங்களைத் தோளில் சுமந்து
என் நன்றியைச் சொல்ல
என் தோழர்கள் வருவார்கள்

# கவிதைகள்

## தமிழ்மொழியின் இன்றைய நிலை

–காசாங்காடு அமிர்தலிங்கம்

அமுதென்றும் உயிரென்றும் அகிலத்தின் மூத்தமொழி
தமிழென்றும் தாயென்றும் இகழ்வாரைக் கண்டாலோ
உமிழென்றும் உயர்வான இலக்குள்ள ஞானத்தாலே
திமிருள்ள மொழியென்று தெளிவுசொல்லி, ஒடுகின்ற
குருதிக்குள் ஏற்றிவைத்த கூர்த்தமிழை இக்காலத்தில்
கருத்திற்குள் ஏற்காமல் கவியெழுதப் புனைவெழுதக்
களவாண்டு பிறமொழியைக் கலக்கின்றார் ஐயோவந்தோ!
பலவாண்டு முயற்சிகளும் பாழாமோ வீணேதானோ!!

புள்ளிவைத்த எழுத்தொற்று புணர்ச்சிவிதி யிலக்கணங்கள்
தள்ளிவைத்து எழுதுகின்றார் பேசுகின்றார் பாவமந்தப்
பள்ளிவைத்த நாள்முதலாய் பாலகர்க்குப் பாடந்தன்னை
சொல்லிவைத்த ஆசானும் சுழலாநாக் கொண்டார்தானோ!

காந்திதனைக் கொன்றவர்க்குக் கற்சிலையே நியாயமென்பார்
மாந்தியவர் மயக்கமற மதிசொன்ன பெரியார்சொல்
ஏந்தியவர் தமிழினத்தின் எதிரியென்பார், இரந்துண்போர்
வாந்தியெனப் போய்விட்ட வண்டமிழும் சரியேதானோ!

## எதற்காக கவியெழுதிக் குவிக்க வேண்டும்?

– இராம. வயிரவன்

ஏனிந்தப் பூவுலகில் பிறக்க வேண்டும்?
எதற்காக கவியெழுதிக் குவிக்க வேண்டும்?
தானியங்கி எந்திரமாய் ஆனோம் நாமே?
தமிழின்மேல் இனிமேலும் பற்றும் உண்டோ?
எண்ணத்திலே எள்ளளவும் மாற்றமில்லை; சின்னக்
கிண்ணத்திலே தவளைகளாய் ஆனோம் நாமே?
வண்ணமிகு புதுமைகளை வார்த்தோ மில்லை
வானமே எல்லையெனச் சொல்லித் திரிவோம்?

அறிவியலால் வரும்துன்பம் கூடிப் போச்சு
அதன்வழியே நாம்நடக்கப் பழகிப் போனோம்
புரியாத மூடர்களாய் மாறிப் போனோம்
புத்தியிலே உரைக்காமல் பதராய்ப் போனோம்!
அடையாளம் தொலைக்கின்ற நிலையும் ஆச்சு
அதுதவிர்க்க யாதொன்றும் செய்தோம் இல்லை!
படைதிரண்டு வந்தாலும் பயனேயில்லை – இனிய
பைந்தமிழைத் தொலைத்தாலே ரொம்பத் தொல்லை!

## வாடகை வண்டி ஓட்டுநர்

– தாம் சண்முகம்

அசையா நிலையிலும்
அசராதகால்கள்
உருண்டோடும் சாலையில்
உறங்கா விழிகள்
பயணிகள் இருக்கும்வரை
பசியாற நேரமில்லை
பலநேரம்
அவசரத்திற்கு நிறுத்தவும்
அவகாசம் ஏதுமில்லை
போக்குவரத்து நெரிசல்
மனதிற்குள்ளும்
விபத்துக்களின் விளைவு
வாழ்க்கை முழுதும்
ஓட்டுவது வாடகை வாகனம்
உள்ளிருப்பவர்கள் என் சொந்தம்
உயிர்களுக்கு ஓட்டுனர்
தான் உத்தரவாதம்
எல்லாம் கடந்து
பணிவும் கனிவும்
பயணியர்க்குக் காட்டும்
என்னை ஓட்டவைப்பது
சற்றேதும் ஓய்வின்றி
உற்சாகம் ஊற்றுகின்ற
சிங்கை வானொலி
எனும் பச்சை விளக்கு!

## இன்னும் புதிதாய்ப் பிறப்பேன்

– பிச்சினிக்காடு இளங்கோ

இன்று புதிதாய்ப் பிறந்தேன்
இன்னும் புதிதாய்ப் பிறப்பேன்
நன்றாய்ப் பொழுது புலரும்
நன்றாய் எல்லாம் மலரும்
கவிதை கோடி பிறக்கும்
கவிதையின் உண்மைச் சிறக்கும்
கவிதைக் கண்களால் விழிப்பேன்
காட்சிக் கவிதைகள் வடிப்பேன்
மனிதம் பாடிக் களிப்பேன்
மனிதர் வாடத் துடிப்பேன்
கனியாய் சொற்கள் உதிர்ப்பேன்
கனிவாய் நட்பை வளர்ப்பேன்
உறவில் நட்பில் வேடம்
அறவே இல்லாப் பாடம்
நாளும் நடத்தி வாழ்வேன்
நானும் வாழ்ந்து வெல்வேன்
எல்லைகள் இல்லாத் தேசம்
இதயந் தோறும் நேசம்
பொங்கும் நாள்வர வேண்டும்
பொலியும் மாட்சிகள் வேண்டும்
வானம் போலக் கடலும்
காற்றைப் போல நீரும்
பொதுவாய்ப் போகும் காலம்
பூத்தால் வெல்லும் ஞாலம்.

## பிள்ளைத் தமிழ்...

– தியாக.இரமேஷ்

கல்லைக் கொண்டு அடித்தாலு
கடும்சொல்லைக் கொண்டு அடிக்காதே..
உதவியவரை ஒருபோதும் மறவாதே
உழைப்பவரிடத்தில் கருணைக்காட்டத் தயங்காதே..
படிக்கும்போது அக்கம்பக்கம் திரும்பாதே
பண்பிழந்து பாழ்பட்டுத் திரியாதே..
கல்விகற்றால் கடவுள்கூட மதிக்கும்
கற்காவிட்டால் காலம்போட்டு மிதிக்கும்..
அப்பாஅம்மா பேச்சைக் கேட்டுக்கோ
அகிலம் போற்ற நடந்துக்கோ..
மூச்சுள்ளவரை முயற்சியைக் கைவிடாதே
முனகி விதிவிதியென்று சோம்பிடாதே..
வள்ளுவம் அறிந்து தினம் நட
வாழ்த்தும் உலகம் எல்லாம் கட..
பாரதியின் பாப்பா பாட்டைப் பழகு
பாங்காய் வாழ்வில் கடைப்பிடித்தல் அழகு..

## கதை சொல்லி

– நீதிபாண்டி

லாவண்யாவிற்கு தினமும்
ஒரு கதைச் சொல்ல வேண்டும்
திங்கட்கிழமை காக்கா பாட்டி வடைக்கதை...
செவ்வாய்க்கிழமை அதையே
இன்னும் கொஞ்சம் மாற்றி
புதன் கிழமையில் அதே கதையில்
வண்ணம் சேர்த்து
காக்கா கருப்பு கலரா இருந்துச்சாம்
வெள்ளிக்கிழமையில்
லாவண்யா கதை
சொல்லத் தொடங்கிவிட்டாள்
ஒரு காக்கா இருந்துச்சாம்
கைகளை இப்படி இப்படி ஆட்டி
பறந்து வந்துச்சாம்
கேட்டுக் கொண்டிருந்த செளம்மியா குட்டியோ
ஆமாம்.. ஆமாம்... ஆட்டி பறந்து வந்துச்சாம் என்றாள்
கதைச் சொல்ல வந்தவன்
கைகளை இப்படி இப்படி ஆட்டி
வடைக்கதையைத் திருடத் தொடங்கினேன்.

## காணாக்கடி

– மாதங்கி

ஆ தீண்டு குற்றி போல்
மின்னணுச் சாதனங்கள்
செயல்படுவதால்
உளச்சோர்வு வருவதில்லை..
முப்பதாம் கோழிபோல்
மாத இறுதியில்
வங்கிக்கணக்கு நிறைவதால்
தற்போதுமைக்குக் குறைவில்லை.
ஆதுலர் எவரும் கண்களில் படாததால்
குற்றவுணர்வு என்பதுமில்லை.
சிற்றாடையுடன் அள்ளிருளில்
அலைந்துகொண்டிருந்தாலும்
ஆண்களால் தொல்லையில்லை.
சதகுப்பை என்று சொல்லுவதில்லை,
'இண்டியன் டில்' என்றால்
இருக்கிறதே இனிமையாக.
தேசமே தினமும் புதிதாய்ப் பிறக்கிறதோ
என்று அவ்வப்போது தோன்றும்போது
எக்களிப்பு உண்டுதான்,
ஆனாலும் 'ப்யூகிஸ்' சந்தைப் பெருந்திரளில்
ஓரத்துத் தள்ளுவண்டிக்கடைமுன்
அமர்ந்திருக்கும் சீனமாந்திரிகவாதியின்
தலைக்குப்பின்னே கடைப்பொருள்களின்
இடையே
தென்பட்ட படமெடுத்த நிலையில் இருக்கும்
ஒன்றரையடியுயர மெழுகுக் கரும்பாம்பு
தின்றுவிடுகிறது மொத்தமாக
திண்ணக்கத்தை...

சொற்பொருள்: காணாக்கடி – உள்காயம் ,
திண்ணக்கம் – பெருமிதம் ,
ஆதுலர் – மாற்றுத்திறனாளி
ஆ தீண்டு – பசுமாடு உராயும் கல்

## விளைநிலம்

– தாயுமானவன் மதிக்குமார்

காதலியின் தலைவகிடு.
நடந்து செல்லும்
வரப்பாய்த் தெரிந்திடும்
காதலன் உதடுகளுக்கு

கறைபடிந்த கரங்களைத்
தரணியிலே பார்க்கையில்
சிரத்தினிலே தோன்றிடும்
வார்த்தைதான் களையெடுப்பு!

நட்ட நடு நிசியில்
நட்சத்திரப் பயிர் முளைத்து
வெள்ளைக்கிணறு கொண்டு
காட்சிதரும் வானவெளி
விளை நிலமாய்!

இராணுவமாய் அணிவகுத்து
மாணவர்கள் காலை
வணக்கம் பாடுகையில்
தோன்றிடுமே பள்ளிகளும்
விளை நிலமாய்!

எழுத்துகளைத் தூவிவிட்டு
முளைத்திடும் பக்கங்கள்
எழுத்தாளனுக்குத் தோன்றும்
என்றும் விளை நிலமாய்!

உவமைகளாக மட்டுமே
உயிர்வாழ்கின்றது இன்று
உண்மையான விளை நிலம்!

வீட்டு மனைகளாக அதைப்
புதைத்தவர்களுக்குக்
குன்றட்டும் மன நலம்!

## தமிழன் அவலம்

– கி. கோவிந்தராஜ்

சாதியின் பேரைச்சொல்லி
சண்டையை மூட்டிவிட்டு
மோதி மூச்சடச்சுச் சாகுறான் –தன்
ஆதித் தமிழ் மறந்து
ஆங்கிலம் படிப்பதற்குப்
பாதிச் சொத்திழந்து போகுறான்
ராசிக்கல் மாட்டிக்கிட்டா
ராசிவந்து சேருமின்னு
ஜோசியத்த நம்பிக்கிட்டு நிக்குறான் – சிலர்
பாசிவாங்கி மாட்டிக்கிட்டா
பணங்காசு பெருகுமின்னு
யோசிக்காம பொய்யசொல்லி விக்கிறான்
கோடி அடிச்சவனைக்
கும்பிட்டு வணக்கமிட்டு
லீடர் எனச் சொல்லித் துதிக்கிறான் –சும்மா
பீடி குடிச்சிப்பிட்டு கோழி திருடிவிட்டா
கூடிச் சேந்துக்கிட்டு ஒதைக்கிறான்

## ஞானிகள்

–கோ. இளங்கோவன்

லைக்குகளிலும் கமெண்டுகளிலும்
பாதி நாளும் மெயிலிலும்
டுவிட்டிலும்
மீதி நாளுமாய்
நகரும் பயணத்தில்
விமானம் தொலைவதும்
லிங்கா விமர்சனமும்
செல்பிகளும்
சிதறும் உடல்களும்
ஒரே லைக் ஆகி,
எங்களை ஞானிகளாக்கிவிட்டன


# Manpower & Immigration Services

## Contact us, if you need any of the following services :-

Manpower Recruitment, Employment Pass and "S" Pass , Work Permit and related work passes.

Entree Pass Application

Permanent Resident Application (PR)

Entry Visa / Multiple Entry Visa / Social Visa etc.

**Contact Numbers**
**8322 3595 / 8322 3594**
**9791 3001**

## International Employment Agency (1992) Pte Ltd

**72 Bendemeer Road #05-21 , LUZERNE Singapore 339941**
**Tel Nos : 6327 1158 / 6327 1159 / 6327 1139 Fax no : 6225 2004**
**Email : hari@ibmc.com.sg , Co Reg No. 200504963C**

# தமிழ்மொழி பண்பாட்டுக் கழக திருக்குறள் விழா!

சென்ற ஆண்டு தமிழ்மொழி மாதத்தின் ஒரு அங்கமாக தனது 28ஆவது திருக்குறள் விழாவினை தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் ஞாயிற்றுக் கிழமை மார்ச் மாதம் 30ஆம் தேதி, சிங்கப்பூர் பலதுறை தொழிற் கல்லூரியின் உள்ளரங்கில் நடத்தியது.

ஒரு பேச்சாளர், அவர் எத்தனை சாமர்த்தியம் உள்ளவராக வேண்டுமானாலும் இருக்கட்டும், நிரம்பி வழியும் ஒரு அரங்கத்தை 2 மணி நேரம் கட்டுக்கோப்புடன் நிர்வகிக்க முடியும் என்பதை நிரூபித்தவர், தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் திருக்குறள் விழாவில் கலந்து கொண்ட பல்சுவை வித்தகர் மலேசிய சி.பாண்டித்துரை! இந்த முறை திருக்குறள் சாரத்தை திரைப் பாடல்களின் வழி விளக்க வந்த இவர், கையோடு 3 அருமையான பாடகர்களையும் கொண்டு வந்து இசை மழையில் நனைய வைத்து அரங்கத்தையே கலக்கினார். மூன்று பாடகர்களுக்கும் நல்ல பயிற்சி தந்து, தன் பேச்சோடு அவர்களை நயத்தோடு இழுத்துச் சென்றது புதிய உத்தி. மலேசிய நல்லதம்பி அவர்களின் தலைமையில் இயங்கிய ஐவர் கொண்ட இசைக் குழுவினர், இன்னிசை வழங்கினர். பாண்டித்துரையின் திருக்குறள் சொற்பொழிவு பார்வையாளர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் புதிய இளம் செயலவையை அறிமுகம் செய்தனர். செயலவையில் 50 சதவீதம் பெண்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது மட்டுமல்லாமல், மூன்று தலைமுறையினரை ஒருங்கிணைத்த செயலவை இது என்று தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் தெரிவித்தார்.

மற்றுமொரு சிறப்பு நிகழ்வாக இந்த ஆண்டு திருக்குறள் விழாவில், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் தன்னுடைய இணையத் தளத்தை அதிகாரபூர்வமாக சிறப்பு விருந்தினர் திரு. ஆர். தினகரன் அவர்கள் திறந்து வைத்தார். இதன் மூலம் தமிழ் சார்ந்த மற்ற அமைப்புகளுடனும் தமிழ் சமுதாயத்துடனும் தனது தொடர்பை மேலும் வலுப்படுத்தும் முயற்சியாகக் கழகம் கருதுகிறது.

இசைக் குழுவினர்

புதிய செயலவை உறுப்பினர்களை அறிமுகப்படுத்துகிறார் தலைவர் திரு மு ஹரிக்ருஷ்ணன்

திரு பாண்டித்துறை அவர்களுக்கு சிறப்பு

கழகத்தின் வழி தமிழுக்காகவும், சிங்கை வாழ் தமிழ் சமுதாயத்திற்காகவும் தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை அர்ப்பணித்து சிறப்பாக தொண்டாற்றி வந்த திரு சங்கரன் ஐயா அவர்களுக்கு திருவள்ளுவர் விருது இந்த ஆண்டு வழங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதல் திருக்குறள் விழாவிலிருந்து கழகத்திற்காக செயல்படத் தொடங்கி இந்த 28ஆவது திருக்குறள் விழாவில் விருது பெறும் அளவுக்கு உயர்ந்துள்ள ஒரு உன்னத தொண்டர்.

கழகத் தலைவர் திரு மு ஹரிகிருஷ்ணன் தனது வரவேற்புரையில் போட்டுக் காட்டிய காணொளியில் ஜெர்மானிய மாதர் பேசியது; தமிழ் பேசத் தயங்கும் தமிழர்களுக்கு சாட்டையடி போல் இருந்தது என்று சிறப்பு விருந்தினர் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் திரு தினகரன் கருத்துரைத்தார். நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் திரு. இராம்குமார் நன்றியுரை வழங்கினர். இந்நிகழ்ச்சியை திருமதி அழகுநிலா அவர்களும், திரு. இராம்குமார் இருவரும் சிறப்பாக வழி நடத்தினர். இந்நிகழ்ச்சிக்கு சுமார் 500 பேர் வந்திருந்தனர்; வந்திருந்தவர்களில் பலர் இந்நிகழ்ச்சியை தங்களை மறந்து ரசித்ததாகவும் இது போன்ற நிகழ்ச்சியை மீண்டும் காண ஆவலாய் இருப்பதாகவும் கருத்துரைத்தனர்.

**– ச இராம்குமார்**

# முனைவர் சித்ரா சங்கரனுக்கு ஔவையார் விருது

ஔவையார் என்ற பெண் கவிஞரை போற்றிக் கொண்டாடவும் பெண்களின் ஆளுமைத் திறன்களை உலகறியவும் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் முதன் முறையாக ஔவையார் விழாவை ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடத்தியது. சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சு, தகவல் தொடர்பு அமைச்சின் துணை அமைச்சர் திருமதி சிம் ஆன் அவர்கள் வந்திருந்து சிறப்பித்தார்.

வரவேற்புரை வழங்கிய தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு மு ஹரிகிருஷ்ணன், பெண்களின் தலைமைத்துவ பண்புகளை மக்கள் அறியச் செய்வது தான் ஔவையார் விழாவின் முக்கிய நோக்கம் என்று கூறினார்.

சிங்கப்பூர்த் தமிழ் சமுதாயத்திற்கு, தமிழ் மொழிக்கு, குறிப்பாக மகளிர்க்கு பல சேவைகள் புரிந்து தொண்டாற்றி வரும் சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் சித்ரா சங்கரன் அவர்களுக்கு ஔவையார் விருது வழங்கப்பட்டது.

அரங்கம் நிறைந்த கூட்டத்தை தனது இரண்டு மணி நேர சொற்பொழிவால் கட்டிப்போட்டார் தமிழகத்தின் புகழ்பெற்ற மேடைப்பேச்சாளர் முனைவர் பர்வீன் சுல்தானா. தனி மனித வளர்ச்சி சமூக வளர்ச்சியைத் தவிர்த்து இருக்குமானால் ஒருநாள் அது வீழ்ச்சியை சந்திக்கும் என்ற ஆழமான கருத்தை முன்வைத்த அவர் ஔவையின் சொல் வலிமையையும் வாசிப்பின் முக்கியத்துவத்தையும் அழகாக எடுத்துரைத்தார்.

தொடக்க நிலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட ஔவையார் விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசை பெற்ற மாணவர்கள் தங்களது படைப்புகளை மேடையில் வழங்கி பார்வை யாளர்களை அசத்தினார்கள். நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக்குழு தலைவி திருவாட்டி புஷ்பலதா நாயுடு நன்றியுரை வழங்கினார். திருமதி சீதாலெட்சுமி சண்முகமும், செல்வி வீர விஜயபாரதியும் நிகழ்ச்சியை சிறப்பாக வழி நடத்தினர்.

நீண்ட இடைவெளிக்குப்பின் மலர்ந்துள்ள தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் காலாண்டிதழ் பத்திரிகை தமிழ்மணி பார்வையாளர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சுமார் 300 பேர் வந்திருந்தனர். வந்திருந்தவர்களில் பலர் நிகழ்ச்சியை தங்களை மறந்து ரசித்ததாகக் கருத்துரைத்தனர்.

**– அழகுநிலா பஞ்சாக்ஷரம்**

*கல்வி அமைச்சு, தகவர் தொடர்பு அமைச்சின் துணை அமைச்சர் திருமதி சிம் ஆன் அவர்கள் முனைவர் சித்ரா சங்கரனுக்கு ஔவையார் விருது வழங்குகிறார்*

*சிறப்புப் பேச்சாளர் முனைவர் பர்வீன் சுல்தானா*

### ஔவை அருளியவை
## கொன்றை வேந்தன்

உயிர் வருக்கம்

- ★ அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
- ★ ஆலயம் தொழுவது சாலவும் நன்று
- ★ இல்லறம் அல்லது நல்லறம் அன்று
- ★ ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
- ★ உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
- ★ ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
- ★ எண்ணும் எழுத்தும் கண் எனத் தரும்
- ★ ஏவா மக்கள் மூவா மருந்து
- ★ ஐயம் புகினும் செய்வன செய்
- ★ ஒருவனைப் பற்றி ஒரகத்திரு
- ★ ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
- ★ ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழகு
- ★ அகமும் காசும் சிக்கெனத்தே

# பாட்டு • நடனம் • பரிசளிப்பு • பாரதி விருது

## பாரதியார் விழா

### பாட்டுக்கொரு புலவன் பாரதியாருக்கு சிறப்பு

சிங்கையில் பாரதியின் பெருமையைப் பறைசாற்றும் விதமாக தமிழ்மொழி பண்பாட்டுக்கழகம் தொடர்ந்து பதினான்காம் ஆண்டாக பாரதியார் விழாவை செப்டம்பர் 14, ஞாயிற்றுகிழமை அன்று உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் உள்ளரங்கில் நடத்தியது. அதன் தலைவர் திரு மு ஹரிகிருஷ்ணன் தனது வரவேற்புரையில் பாரதியின் சிந்தனை போலவே சிங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் வருங்கால வளத்திற்கான சில சிந்தனைகளை முன்வைத்தார். பொருளாதார ரீதியில் தமிழர்கள் முன்னேற வேண்டியதன் அவசியத்தையும்,எண்ணிக்கையின் அடிப்படையில் நாம் வலுவாக இருபதற்காக நம் மக்கள் தொகையை அதிகரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். சிங்கையில் தமிழ்மொழி தொடர்ந்து அதிகாரப்பூர்வ மொழியாக நிலைக்க செய்ய தமிழர்கள் தங்கள் குடும்பத்தாருடன் முதலில் தமிழில் பேச வேண்டும் என்றும், தமிழ் அமைப்புகள் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

தலைவர் திரு மு ஹரிகிருஷ்ணன் அவர்களின் இந்த கருத்தை ஆமோதித்து பேசிய சிறப்பு விருந்தினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர் ரவீந்திரன் அதை செயல்படுத்த, நம் சமுதாயத்தின் தேவைகளை, வளர்ச்சி முறைகளை ஆழமாகச் சிந்தித்து அரசுக்குத் தெரிவிக்கும் அறிவார்ந்த ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைத் தெளிவுபடுத்தினார். பாரதியின் பெருமையைப் பற்றி குறிப்பிடுகையில் அவரின் நாட்டுப்பற்று பாடல்கள் சிங்கபூரர்களின் நாட்டுப்பற்றுக்கும் பொருந்தும் என்று கூறினார்.

சிங்கப்பூரில் நீண்ட கால தமிழ்ச் சேவை புரிபவரும், எழுத்துத் துறையாளருமான புதுமைத்தேனீ மா அன்பழகன் அவர்களுக்குத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் ‘பாரதியார் விருது’ வழங்கி கௌரவித்தது. கிட்டத்தட்ட 25 நூல்கள் வரை எழுதியுள்ள தன்னை மேலும் எழுதத் தூண்டும் விருதாக இதை ஏற்பதாக திரு அன்பழகன் குறிப்பிட்டார்.

கடந்த ஜூலை மாதம் கல்வியமைச்சு, குடியரசின் அனைத்து உயர்நிலைப் பள்ளி தமிழ் மாணவர்களுக்கிடையே எழுத்துத் திறனை மேம்படுத்தும் நோக்கில் கதை எழுதும் போட்டி நடத்தியது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் தமிழ்மொழி பண் பாட்டுக் கழகம் பரிசுகளை வழங்கியது. நிகழ்ச்சியில் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் புரவலர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அரங்கம் நிறைந்த இந்நிகழ்ச்சியின் முக்கிய அங்கமாக தமிழகத்தில் இருந்து வருகை தந்திருந்த பன்னாட்டு மேடைப்பேச்சாளர் திரு கி சிவகுமார் தனது சிறப்புரையில் பாரதியைப் புதிய கோணங்களில் காட்டினார். பாரதியின் பாடல்களின் உயிரோட்டங்களை, அவருடைய பாடல்களை மேற்கோள் காட்டி, பல்வேறு உணர்ச்சிகளுடன் வெளிப்படுத்தியது வெகுவாக ரசிக்கப்பட்டது. மேலும் பாரதியின் பாப்பா பாடலில் பெரியவர்களுக்கான கருத்து நிறைய சொல்லப் பட்டிருப்பதாக அன்பை வலியுறுத்தி பாடிய வரிகளை மேற்கோள்காட்டி அன்புடன் இருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியை அழகாக நெறிப்படுத்தினர் செல்வி வீரவிஜயபாரதி யும் திரு இராம்குமார் அவர்களும். சிங்கப்பூரின் முன்னணி பாடகி, சங்கீத சரஸ்வதி திருமதி பாக்யா மூர்த்தியின் இசை மணம் கமழ்ந்த பாரதியாரின் கீதங்களுடன் பளிச்செனத் துவங்கிய தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் பாரதியார் விழா, ஏற்பாட்டுக் குழு தலைவர் திரு ரெங்கபிரசாத்தின் நன்றி யுரையுடன் இனிதே நிறைவுபெற்றது.

– கோ ரெங்கப்ரசாத்

*பாரதி விழாவில் பரிசு பெற்ற பள்ளி மாணவர்கள்*

*முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரா ரவீந்திரன் புதுமைத் தேனீ மா அன்பழகனுக்கு பாரதியார் விருதளிக்கிறார்*

*சிறப்பு பேச்சாளர் திரு கி சிவக்குமாருடன் கழக உறுப்பினர்கள்*

# 400 பேர் கலந்து கொண்ட இரத்த தான முகாம்

**உயிர் காக்கும் உன்னதமான இரத்த தானம்**

மனித நேயம் வாழ்ந்துகொண்டிருப்பதை பறைசாற்றும் மற்றுமோர் நிகழ்வாக சிங்கையில் அக்டோபர் 12, 2014ல் மாபெரும் இரத்த தான முகாம் நடைபெற்றது.பெக் கியோ சமூக மன்றம் இந்திய நற்பணிச் செயற்குழு, டெக் கீ 'சி' வட்டார வசிப்போர் குழு, மக்கள் கவிஞர் மன்றம், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் ஆகிய அமைப்புகளின் ஆதரவில் நடைபெற்ற இம்முகாமில் ஏறக்குறைய 400 பேர் கலந்து கொண்டனர். இதில் பங்கெடுத்தவர்கள் பெரும்பாலும் வெளிநாட்டு ஊழியர்கள் என்றாலும் பெண்கள், மாணவர்கள் மற்றும் பல்வேறு நாட்டினரும், இனத்தவரும் இதில் கலந்து கொண்டு பேராதரவு அளித்தனர். இரத்த தான சேவைக் குழுவைச் சேர்ந்த மருத்துவர்கள், தாதியர்கள், மற்றும் அமைப்புகளின் தொண்டூழியர்கள் என 75 பேர் தொடர்ச்சியாக 10 மணி நேரம் அயராது சேவையாற்றினர்.

பெக் கியோ சமூக மன்றத்தில் நடந்த இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த சிங்கப்பூர் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு லூயி டக் இயூ, உயிர் காக்கும் சேவை புரிந்திட கூடியிருக்கும் இரத்த நன்கொடையாளர்களைப் பாராட்டினார். இச்சேவையைத் தொடர்ந்து நடத்திட ஏற்பாட்டுக் குழுவினருக்கு தம் ஆதரவை தெரிவித்தார்.

தொடர்ந்து 73வது தடவையாக இரத்த தானம் செய்யும் சிங்கப்பூரரான திரு ஷா இப்ராஹிம், 52, அவர்கள், 1981இல் தேசிய சேவையில் இருந்த போது முதல் முறையாக இரத்த தானம் செய்ததாகத் தெரிவித்தார். சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லீம் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரான இவர் பொதுவாக இரத்த வங்கிகுக்குச் சென்று தானம் செய்யும் வழக்கமுள்ளவர். இம்மாதிரியான முகாமில் நண்பர்களுடன் வந்து தானம் செய்வது மேலும் தன்னை ஊக்கப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து 13வது தடவையாக இரத்தம் கொடுக்கும் திரு நிர்மல், 34, இரத்த தானம் கொடுப்பதற்கு தயங்க வேண்டாம் என்றும் தானம் செய்வதால் உடல் நலத்திற்கு பாதிப்பு ஏற்படுமோ என்று அஞ்சத்தேவையில்லை என்றும் கூறினார். தொடர்ந்து 14வது தடவையாக இரத்த தானம் செய்த மஞ்சுநாதன், 33 இரத்த தானம் செய்வதை தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். இப்படி பலமுறை இரத்தம் கொடுப்பவர்களுக்கு மத்தியில், முதன் முறையாக இரத்தம் கொடுக்க பலர் திரண்டு வந்திருந்தது இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாகும்.

இரத்த தானம் வழங்கும் கழக உறுப்பினர் திருமதி பத்மினி செல்லையா

இந்நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பை ஒலி 96.8 ஒலிபரப்பி விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் உணவளித்து ஆதரவு தந்தது ஆனந்த பவன் உணவகம்.

சிங்கையில் மாறிவரும் சுகாதார தேவைகளை ஈடுசெய்ய இம்மாதிரியான சேவைகளை அடிக்கடி ஆற்றிட வேண்டும் என்று கருத்துக் கூறிய மக்கள், தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்திய இம்முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்காக ஏற்பாட்டுக் குழுவினருக்கு தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

– தாம் சண்முகம்

இரத்த தான முகாமிற்கு உதவி செய்த தொண்டூழியர்களுடன் அமைச்சர் மற்றும் சமூகத் தலைவர்கள்

# செய்தித் தொகுப்பு

நுண் கலைக் கழக ஏற்பாட்டில்

## சுந்தரேசனார் ஆவணப் படம்!

சிங்கப்பூர் இந்திய நுண் கலைக் கழகம், 2015ம் ஆண்டுத் துவக்கத்தில், இலக்கிய நயம் செறிந்த ஒரு பண்ணிசைப் புலவரின் ஆவணப் படத்தைத் திரையேற்றியது பொருத்தமான செயலாக அமைந்தது. ஆம். தமிழகத்தை சார்ந்த அமரர் குடந்தை சுந்தரேசனார் எனும் அந்தப் பெருமகனார், சிலப்பதிகாரம், திருமுருகாற்றுப்படை போன்ற பல எழுத்துச் சிற்பங்களை, தன் குரலால், இசையால், சொல் சுத்தத்துடனும், பதினைந்துக்கு மேற்பட்ட பொருத்தமான ராகங்களிலும் செதுக்கி இருந்ததை, புதுவை முனைவர் மு.இளங்கோ, தன் பெரு முயற்சியால் ஒலி/ஒளி வடிவில் உருவாக்கித் தந்திருந்தார். அதனையே இந்திய நுண் கலைக் கழகம் தன் ஸ்டார் லைட் சாலையில் உள்ள அரங்கில், அண்மையில் ஜனவரி 3ம் நாள் அரங்கேற்றியது. கவிமாலை அமைப்புடன் இணைந்து அளிக்கப்பட இந்த இலக்கிய–இசை விருந்தை அறுபதுக்கு மேற்பட்டோர் கண்டு ரசித்தனர். நுண் கலைக் கழகத்தின் துணைத் தலைவர் சச்சிதானந்தன், மற்ற கழக நிர்வாகிகள், முனைவர் சுப.திண்ணப்பன், வளர் தமிழ் இயக்கத் தலைவர் ஆர்.ராஜாராம், த.மொழிப் பண்பாட்டுக் கழகத் தலைவர் ஹரிகிருஷ்ணன், மற்ற பல அறிஞர்கள் முன்னிலையில், கவிமாலை காப்பாளர் புதுமைத்தேனீ மா..அன்பழகன் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். பொங்கி எழும் தமிழ்ப் பண்ணிசை பின்னோலிக்க, காவிரியையும், பூம்புகாரையும் எழிற் காட்சியாக்கி, குடந்தை சுந்தரேசனாரின் இசை வாழ்வையும், வறுமை நிலைகளையும், மிகை இன்றி வர்ணித்த தயாரிப்பாளர்கள், இறுதியில் அன்னாரின் இறுதி யாத்திரையையும் நெஞ்சுருகப் படமாக்கி இருந்தனர். இதற்கு முன், அண்மையில் காட்டப்பட்ட உருக்கம் நிறைந்த 'சயாம் மரண ரயில்' என்ற ஒரு உருக்கமான ஆவணப் படத்தை, மா.அன்பழகன் அப்போது நினைவுபடுத்தினார்.

இலக்கியக் களத்தில்

## இராமாயண சொற்பொழிவு!

முனைவர் இரத்ன வெங்கடேசன் நிகழ்த்தும் கம்ப ராமாயணத் தொடர் சொற்பொழிவு, இலக்கியக் களத்தின் சார்பில் மாதந்தோறும் மேற்கு கேலாங் சமூக மன்றத்தில், ஒவ்வொரு மாத இரண்டாவது சனியன்று நடைபெற்று வருகிறது. பிப்ரவரி மாதத்தில் இந்த சொற்பொழிவுத் தொடர் முடிவு பெறும் என்றும், புதிய தொடராக 'மணிமேகலை' காப்பியம் பற்றிய சொற்பொழிவு தொடரும் என்றும் இலக்கியக் களத்தின் தலைவர் முனைவர் ரத்ன வெங்கடேசன் அவர்கள் நம்மிடம் தெரிவித்தார்.

## ஷானவாசுக்கு சிங்கப்பூர் இலக்கியப் பரிசு

சிங்கப்பூர் தேசியக் கலைகள் மன்றம், நூலக வாரியம் ஆதரவில், 1992லிருந்து நடைபெறும் சிங்கப்பூர் இலக்கியப் பரிசு விழாவின் 2014ம் ஆண்டின் பரிசளிப்பு விழா, கடந்த நவம்பர் 4ம் நாள் ரீஜென்ட் ஓட்டலில் நடந்தபோது, பல புதிய படைப்பாளிகள் மேடையேறியதைக் காண முடிந்தது. கலாச்சார அமைச்சர் லாரன்ஸ் வாங் கலந்து கொண்டு சிறப்பித்த இதில், தமிழ்ப் பிரிவில், புனைவு நூல்களுக்கான போட்டியில் முதல் பரிசான பத்தாயிரம் வெள்ளியை நம் கலகலப்பான எழுத்தாளர் ஷானவாஸ் (மூன்றாவது கை) பெற்றுப் பெருமை சேர்த்தார். கவிதையில் ஆறுதல் பரிசு மாதங்கிக்கும் (மழைகளின் பறத்தல்), அ.புனைவுப் பிரிவில் கோட்டி முருகானந்தத்திற்கும் (சிங்கப்பூர் தமிழ் கவிதை வரலாறு ) அளிக்கப்பட்டன.

"என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இது. என் சிறு வயதில் என் தாத்தா – பாட்டியின் கதை சொல்லும்– கதை கேட்கும் பாணியே இன்று என்னை எழுத்தாளனாக ஆக்கியிருக்கிறது." என்று பழைய நினைவுகளில் மகிழ்ச்சியோடு புரண்டு எழுந்த எழுத்தாளர் ஷானவாஸ், எழுத்தில் புதிய முயற்சிகளை மேற்கொள்ள இது மிகவும் பயன்படும் என்று மகிழ்ச்சியுடன் தமிழ்மணியிடம் கூறினார்.

கவிதை, புனைவுப் பிரிவுகளுக்கு கவிஞர் க.து.மு.இக்பால், நூமான், இளங்கோவன், தமிழக மாலன், முனைவர் சீதாலக்ஷ்மி, செல்வி கனகலதா, அழகிய பாண்டியன், ஜெயமோகன் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

## அரங்கு நிறை கூட்டத்தில்
# அருள்மொழியின் பேச்சு!

சிங்கப்பூரின் சுதந்திரப் பொன்னாளின் முதல் தினமான ஜனவரி முதல் நாளில் கவிமாலை அமைப்பு தன் முதல் நிகழ்வைத் தொடங்கியது. கவிஞர் காசாங்காடு அமிர்தலிங்கத்தின் பாடல் ஒன்றை அவரது மகன் ஓம்காரநாதன் வாழ்த்திசைக்க, புதுமைத்தேனீ அன்பழகனின் வரவேற்புரையுடன் துவங்கிய இந்நிகழ்ச்சியில், தமிழகப் பேச்சாளரும், வழக்கறிஞருமான அருள்மொழி அம்மையார் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டு, சிங்கப்பூரின் பெருமைகளை தலைப்பாக்கிப் பேசினார். சிங்கப்பூரின் வாழ்வு முறை, சுகாதாரம், அரசின் செயல்பாடு, லீ குவான் யூ வின் உழைப்பு, சிறு விஷயங்களில் அரசு காட்டும் பெருங் கவனம் என்று சிங்கையின் பெருமைகளை மிகைப்படுத்தாமல் சுவைபடக் கூறினார். இந்திய அரசியல், மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை கேலிப் பொருளாக்கி, ஆடியன்சை சிரிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபடாமல், அருள்மொழி அம்மையார் எடுத்துக் கொண்ட தலைப்பில் கலகலப்பாகப் பேசியது மன நிறைவைத் தந்தது. இவ்வாண்டின் முதல் நிகழ்ச்சியாக, ஒரு வெளிநாட்டவரைக் கொண்டு கவிமாலை சிங்கப்பூரின் ஐம்பதாவது பொன்விழாவை கொண்டாடியது.

ரேஸ் கோர்ஸ் சந்து, காந்தி மண்டபத்தில் நிகழ்ந்த இதில், கவிமாலையின் மற்ற வழக்கமான கவிதைப் போட்டி, பரிசு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

கவிதை எழுதி படித்தவர்களில் இளமுருகன், கிருத்திகா, கருணாகரசு, கோ.கண்ணன் நால்வரும் பாராட்டு பெற்றனர். விஜய் டிவியில் 'தமிழ்ப் பேச்சு – என் மூச்சு' நிகழ்ச்சியில் பங்கு கொண்ட இளமுருகனும் பரிசு பெற்றவர்களில் ஒருவர்.

ஸ்ரீ50/– வெள்ளிக் கவிதையை தங்கமணியும், ஸ்ரீ 30/– பரிசுக கவிதைகளை மதிக்குமார் தாயுமானவன், சபா முத்து நடராசன், இன்பா வாசுதேவன் மூவரும் சுவையோடு படைத்தனர். சிங்கை வரலாற்றை திருப்புகழாக்கி, சந்தம் குறையாமல் கவிஞர் கி.கோவிந்தராசு பாடியது, புது முயற்சி!

அருள்மொழி ஓர் அருமையான அறிவுரையை நம் கவிஞர்களுக்குத் தந்தார். எழுத்தில், உச்சரிப்பில் ழகர, லகர, ளகரங்களை முறையாகப் பயன்படுத்துவதின் அவசியத்தை ஆழமாக எடுத்துரைத்தார். இப்படி ஒருவர் நமக்கு அவசியம் தேவை.

# இலக்கிய வட்டம் மாதம் ஒரு நிகழ்ச்சி தொடருகிறது!

தரமான இலக்கிய உரையாடல்களையும், அவ்வப்போது சிங்கை வரும் அறிஞர் பெருமக்களின் இசைவுடன் மாதம் ஒரு முறை பூன் கெங் சமூக மன்றத்தில் நல்ல பல நிகழ்வுகளையும் நடத்தி வரும் இலக்கிய வட்ட அமைப்பு, பிறந்துள்ள புதிய ஆண்டில் மேலும் பல நிகழ்வுகளைத் தர விருக்கிறது. கடந்த நவம்பர் 30 அன்று நடந்த சொற்பொழிவு நிகழ்ச்சியில், சென்னைத் தமிழாசிரியரும், கரந்தைக் கல்லூரிப் புலவருமான துறை முத்துக் கிருஷ்ணன், 'உடைக்கப்பட்ட சிலம்புகள்' என்ற சிலப்பதிகாரத் தலைப்பில் அருமையான தோர் உரையைத் தந்தார்.

முதலில் உடைக்கப்படும் சிலம்பு கண்ணகியால் அரசவையில் பாண்டிய மன்னன் முன்னிலையில் உடைக்கப்படுவது. இது எந்தச் சிலம்பு என்பது காப்பியத்தில் குறிப்பாகச் சுட்டப்படுவது இல்லை. "தருக எனத் தந்து, தன் முன் வைப்ப" (வழக்குரை காதை–71) என்பதுதான் இது குறித்த பாடல் வரி. அரும்பத உரைக் காரர்தான் இதனைத் தெளிவாக விளக்குகிறார். கோவலனிடமிருந்து கைப்பற்றப்பட்டு, தற்சமயம் அரசியிடம் இருக்கும் சிலம்புதான் பிரச்சினைக்கு உரிய சிலம்பு. எனவே மன்னன் ஏவலாள் மூலம், அச்சிலம்பையே அரசியிடமிருந்து வாங்கி வந்து, அரசவையில் கண்ணகி முன் வைத்தான். உண்மையை நிலை நாட்ட, கோவலனிடமிருந்து பெற்ற சிலம்புதான் உடைக்கப்பட வேண்டும் என்பதால், கண்ணகியும் அந்தக் குறிப்பிட்ட சிலம்பையே உடைத்தாள். அதில் இருந்த மாணிக்கப் பரல் தெறித்து, மன்னன் வாயில்படுகிறது. மன்னன் உயிர் துறக்கிறான். திரு. துறை முத்துக் கிருஷ்ணனின் இந்த உரை கூடி இருந்தவர்களால் நன்கு ரசிக்கப்பட்டது.

இலக்கிய வட்டம் அண்மையில் தந்த மற்றொரு கலந்துரையாடல் நிகழ்ச்சி, பேராசிரியர் பிரணதார்த்திஹரன் தந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பற்றிய கலந்துரையாடலாகும். இலக்கிய வட்டம் 2015 மார்ச் மாதம் 8 ஆம் நாள் ஞாயிறு, மாலை 6 முதல் 9 வரை ஒரு கவியரங்க நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்துள்ளது. பொற்கிழிக் கவிஞர் மதுரை சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் தலைமையில், நம் சிங்கப்பூர் கவிஞர் எண்மர் பங்கு பெறும் நிகழ்ச்சியாக அது அமையும். அதே நிகழ்வில் நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றும் இடம் பெறும்.

## மாதவி மன்றத்தின் ஆதரவில்
# "மவுனப் போராட்டம்" வெளியீடு!

மவுனப் போராட்டம் என்ற தலைப்பில், கவிஞர் செல்வராஜின் கவிதை நூல், கடந்த டிசம்பர் 21ல் ஜூரோங் நூலக அரங்கில் வெளியீடு கண்டது. நூலக அதிகாரி புஷ்பலதா வரவேற்புரை வழங்க, தர்ஷினி நடனம் அளிக்க, செ.கண்ணனின் இராமாயண உரையுடன், ரமா சுரேஷ் பேச்சுடன் நடந்த இதில், தமிழக பட்டிமன்றப் பேச்சாளர் சுமதிஸ்ரீ முக்கிய உரை ஆற்றி சிறப்பித்தார். சுப.சத்தியமூர்த்தியின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமான நிகழ்ச்சி, கவிஞர் அமலதாசன், மாதவி இலக்கிய மன்றத் தலைவர் டாக்டர் என்.ஆர்.கோவிந்தன் போன்றோரின் பாராட்டுரைகளுக்குப் பின், நூல் வெளியீட்டுடன் முடிவுற்றது.

# வாசகர் வட்டத்தின் விரிவான எழுத்துப் பணிகள்!

'மாதம் ஒரு சந்திப்பு' நடத்துவதில் சளைக்காத இன்னொரு அமைப்பு, வாசகர் வட்டம். பலன் தரும் எழுத்து ஆய்வு–விமர்சனங்களை ஆங் மோ கியோ நூலகத்தில் தொடர்ந்து நடத்தி வரும் இந்த அமைப்பின் அக்டோபரில் நடந்த சிறுகதை விமர்சன நிகழ்வில், கிருத்திகா, சசிகுமார், பனசை நடராஜன் ஆகியோரின் திறனுக்குப் பரிசுகள் தரப்பட்டன. நவம்பர் வாசகர் வட்டம், சுயசரிதைகள், வாழ்க்கை வரலாறுகளை விவாதித்து, சிறந்த விமர்சகர்கள் ஆமருவி, சசிகுமார் இருவருக்கும் ரொக்கப் பரிசுகளைத் தந்தது. டிசம்பரில் ஷானவாசின் 'மூன்றாவது கை', எம்.கே.குமாரின் 'ஒளிந்தனையும் பெண்', சித்ரா ரமேஷின் 'நகரத்தின் கதை' நூல்கள் விமர்சனம் கண்டன.சசிகுமார் நகரத்தின் கதையையும், கடலூரான் மூன்றாவது கையையும் சிறப்பாக விமர்சித்தனர். விமர்சனங்களுக்கான ரொக்கப் பரிசுகளை, தமிழ் மொழிப் பண்பாட்டுக் கழகம் அளித்து வருகிறது.

6/2/15ல் இடம்பெறும் வாசகர் வட்டக் கூட்டத்தில், திருநெல்வேலி மனோன்மணியம் பல்கலைக் கழகப் பேராசிரியர் அ.ராமசாமி பங்கேற்கிறார். 7/3/15ல் அதன் ஆண்டு விழாவில், சிறந்த எழுத்தாளர் ஜோ.டிக்ரூசை சிறப்புரையாற்ற ஏற்பாடு செய்திருப்பதாக அதன் அமைப்பாளர்களில் ஒருவரான சித்ரா ரமேஷ் சொன்னார். நிகழ்ச்சி எப்போதும் ஆங் மோ கியோ நூலக அறையில் நடைபெறுகிறது.

# மீசை முளைக்காத காதல்

## ஆண்டியப்பனின் கவிதை நூல் வெளியீடு

செப்டம்பர் 21ஆம் தேதி மாலை நிகழ்ந்த சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் கழகத்தின் தலைவர் திரு நா ஆண்டியப்பன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்தேறியது. நூலில் மேலோங்கி இருப்பது உண்மையா அல்லது உணர்வா என்ற பேச்சுப் பொருளில், கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ தலைமையில் அருமையானதோர் குட்டிப் பட்டி மன்றத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. நூல் வெளியீட்டுக்கு முன்னர் நடந்த சுவையான கவிதைப் பட்டி மன்றம் முடிந்தபோதே, நூலின் அத்தனை உட்பொருளும் வரி வரியாக வந்திருந்தோருக்கு தெளிவாக்கப்பட்டது. பட்டி மன்றத்தில் பங்குபெற்ற கவிஞர்கள் ஆறுமுகம், வைரவன்,சேவகன்,இன்பா ஆகியோர் நூலை அதிகமாகவே மேற்கோள் காட்டினர். இறுதியில் கவிஞர் துரைராஜு தன் ஆய்வுரையில் மேலும் சுவையூட்டினார். அவருடைய பேச்சும் , பாணியும், நடையும் ஒரு புதிய ரசனை!

கம்ப ராமாயணம், பாரதியின் பாஞ்சாலி சபதம், சொந்த வாழ்க்கை அனுபவங்கள்.. எனப் பல நூல்களை வெளியிட்டிருக்கும் நூலாசிரியர் திரு ஆண்டியப்பனுக்கு இது நான்காவது புத்தகம். நாடு,மொழி,இனம்,உறவு, இயற்கை, இறை என்றெல்லாம் கிளை விரித்து, மரபு கலந்த புதுப் பார்வையில் அமைந்துள்ள கவிதைகள் கவிஞர் ஆண்டியப்பனுக்கு கட்டியம் கூறியது என்றால் அது மிகையாகாது. மாணவர் சமுதாயத்திடம் இந்நூலைக் கொண்டு சேர்க்க பெரு முயற்சி எடுத்துக் கொண்டு, அதனை சாதித்தும் காட்டினார் (ஏராள மாணவர்களை அழைத்து நூல் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது) இந்த விழாவில் டாக்டர் த.சந்துருவின் சிறப்புரை கவிதை நயத்தோடு மலர்ந்தது. நாகை.தங்கராசு கச்சிதமான தலைமை உரை நிகழ்த்தினார். பேராசிரியர் சுப.திண்ணப்பனின் வாழ்த்துரை ஒரு குட்டி இலக்கிய உரையாக அமைந்தது. சுப. அருணாச்சலம் நிகழ்ச்சி நெறிப்படுத்தி இதை வெற்றி நிகழ்சியாக்கினார்.

# சத்திக்கண்ணனின் நூல் வெளியீடு!

தமிழ் எழுத்தாளர் மன்றம் முன்னின்று நடத்திய கவிஞர் சத்தி கண்ணனின் கவிதை நூல் "இன்னும் மீதமிருக்கிறது" நவம்பர் 1ஆம் தேதி அன்று வெளியீடு கண்டபோது, நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய முனைவர் சுப.திண்ணப்பன் நூலாசிரியரின் கவித் திறமையை வெகுவாகப் பாராட்டினார். கழகத் தலைவர் ஆண்டியப்பன், நூலாசிரியர் பற்றி நல்லதோர் கணிப்புரை வழங்க, செயலாளர் சுப.அருணாசலம் நிகழ்ச்சியை நெறிப் படுத்தினார். தன் திறமை வற்றிப் போய்விடவில்லை– இன்னும் மீதமிருக்கிறது. மேலும் நிறைய எழுதுவேன் என்ற உயரிய சிந்தனையுடனும் தன்னம்பிக்கையுடனும் ஏற்புரை தந்த சத்தி கண்ணன், தன் எழுத்து வளர்ச்சிக்கு உதவிய அனைவருக்கும் நெஞ்சுணர்வோடு நன்றி கூறினார். மன்னார்குடி முனைவர் ராஜகோபாலன் வந்திருந்தோரை தன் வாழ்த்துரையின் மூலம் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

# கரிகாலன் விருது

## சூர்யரத்னா | பச்சைபாலன் இருவருக்கும்!

செப்டம்பர் மாதத்தில் உமறுப் புலவர் தமிழ் அரங்கில் சிங்கப்பூர் – மலேசியா – தமிழகம் இணைந்து படைத்த கரிகாலன் விருது வழங்கும் விழா அரங்கேறியது. தஞ்சையைத் தலைநகராகக் கொண்டாண்ட தமிழ் மன்னன் கரிகாலன் பெயரில், சிங்கைத் தமிழ்ப் பெரியார் கோ.சாரங்கபாணிக்குப் பெருமை சேர்க்கும் வகையில், தஞ்சைப் பலகலைக் கழகம் அளிக்கும் இலக்கிய விருதளிப்பு விழா இது. சிங்கப்பூர் தமிழ் ஆர்வலர், வணிகப் பெருந்தகை முகமது முஸ்தபா அவர்கள் பெரு முயற்சியினால் ஆண்டுதோறும் நடத்தும் கரிகாலன் விருதுகளை இந்த ஆண்டு சிங்கப்பூர் எழுத்தாளர் சூர்யரத்னாவும், மலேசியக் கவிஞர் பச்சைபாலனும் பெற்றனர். தஞ்சைப் பல்கலைக் கழக துணை வேந்தர் முனைவர் ம.திருமலை, விருதுகளை வழங்கும் முஸ்தாபா அவர்களின் தமிழ்ப் பணியை வெகுவாகப் பாராட்டியதோடு, விருதுகளுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் அனுசரிக்கப்படும் விதி முறைகளையும், துணை வேந்தர் அரங்கில் கூடியிருந்த தமிழ் ஆர்வலர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். வளர் தமிழ் இயக்கத் தலைவர் ராஜாராம், தமிழ் எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கிறது – சிங்கை, மலேசிய, இலங்கை எங்கெங்கும் தமிழ் முழங்கி வருகிறது என்றவர், எதிர் காலத்தில் நாம் மொழியை நம் அடுத்த தலைமுறையினரிடம் எந்த நிலையில் ஒப்படைக்க போகிறோம் என்பது தான் நம் கவலை என்றார். முனைவர் வ.மகேஸ்வரன் (இலங்கை) தந்த நூல்களின் மதிப்புரை, முறையான தெளிவுரையாக அமைந்தது. பச்சைபாலனின் கவிதை களையும், சூர்யரத்னாவின் கதைகளையும் நுட்பமாக ஆராய்ந்தார். மலேசியத் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் ராஜேந்திரன், அங்குள்ள எழுத்தாளர்களின் வளர்ச்சிக்காக கழகம் ஆண்டிற்கு ஒரு லட்சம் ரிங்கிட் பரிசுகளாகத் தருவதாகக் குறிப்பிட்டு நம்மை வியப்பிலாழ்த்தினார். இதைத் தவிர, தேசியத் தோட்டத் தொழிலாளர் அமைப்பு, உள்நாட்டு–வெளிநாட்டு எழுத்தாளர்களுக்கென $20,000 அளவில் ஒதுக்கி வைத்திருப்பதைக் குறிப்பிட்டார். கவிஞர் பச்சைபாலன் தன் ஏற்புரையில் தன் எழுத்துப் பாதையை தடம் புரளாமல் விளக்கினார். சூர்யரத்னாவும் தன் பாணியில் ஏற்புரையை ஆரம்பித்துத் தன் கதைப் பரிமாணங்களை கடைசியாக உணர்த்தி முடித்தார். நிகழ்ச்சி நெறியாளர் கௌசல்யா, த.எ .கழகத் தலைவர் ந.ஆண்டியப்பன், நன்றிஉரை கூறிய சுப.அருணாச்சலம் ஆகியோர் இன்றைய நிகழ்ச்சியின் முதன்மைப் பின்னணியினர்.

# பார்வதி பூபாலனின் நூல் வெளியீடு

கடந்த நவம்பரில், ஆசிரியை பார்வதி பூபாலனின் ‘அருள் மலர்கள்’– ‘தமிழ் உலா’ எனும் இரு நூல்கள் வெளியாயின. பக்திச் சுவை மிக்க பாடல்களை ‘அருள் மலர்’ நூலெங்கும் மரபு மணத்தோடு தெளித்திருக்கும் நூலா சிரியை, ‘தமிழ் உலா’வில் சிங்கையின் நாடு, மொழி, சமுதாயத் தலைவர்கள் பற்றி விருத்தம், வெண்பா, உலா வரிசைகளைத் தந்திருக்கிறார்.

நூல் வெளியீட்டு விழாவில் முனைவர் சித்ரா சங்கரன், நூலாசிரியை பார்வதி பூபாலன், முனைவர்கள் சுப திண்ணப்பன், செல்லகிருஷ்ணன், இரத்தின வெங்கடேசன் மற்றும் புதுமைத் தேனீ மா அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கிருத்திகாவின் உல்லாசக் கப்பல் பயணம்




ஆர்ப்பாட்டமில்லாத சொற்களில் அமைதியான நீரோட்டத்துடன் கிருத்திகா எழுதிய ‘உல்லாசக் கப்பல் பயணம்’ நூலை சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் சிறப்பாக அரேங்கேற்றியது. சிரித்த முகத்துடனும், பண்போடும் பழகும் கிருத்திகாவை தலைவர் ஆண்டியப்பனும், செயலாளர் சுப. அருணாசலமும் நன்றாகவே பாராட்டியதைப் போல், அங்கு நடந்த நூல் பற்றிய சிறு கலந்துரையாடலை நடத்திய நம் கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோவும், நூலின் தரத்தை விபரமாகக் கூறினார். கலந்து கொண்ட மூன்று மாணவர்கள் உள்ளிட்ட ஐவரும், (சாந்தினி, செல்வி மிருதுளா, ரவிக்குமார், அதியன் ஆறுமுகம், அருணாசலம் செல்வா விநாயகம்) நூலின் உள்ளடக்கத்தைப் படித்துக் கருத்துச் சொன்னது பொருத்தமாக இருந்தது. பலனுள்ள நூல்களை எழுத வாழ்த்துக்கள்.

# சிங்கப்பூர் எழுத்தாளர் விழா 2014

மூத்த எழுத்தாளர்களான திருமதி. கமலாதேவி அரவிந்தனின் ‘கரவு’ சிறு–கதைத் தொகுப்பும், திருமதி. நூர்ஜஹான் சுலைமானின் 'தையல் மிஷின்' சிறு–கதைத் தொகுப்பும் தங்கமீன் பதிப்பகம் மூலம் நவம்பர் மாதம் 1ஆம் தேதி அன்று வெளியீடு கண்டன. சரியாக 2.30 மணிக்கு தொடங்கி 3.30 மணிக்குள் முடிந்த இந்த நிகழ்வு வழமையான புத்தக வெளியீடு நிகழ்வுகளினின்று மாறுபட்ட புது அனுபவமாக, சுருக்கமாக அரங்கேறியது. திரு. செ.ப.பன்னீர்செல்வம் 'தையல் மிஷின்' நூலையும், திருமதி. சரோஜினி செல்லக்கிருஷ்ணன் ‘கரவு’ நூலையும் நூலாய்வு செய்து அறிமுகம் செய்தனர். திருமதி. சரோஜினி தனது பரந்த இலக்கிய பரிச்சயத்தைக் கொண்டு கரவு கதைத்தொகுப்பில் விரவியுள்ள நுண்ணுணர்வுகளை தொடர்பு படுத்திப் பேசியது சிறப்பு. அதை திருமதி.கமலாதேவி அம்மாவும் ஆமோதித்தவாறே மெல்ல கைதட்டி மகிழ்ந்ததைக் காணும்போதே நூலாய்வின் துல்லிய தரம் அறியலாம். கதையாசிரியரும் தனது எழுத்துக்காக சிரமேற்கொள்ளும் அனுபவங்களை வெளிப்படுத்தினார்.

திரு.செ.ப.பன்னீர்செல்வம், ‘தையல் மிஷின்’ என்பது ‘பெண் ஒரு இயந்திரம்’ போன்று பாடுபடுவதைக் குறிப்பதோ என திருமதி. நூர்ஜஹானை கதையை வினவினார் ! சிங்கையின் மூத்த தலைமுறை வாழ்ந்த கம்பத்து வாழ்வியல் சூழலை கதைகளின் களமாக அமைந்ததை திரு.செ.ப.பன்னீர்செல்வம் சிலாகித்துப் பாராட்டினார். கச்சித நெறியாளுமை மூலம் திருமதி. அழகுநிலா இந்நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டினார்.

# கடாரம் கொண்டான் இராசேந்திர சோழன்

## அரியணை ஏறிய 1000–வது ஆண்டு விழா

சென்ற செப்டம்பரில் நடைபெற்ற வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்வாகியது. செப்டம்பர் 28ல், உமறுப் புலவர் நிலைய உள்ளரங்கம்பொங்கிப்பெருக,மேடைஉள்ளிட்ட அரங்கமுழுவதும் கிடைத்த இடமெல்லாம் தமிழ் மக்கள் அமர்ந்து பார்த்த – கேட்ட அருமையானதோர் நிகழ்ச்சி இந்தக் கலைத் திருவிழா. தமிழ் மரபின் வீரத்தை,மானத்தை, கலை வாழ்வை பல கோணங்களில் சித்தரிக்க தமிழகத்திலிருந்து வந்த கலைஞர்கள், பேச்சாளர்கள், ஆய்வாளர்கள், அனைவரும் தங்கள் பங்கை சிறப்புறச் செய்து வந்திருந்தோரின் பேராதரவைப் பெற்றனர்.அகண்டு விரிந்த அன்றைய சோழப் பரம்பரையின் செல்வாக்கயுனர்த்த குணவதி மைந்தன் தயாரித்த ஆவணப் படம் காட்டப்பட்டது. தமிழ் மன்னன் தவழ்ந்து விளையாடிய பகுதிகளை, தமிழகத்தில் இத்துறையில் ஆய்வு செய்யும் இர.கோமகன் தெளிவிபடுத்தினார்.

கவிஞர் சத்தியமூர்த்தியின் சோழன் புகழ் பாடும் பாடலுக்கு வர்ஷினி அளித்த அழகிய நடனத்துடன் துவங்கிய இந்த நிகழ்ச்சியில் வரவேற்புரை தந்த கவிமாலை காப்பாளர், புதுமைத் தேனீ மா..அன்பழகன், அன்றைய தமிழ் மன்னர்களின் படையெடுப்புகள் வணிக நோக்கிலோ, நட்பின் அடிப்படையிலோ நடந்திருப்பதாக உணரப் படுகிறதே தவிர, ஐரோப்பியர்கள் போல இந்தப் பகுதிகளில் காலனித்துவ பாணியில் தமிழாட்சியை உருவாக்க முனையவில்லையே ஏன் என ஆதங்கப்பட்டார்.

தலைமை ஏற்ற முனைவர் திண்ணப்பன், ‘சண்டேஸ்வர’ தத்துவத்தை சிறப்பாக விளக்கினார். (பொருத்தமாக, அதே சிலைக் காட்சியை அடுத்து பேசிய குடவாயில் ஆய்வாளர் தத்ரூபமாகத் தான் எடுத்திருந்த படத்தில் காட்டினார்.) ‘தமிழ்’ என்ற பகுதியில் ராஜராஜனைப் பற்றியும், அரு.ராமநாதன் இயற்றிய ராஜராஜன் பற்றிய பாடல் ஒன்றும் சிங்கப்பூர் கல்வி இலாகா இணைத்திருப்பதை நினைவு படுத்தினார்.

கி.தனவேல் அவர்களின் பேச்சு பெரிதும் ரசிக்கப்பட்டது. வரலாற்றைப் படைத்த தமிழன், வரலாறுகளை ஆவணப் படுத்தத் தவறிவிட்டதை கி.தனவேல் எடுத்துக் கூறினார். ராஜராஜன்–ராஜேந்திரன் பற்றி இவர் தந்த அரிய விவரங்கள் பெரிதும் ரசிக்கப்பட்டன. இந்தியாவில் உள்ள 60,000 கல்வெட்டுகளில், தமிழத்தில் மட்டும் 25,000 கல்வெட்டுகள் உள்ளன என்றார். வெளி நாடுகளிலிருந்து 25,000க்கு மேற்பட்ட கைதிகள், தமிழ் நாட்டிற்கு (கைதிகளாக) கொண்டு வரப்பட்டு வேலைப் பணியாற்றி இருக்கிறார்கள் என்பதும், சோழர்களின் வலுவான ஈழ, கடாரத் தாக்குதலுக்குக் காரணம், மலாக்கா நீரிணை வழியாக சீனாவுக்கான கடல் மார்க்கத்தை உறுதி செய்வதற்காக இருக்கலாம் என சரித்திர ஆய்வாளர்கள் கண்டிருகிறார்கள் என்பதும் தனவேல் குறிப்பிட்ட சில முக்கியத் தகவல்கள்.

தொல்லியல் ஆய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியன், பிரம்மிப்பூட்டும் அம்சங்களை படச் சுருளில் கண்முன் காட்டி, சோழ காலக் கலை செல்வங்கள் அனைத்தையும் நெஞ்சில் நடமாடவிட்டார். பாரதி சொல்வதற்கு முன்பே எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்களை விரும்பி எடுத்து வந்து, தஞ்சை பூமியில், கிராமப் புறங்களில் பரத்தி வைத்திருந்த சோழப் பாரம்பரியத்தை வரிசைப்படுத்தினார் குடவாயில் ஆய்வாளர்.

சோழப் பேரரசு பற்றிய ஆய்வுகள், படங்கள், சரித்திரக் குறிப்புகள் அனைத்தையும் மக்கள் முன் அள்ளிப்போட்டு அனைவரையும் சொக்குப் பொடி போட்டு மயக்கினார் எழுத்துச்சித்தர் பாலகுமாரன். சோழனின் சாமர்த்தியங்களை, போர்த் திறனை, ஆட்சியின் மாட்சியை அவர் வரிசைப்படுத்திய விதம், ஒரு நாவலின் பகுதிகளைப் படிப்பது போன்ற பிரமிப்பை உண்டாக்கியது. “சினிமாவுக்கு மதிப்பு கொடு. ஆனால் அதுவே வாழ்வல்ல’ என்ற ‘பன்ச் டயலக்’ தான் அந்த அனுபவ எழுத்தாளரின் கடைசி வார்த்தைகள். விழாவின் நிறைவிற்கு உதவிய அத்தனை பேருக்கும் மன நிறைவோடு நன்றி சொன்னார் நிகழ்ச்சியின் பொறுப்பாளர்களில் ஒருவரான ப .புருஷோத்தமன்.

*எழுத்தாளர் பாலகுமாரனுக்கு சிறப்பு*

# வைரமுத்துவின் பாடல்களில் காதல்!

முனைவர் மன்னார்குடி ராஜகோபாலன்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் தொடங்கி இன்றுவரை காதல் என்கிற மெல்லிய உணர்வைத் தங்கள் வார்த்தைகளைக் கொண்டு வர்ணிக்கத் தலைப்பட்டோர் ஏராளம். அவற்றுள் கவிஞர்களின் பங்கு தாராளம். மனமொத்த காதலின் மகத்துவத்தை விவரிக்க அகநானூற்றுப் பாடல் ஒன்றினை உதாரணம் காட்டலாம்.

**"யாமே, பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்**
**இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே"- கபிலர்**

அதாவது காதலனும் காதலியும் ஈருடலும் ஒரு தலையும் வாய்க்கப் பெற்ற பறவைபோல காதலால் கட்டுண்டு கிடக்கின்றனராம். வள்ளுவம் காதலர்கள் இருவரையும், உடம்பும் உயிரும்போல உறவில் கலந்தவர்களாகச் சித்தரிக்கிறது.

**உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு - (குறள்1122)**

இவ்வாறு பைந்தமிழ் மரபு போற்றும் காதலைக் கவிப்பேரரசு தன் கவிதைகளின் வாயிலாகவும் திரைப் பாடல்களின் வழியாகவும் போற்றத் தவறியதில்லை.

**"காதலித்துப் பார்,**
**உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும்,**
**உலகம் அர்த்தப்படும்**
**இராத்திரியின் நீளம் விளங்கும்,**
**உனக்கும் கவிதை வரும்"**

என்று காதல் வயப்பட்ட மனத்தின் துடிப்புகளைத் தன் கவிதை வரிகளில் தந்தவர் கவிஞர் வைரமுத்து. காதல் என்ற சொல்லிற்கு கவிஞர் வைரமுத்து தரும் விளக்கம் அப்பழுக்கற்ற காதலின் ஆழத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. 'விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவு' என்று காதலைப் போற்றுகிறார் நம் கவிஞர்.

'ஜீன்ஸ்' என்ற படத்தில் இடம் பெற்ற அவரது பாடலில்

**"பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன்**
**அடடா பிரம்மன் கஞ்சனடி**
**சற்றே நிமிர்ந்தேன் தலைச் சுற்றிப் போனேன்**
**ஆஆ அவனே வள்ளலடி**

என்று வடித்திருக்கிறார். படைத்தவன் அவளுக்கு மெல்லிய இடையைத் தந்தருளினான் என்பதை நயம்படக் கூறியவர், தொடர்ந்து அவளது செல்வாக்கைக் கண்டு வியந்து பிரம்மனையும் பாராட்டி மகிழ்கிறார். சொல்ல வரும் கருத்தை இவ்வாறு இலைமறைக் காயாக வெளிப்படுத்துவது கவிஞரின் சிந்தனைச் சிறப்புக்குக்கும் அழகியல் உணர்வுக்கும் ஒரு சான்றாகும்.

நளவெண்பாவில் இடம்பெற்ற ஒரு பாடலை இதனோடு ஒப்புநோக்கலாம்.

**கொய்த மலரை கொடுங்**
**கையினால் அணைத்து**
**மொய் குழலில் சூட்டுவான்**
**முன் வந்து தையலாள்**
**பாதாரவிந்தத்தே சூட்டினான்**
**பாவை இடைக்கு**
**ஆதாரம் இன்மை அறிந்து (பாடல் 186)**

காதலியின் கூந்தலில் பூச்சூட விழைந்த காதலன் அவளது மெல்லிடை கண்டு அம் முயற்சியைக் கைவிட்டு விடுகிறான்.

அதற்கு அவன் சொல்லும் காரணம் நம் இடையேயும் ஒரு தாக்கத்தை, ஒரு தாகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. எங்கே அவள் தலையில் பூவைச் சூட்டினால் அதன் பாரம் தாங்காமல் அவளது மெல்லிடை உடைந்துவிடும் என்று கருதி அவளது பாதங்களில் அம்மலர்களைச் சமர்ப்பித்துவிட்டானாம் அவள் காதலன். இத்துடன் கவியரசர் கண்ணதாசனின் இடை பற்றிய கற்பனையும் நம்மிடைத் தோன்றி நம்மை வியக்க வைக்கிறது. காதலியின் 'இடை' பெரும் படையாக வந்து கொல்கிறதாம்.

**உந்தன் கொடி இடை இன்று,**
**படைகொண்டு வந்து கொல்வதும் ஏனடியோ!**
**(நிலவுக்கு என்மேல்)**

காதலியின் கொடி இடை கவியரசருக்கு இச்சையைத் தூண்டாமல் அச்சத்தைத் தந்ததாம். கவிஞர்களின் கற்பனை ஆற்றல் அளவு கடந்தது என்பதை விட நம்மைப் புதிய கோணத்தில் சிந்திக்கத் தூண்டுவன என்பதே அதன் சிறப்பாகும்.

'பம்பாய்' என்ற படத்தில் இடம் பெற்ற கவிஞரின் மற்றொரு பாடல் காதலில் வகை தொகை அறியாது வலியில் துடிக்கும் ஒரு பெண் மனத்தை நம் மனக்கண் முன் காட்சிப் படுத்துகிறது.

**கண்ணாளனே எனது கண்ணை நேற்றோடு காணவில்லை**
**என் கண்களைப் பறித்துக்கொண்டு ஏனின்னும் பேசவில்லை**

என்று பாடுகிறார். காதலுக்கு கண்ணில்லை என்பார்கள். ஆனால் கண்ணொத்த காதலன் கண்முன் தோன்றாத போது கண்களை இழந்ததுபோல் அரற்றுவது காதலில் விழுந்த கன்னியர்க்கு வழக்கம் போலும்.

**ரத்தம் கொதிகொதிக்கும் உலை கொதித்திடும் நீர்க்குமிழ் போல**
**சித்தம் துடித்துடிக்கும் புயல் எதிர்த்திடும் ஓர் இலை போல**
**பனித்துளிதான் என்ன செய்யுமோ**
**மூங்கில் காட்டில் தீ விழும்பொழுது**
**மூங்கில் காடென்று ஆயினள் மாது- (கண்ணாளனே..)**

எனத் தொடரும் வரிகள் காதல் அந்தப் பூவுக்குள் பெரும் பூகம்பத்தை அல்லவா ஏற்படுத்திவிட்டது என்று

**நகைச்சுவைப் பேச்சின் நாட்டாண்மை-இலக்கிய நயம் தெரிந்த முனைவர் ராஜகோபாலன், கவிப்பேரரசின் இன்றைய சினிமாப் பாடல்களை பழைய இலக்கிய வரிகளுடன் பின்னிப் பிணைத்து, கவித்துவ உணர்வை சிந்த விடுகிறார் இந்தக் கட்டுரையில்!**

நம்மை இரக்கம் கொள்ள வைக்கிறது. காதல் புயல் போல அசுரத் தனமாக வருகிறதாம். அவளோ அந்தப் புயல் காற்றில் அலைக்கழிக்கப்படும் சிறு இலைபோல் அல்லலுறுகிறாளாம்! இங்கே புயல் எதிர்த்திடும் ஓர் இலைபோல என்ற அழகான உவமையின் உள்ளார்ந்த கற்பனை வளம் கவிஞரின் தனிச் சிறப்பாக மிளிர்கிறது. நம் கவிஞரின் இப் பாடலை முணுமுணுக்கும்போது நம்மையும் அறியாமல் நம் பாட்டன் வடித்த குறுந்தொகைப் பாடல் ஒன்று மனத்தில் நிழலாடுகிறது.

**சிறு கோட்டுப் பெரும் பழம்**
**தூங்கியாங்கு, இவள்**
**உயிர் தவச் சிறிது, காமமோ பெரிதே!**
**(குறுந்தொகை)**

என்ற பாடல் வரிகள்தாம் அது.

மலையில் ஒரு பலா மரத்தில் சிறிய காம்பில் ஒரு பெரிய பலாப் பழம் தொங்குகிறது. அது பார்ப்போர் மனத்தில் அய்யோ மெல்லிய அக்காம்பிலிருந்து இந்தப் பழம் அறுந்து விழுந்து விடுமோ என்ற அச்ச உணர்வினை ஏற்படுத்துகிறது. அதுபோல் தலைவியின் உயிர் அந்த காம்பு போன்று மெலிந்ததாம். அவள் தலைவனின் மீது கொண்டிருக்கும் காதலோ அந்தப் பலாப் பழம் போன்று பெரியதாம். ஆக, பாடலின் நோக்கம் புரிகிறதல்லவா? அவளது காதல் அவள் உயிருக்கே ஊறு செய்துவிடும் என்று சொல்லி தலைவனுக்கு எச்சரிக்கை செய்வதே இப்பாடலின் நோக்கம். இதன் வாயிலாக, காலம் மாறுகிறது! கவிஞர்கள் மாறுகிறார்கள்! தமிழனின் காதல் உணர்வு மாறுவதில்லை என்றே கூறத் தோன்றுகிறது.

கண்ணும் கண்ணும் கலந்து காதல் உருவானதாக்கூறும் நம் இலக்கியங்கள் பல. ஆனால் கண்ணிழந்த இளைஞர் ஒருவர் தன் மனக் கண்வழியே காதல் கோட்டையைக் கட்டி அதில் உலாவிக் களிக்கிறான். காதலின் வெம்மை கண்ணுக்குள் முள்ளை வைத்துத் தைத்ததுபோல் உறுத்துகிறது. காதலன் இப்படி விரக தாபத்தில் துன்பப்படுவதைக் கண்ட காதலி பாடுகிறாள்

**நெஞ்சம் பொறு! கொஞ்சம் இரு!**
**தாவணி விசிறிகள் வீசுகிறேன்**
**மன்மத அம்புகள் தைத்த இடங்களில்**
**சந்தனமாய் எனைப் பூசுகிறேன்**
**(அந்தி மழை பொழிகிறது)**

இப்படி கவிஞர் வைரமுத்து அவர்கள் காட்டுவதுபோல் காதலியின் அனுசரணையும் அக்கறையும் கிடைத்து விட்டால் வாழ்க்கை ரசனைக்குரியதுதான்.

ஆனால் முளைத்த காதல் எல்லாம் கிளைத்ததும் இல்லை. அப்படி கிளைத்த காதல் எல்லாம் நிலைத்ததும் இல்லை. சமுதாயக் கட்டுப்பாடுகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சாதிய பாகுபாடுகள் இந்தத்தோல்விக்குக்காரணமாகின்றன. ஆசை ஆசையாய் காதலிக்கும் இளம் ஜோடி வாசலுக்கு வாழையையும் தோளுக்கு மாலையையும் எதிர்பார்த்து வண்ணக் கனவுகளில் மிதக்கிறது. ஆனால் அந்த ஆசை நீர்க்கோல மாகிறது! சாதித்தீ அந்த காதலை சறுகாக்க முயல்கிறது. அவளை வேறு ஒருவனுக்கு மணமுடிக்க ஏற்பாடாகிறது. மனம் வெதும்பிய காதலி இப்படிப் பாடுகிறாள்.

**சோலை புஷ்பங்களே என் சோகம் சொல்லுங்களேன்**
**கண்ணாளனை கண்டாலென்ன**
**என் வேதனை சொன்னாலென்ன**
**பன்னீருக்கும் மண்ணெண்ணைக்கும் கல்யாணமாம் சாமி**
**காவலுக்கு நாதி இல்லையா**
**என்னாளும் காதலுக்கு நீதி இல்லையா?**

மனத்திற்குப் பிடிக்காத ஒருவனோடு தன்னைத் திருமண பந்தத்தில் இணைத்து வைப்பதென்பது பன்னீரையும் மண்ணெண்ணையையும் சேர்க்க முயற்சிப்பது போன்றது என்று ஒரு அழகான ஒப்பீட்டை பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகை தந்திருக்கிறார் கவிப்பேரரசு.

இன்னொரு சூழலைக் காண்போம். காதலன் உயிருக்குயிராய் நினைத்த காதலிக்கு வேற்றிடத்தில் திருமணம் முடிந்துவிடுகிறது. அவளோ வாழ்க்கைப்பட்ட ஊருக்கு வண்டிகட்டிப் போகிறாள். புதிய சேலையில் பழைய நினைவுகளோடு வண்டிக்குள் பயணிக்கிறாள். அவள் நெஞ்சுபடும் வேதனையைச் சொல்லி மாளாது. தூரத்தே நின்று இக்காட்சியைப் பார்க்காறான் அவன். அவன் வாழ்வின் அதிகபட்சத் துயரம் இதுதான். அவன் உயிர் வண்டியோடு போகிறது. இனி ஒவ்வொரு நிமிடமும் அவள் நினைவுகளோடும், அது தரும் வேதனையோடும் நடைப் பிணமாய் வாழ்வது நரக வாழ்வுதான் என்று நினைத்து ஒரு முடிவுக்கு வருகிறான்.

**ராசாத்தி என் உசுரு என்னுதில்லை**
**பூச்சூடி வாக்கப்பட்டு போற புள்ள**
**நீ போனா என் உடம்பு மண்ணுக்குள்ள**
**ராவோடு சேதி வரும் வாடி புள்ள**

உன்னோடு வாழ முடியாவிட்டால் அதற்கு மாற்றாக மண்ணோடு வாழ்வதுதான் சரி என்று நினைக்கும் இவன் காதலின் திண்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

கவிஞர் வைரமுத்து அவர்களும் இதுபோன்று ஏராளமாக காதல் ரசம் சொட்டும் பாடல்களைத் தந்து கொண்டிருக்கிறார் என்பதும், அது ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று வருகிறது என்பதும் நம் கவிஞரின் புலமைக்கு கட்டியம் கூறுவதாகும்.

# இந்தியப் புத்தாண்டு கொண்டாட்டம் 2014

இந்தியப் புத்தாண்டு 2014 கொண்டாட்டத்தை லிஷா (LISHA) அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். 14 சமூக அமைப்புகளின் ஆதரவுடனும் பங்கேற்புடனும் இந்த கொண்டாட்டம் நடைபெற்றது. இரண்டு முக்கிய நிகழ்வுகளான இந்தியப் புத்தாண்டு மற்றும் தமிழ்ப் புத்தாண்டை குறிக்கும் வகையில் சித்திரைகலை இரவு கொண்டாட்டங்கள் ஏப்ரல் 18 மற்றும் ஏப்ரல் 19 2014 தேதிகளில் நடைபெற்றன.

## நாள் 1 : ஏப்ரல் 18, 2014

இந்திய இனத்தவரின் பாரம்பரிய திருமணம் என்ற கருப்பொருளில் கண்காட்சி படைக்கப்பட்டது. கண்காட்சியில் தமிழ்மொழி பண்பாட்டுக்கழகம் (TLCS) மற்றும் தமிழர் பேரவை (TRC) இணைந்து பங்கேற்றன. தமிழ் திருமண நிகழ்வைக் குறிக்கும் திருமண மேடை மற்றும் அலங்காரப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தமிழ் திருமண அலங்காரத் தோரணமாக வாழை மரங்கள் கண்காட்சி வாயிலின் இருபுறமும் அழகு சேர்த்தன.

ஏப்ரல் 18 ம் தேதியிலிருந்து பொது மக்களுக்கு கண்காட்சி திறந்துவிடப்பட்டது. பள்ளிகளுக்கு சிறப்பு பார்வை அங்கம் ஏப்ரல் 21, 25 மற்றும் 28, 30 ம் தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வினையொட்டி விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் அவ்விழாவில் பங்கேற்ற மற்ற அமைப்புகளின் செய்திகள், புகைப்படங்கள், இந்தியப் புத்தாண்டு கொண்டாட்டங்கள் மற்றும் பாரம்பரிய திருமணங்கள் பற்றிய விவரங்கள் அதில் இடம் பெற்றிருந்தன.

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் (TLCS) மற்றும் தமிழர் பேரவையும் (TRC) இணைந்து ஏற்பாடு செய்திருந்த உருமி மேளம் மற்றும் மயிலாட்டம் ஆகியவை மேடைகளில் களை கட்டின. கலைஞர்கள் வண்ண ஆடைகள் உடுத்தி மேடையில் வரிசையாக நின்று தாளலயத்துடன் உருமி வாசித்தனர். மயிலாட்டக் குழுவினர் கரகாட்டம் மற்றும் ஒயிலாட்டம் போன்ற தமிழரின் தொன்மைக் கலைகளையும் கண்களுக்கு விருந்தாக்கினர்.

இந்தியப் புத்தாண்டு கொண்டாட்ட ஏற்பாட்டு குழுவின் தலைவரான திரு.மு.ஹரிகிருஷ்ணன் தன் வரவேற்புரையில் இத்தகைய நிகழ்வுகள் பல்வேறு இந்திய சமூகங்களிடையே நிலவும் ஒருமைப்பாட்டினை பறைசாற்றுவதாகக் கருத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினர் அமைச்சர் திரு.ஹெங் ஸ்வீ கியட் குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார். ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் பல இந்திய இனத்தவரின் பாரம்பரிய திருமணங்களைத் தாம் கண்டு களிக்கும் வாய்ப்பை இவ்விழா அளித்ததாக சிறப்பு விருந்தினர் மகிழ்வுடன் குறிப்பிட்டார்.

முன்னதாக, பங்கேற்ற பல்வேறு இந்தியச் சமூகங்களைப் பிரதிநிதித்து மணமகன், மணமகள் அலங்காரத்தில் இருந்த குழந்தைகள் சிறப்பு விருந்தினரான அமைச்சருக்கு உற்சாக வரவேற்பை அளித்தனர். கண்காட்சி அரங்குகளை அமைச்சர் மற்ற விருந்தினர்களுடன் இணைந்து பார்வையிட்டார். சில கண்காட்சி அரங்குகளில் திருமணச் சடங்குகள் அமைச்சருக்கு நிகழ்த்தி காண்பிக்கப்பட்டன.

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் (TLCS) கண்காட்சி அரங்கில் தமிழ் திருமண நிகழ்வு மற்றும் கழகத்தின் பல்வேறு செயலாக்கங்கள் பற்றிய காணொளி தொடர்ந்து ஒளிபரப்பு செய்யப்பட்டது.

## நாள் 2: ஏப்ரல் 19, 2014

அமைச்சர் திரு.ஈஸ்வரன் (பிரதம மந்திரி அலுவலக அமைச்சர், உள்துறை மற்றும் வர்த்தக தொழில் துறை இரண்டாம் அமைச்சர்) இரண்டாம் நாள் விழாவின் சிறப்பு விருந்தினராக வருகையளித்தார். இரண்டாம் நாளில் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டமாக சித்திரைக் கலை இரவு நடைபெற்றது.

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் (TLCS) ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி அரங்கிற்கு வந்த அமைச்சர் திருமண அலங்காரத்தில் இருந்த குழந்தைகளுடன் பேசி மகிழ்ந்து, திருமண அலங்காரங்கள் மற்றும் சடங்குகளை ஆர்வமுடன் பார்த்து மகிழ்ந்தார்.

அமைச்சர் குத்து விளக்கேற்றி இரண்டாம் நாள் விழாவினைத் தொடங்கி வைத்தார். அமைச்சர் தம் உரையில் ஒருமைப்பாடு மற்றும் சகிப்புத் தன்மையின் தேவையை வலியுறுத்தினார். இந்திய மற்றும் சிங்கைக் கலைஞர்களின் பல்சுவை கலைநிகழ்ச்சிகள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி விழா இனிதே நிறைவுற்றது.

**– ராஜு ரமேஷ் & தாம் சண்முகம்**

# Nature's gift to you

IHA Acne Face Wash when used regularly cleanses facial skin of all the oily secretions & moisturizes the skin, clean & fresh for a longer time. Its herbal actives also regulate secretion of excessive oils from oil glands so that there is less chances of bacterial growth associated with acne and pimple.

Janet Real Herbs
www.janet-ayurveda.com

Your skin needs regular cleansing, refining, moisturizing to look beautiful & healthy. Unlike ordinary fairness creams, the Janet Fair Skin range effectively fulfills all these skin care needs, improving skin health, giving you fairer, Softer Beautiful skin naturally!

Unique Hair Darkening goes deep into the hair root to darken the hair quickly & effectively. The Triple Action Formula acts as a Conditioner -Shampoo-Darkener. It provides shiny, silky, smooth brown and black hair. It provides the safety hair dye experience.

**SRI LAVENDER MULTIMART PTE.LTD**
**BLK 662 BUFFALO RD #01-21 SINGAPORE 210662**
**Tel: 62991747 lavkuberan@yahoo.com**

**BEAUTY FIVE**
**MALAYSIA**
**Tel: 0127156160**

*புதுவை சட்ட மன்ற உறுப்பினர் திரு வைத்தியலிங்கம் ஏ பி ராமனுக்கு சிறப்பு செய்கிறார். முனைவர் இரத்தின வெங்கடேசன், கவிஞர் பொன்னடியான், கலைமகள் கிழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் மற்றோர்.*

# ஏ.பி.ராமனுக்கு புதுவையில் விருது !

மூத்த எழுத்தாளரும், 'தமிழ்மணி'யின் தலைமை ஆசிரியருமான திரு.ஏ.பி.ராமனுக்கு, கடந்த டிசம்பரில் தமிழ் நாட்டின் புதுச்சேரியில் பேராசிரியர் க.ப.அறவாணன் பெயரிலான தமிழ் விருது அளிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

சமூகம், கலை, மொழி, இலக்கியத்திற்குத் தொண்டாற்றி வரும் அயலகத் தமிழருக்கான இந்த விருது, புதுவை இரத்தினவேலு வெங்கடேசன் அறக்கட்டளை சார்பாக 14.12.14 அன்று புதுவைத் தமிழ்ச் சங்க அரங்கில் வழங்கப்பட்டது.

அறக்கட்டளையின் தலைவர், முனைவர் இரத்தின வெங்கடேசன் (சிங்கப்பூர் இலக்கியக் களத்தின் தலைவர்) தனது உரையில் ஏ.பி.ராமனின் தமிழ்ப் பணிகளை, நீண்ட கால எழுத்தாற்றலை, அனைவரையும் அணைத்துச் செல்லும் பாங்கினை எல்லாம் விரிவாக எடுத்துக் கூறினார்.

கவிஞர்களை உருவாக்கும் கவிஞர், பாரதிதாசனின் இறுதி நாள் வரை அவரின் மாணாக்கனாகப் பணியாற்றிய கலை மாமணி பொன்னடியான், அவருடைய முல்லைச்சரம் இதழில் ராமனின் பங்கேற்பை விவரித்ததுடன், '700 நாடகங்கள் எழுதிய எங்கள் ஏ.பி.ஆருக்கு ஈடாக எழுத இன்னொருவர் வர வாய்ப்பில்லை' என அழுத்தந் திருத்தமாகக் கூறினார்.

அன்றைய சிறப்புப் பேச்சாளர், கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர், அன்றைய பெருங் கூட்டத்தினர் ரசிக்கும் அளவு தன பேச்சை அருமையாக அமைத்துக் கொண்டார். 'ஏ.பி.ஆரின் எழுத்தில் நையாண்டி கலந்திருக்கும்' என்றும் அவர் சொல்லியதை மக்கள் நன்கு ரசித்தனர்.

புதுவை சட்ட மன்ற உறுப்பினர்கள் க.லட்சுமி நாராயணன், மு.வைத்தியநாதன் கலந்து கொண்டு பேசிய இவ் விருது வழங்கு விழாவில், கவிஞர் ஷானின் கூட்டு முயற்சியில் உருவான ஏ.பி.ராமன் பற்றிய விளக்க நிகழ்ச்சியை வந்திருந்தோர் திரையில் பார்த்து ரசித்தனர்.

இணைப்புரை வழங்கிய கவிஞர் பூங்குழலி பெருமாள், நன்றிஉரை தந்த புவனேஸ்வரி சிங்காரவேலன், வரவேற்புரை நல்கிய கவிஞர் தி.கோவிந்தராசு, நோக்க உரை அளித்த பேராசிரியர் நா.இளங்கோ போன்றோர் நிகழ்ச்சிக்குப் பெருமை சேர்த்தவர்கள்.

பாரதியும், பாரதிதாசனும் கவிதா மண்டலங்கள் அமைத்து, நகர் வலம் வந்த புதுவை பூமியில் தரப்பட்ட இவ் விருதைத் தான் மகிழ்வோடு ஏற்பதாகவும், வயது முதிர்ந்த தனக்கு மேலும் உற்சாகம் தந்து தன்னை மேலும் ஆரோக்கியமுடன் வாழ வைக்கும் திட்டமாகவே தான் கருதுவதாகவும், 83 வயது திரு.ஏ.பி.ராமன் தனது ஏற்புரையில் குறிப்பிட்டார்.

# "தமிழ்ப்பணி தொடரும்" கல்வித் துறையினின்று ஓய்வு பெறும் முனைவர் திண்ணப்பன்

"கல்விப் பணியிலிருந்து தான் நான் ஓய்வு பெறுகிறேன். தமிழ்ப் பணியிலிருநதல்ல. சிங்கப்பூரின் தமிழ் சமுதாயத்தினிடமிருந்தும் அல்ல. என் பணி எப்போதும்போல் தொடரும்" என்று சொன்னவர், நம் மதிப்பிற்குரிய முனைவர் சுப.திண்ணப்பன் ஆவார்.

முப்பதாண்டு காலத் தொடர் கல்விச் சேவைக்குப் பின், கடந்த மாதம் தன் கல்விப் பணி யிலிருந்து ஓய்வு பெற்ற அவரை 'தமிழ்மணி' சந்தித்தது.

நீடித்த கல்விப் பணி, கற்பித்தலை ஆதாரமாகக் கொண்ட தமிழ்ப் பாடத் திட்டங்களுக்கு ஆலோசனை, தமிழ்க் கல்வி உருவாக்கத்தின் பின்னணியில் ஆழமான ஆய்வுகள், சிங்கப்பூர் தமிழமைப்புகளின் வளர்ச்சியில் பங்களிப்பு எனத் தன் வாழ் நாளின் பெரும் பகுதியை செலவழித்த முனைவர் திண்ணப்பன், சிங்கப்பூரின் தமிழ் மொழி வளர்ச்சியை ஆரம்ப காலத்திலிருந்து பார்த்தவர்; கல்வி இலாக்காவின் பல நிலை மேம்பாடுகளை நேரில் கண்டவர்; இங்கு ஒரு நிலையான தமிழ்க் கல்விக் கூடம் உருவானதில் பெரும் பங்காற்றியவர்; தேசியப் பல்கலைக் கழகம், மற்ற தனியார் பல்கலைக் கழகங்களில் உள்ளூர்-அயல் நாட்டு மாணவர்களுக்கு தமிழ் ஆசானாக விளங்கியவர்; எதிர்கால மொழி நிர்மாணத்திற்கு திட்டங்கள் வகுத்து அரசிற்கு உறு துணையாக நின்றவர்.

அத்தகைய பெருமைக்குரிய ஒரு தமிழ் மொழி உழைப்பாளி, தன் நீண்ட கால சேவைக்குப் பின் ஓய்வு பெறுவது நம்மைப் பொறுத்தவரை சற்று சீரணிக்க முடியாத செய்தியாக இருந்தாலும், அவருடைய தொடர்ந்த தமிழ்ப் பணி நமக்கு மேலும் நிறையக் கிடைக்க இருப்பதில் நாம் பெருமைப் படுகிறோம்.

1982 ல் சிங்கப்பூரின் கல்வித் துறையில் காலடி எடுத்து வைத்த இந்த தேவகோட்டைக்காரர், சிங்கப்பூர் கல்வித் துறையின் அகல-நீளங்கள் நன்கு தெரிந்தவர். 1987ல் இணைப் பேராசிரியராக முன்னேறிய இந்த தமிழ் ஆசான், படிப்படியாக பல உயர் தகுதிகளைக் கண்டு , இன்றைய நிலைக்குத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். இவருடைய மொழித் திறனை வியந்து பாராட்டிய கல்விமான்கள், தமிழறிந்த ஆதீனங்கள், பல்லின மொழி ஆய்வாளர்கள் நிறைய உள்ளனர். இவர் வகுத்துத் தந்த மொழிப் பாதையில் தொடர்ந்து நம் தமிழ்ப் பரம்பரை நல்ல பலன்களை அனுபவிக்கும் என்பது அனைவரின் கருத்தாகும்.

அனைவரையும் அணைத்துச் செல்லும் பண்பாளரான சுப.திண்ணப்பன், சைவ, வைணவ இலக்கியங்களில் அதிக ஆழ அனுபவங்களைப் பெற்றிருப்பவர். சங்க இலக்கியங்களிலும் அதிகப் பாண்டித்தியம் பெற்றிருக்கும் இவர், ஏராளமான ஆன்மீக மாநாடுகளையும், சைவப் பெரியார்களின் விழாக்களையும் முன்னின்று நடத்தி வருபவர்.

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகளின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் பல்லாற்றாலும் துணை நிற்கும் முனைவர் சுப.திண்ணப்பன் அவர்கள், சிங்கப்பூரையும், தமிழையும் மறக்கமாட்டேன் என்கிறார். 'என் தமிழ் வாழ்வு தொடரும்' என மனம் லயித்துக் கூறும் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்கள் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து நம் தமிழ்ப் பணிகளுக்குத் தொடர்ந்து உறு துணையாக நிற்பார் எனத் திடமாக நம்புகிறோம்.

– ஏ.பி.ஆர்.

# 21 ஆம் நூற்றாண்டில் தமிழ் சினிமா

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கிய செல்லுலாய்ட் கனவு இன்றும் பல்வேறு மாற்றங்களோடு உலக மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. மேலை நாட்டில் தொடங்கிய திரைப்படக்கலை இந்தியர்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக, தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்களை உருவாக்கிய ஒன்றாக இன்று வரை இருந்து வருகிறது.

மேடை நாடகங்களும், புராணக் கதைகளும் திரைப்படங்களாக வெளிவந்த 1930கள், சமூகக் கதைகள், இந்திய விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கதைகள் என 1940களில் மாறியது. நன்றாக பாடத் தெரிந்தவர்கள் கதாநாயகர்களாக பரிமளித்தனர். பிரபல கர்நாடக இசைக் கலைஞர் ஜி என் பாலசுப்ரமணியம் கதாநாயகனாக நடித்தது தன் மயக்கும் குரலால் மட்டுமல்ல வசீகரம் பொருந்திய அழகினாலும் தான். அழகு, நடிப்பாற்றல், பாடும் திறமை மூன்றும் இணைந்த எம் கே தியாகராஜ பாகவதர், பி யூ சின்னப்பா என்ற இருவரும் 1940களில் புகழ் பெற்ற கதா நாயகர்களாக விளங்கினார்கள். அவர்கள் இருவரும் நடிப்பில் மட்டுமே தங்கள் புகழை நிலை நாட்டினர். அரசியலில் ஈடுபட வேண்டும் அதன் மூலம் பதவி பெற வேண்டும் என்ற கற்பனை அவர்களிடம் இல்லை.

1950களில் திராவிடக் கட்சிகளின் தாக்கம் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது தமிழ் திரைப்படங்களில் இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆதிக்கம் செலுத்திய 1950களில் திராவிடக் கட்சிகள் தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கும் அதன் மூலம் தமிழ் நாட்டில் தங்கள் ஆட்சியை அமைப்பதற்கும் மேடைப்பேச்சு, பத்திரிகைகள், புத்தகங்கள், திரைப்படங்கள் மூன்றையும் சரியான விகிதத்தில் பயன்படுத்தி வெற்றி கண்டவர்கள் திராவிடக் கட்சித் தலைவர்கள். அப்போது அறிமுகமான நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் திராவிடக்கட்சித் தொண்டராக அந்தக் கட்சி கொள்கைகளைச் சார்ந்த திரைப்படங்களிலும் நடிக்கத் தொடங்கினார். 1940களில் சிறு வேடங்களில் தலை காட்டி வந்த திரு எம் ஜி ராமச்சந்திரன் 1950களில் தன்னை கதாநாயகனாக நிலை நிறுத்திக் கொள்ள திராவிடக் கொள்கைகள் மறைமுகமாக உதவியது. இந்த இரு கதா நாயகர்களும் தொடக்க காலத்தில் நண்பர்களாக இருந்தனர். பின்னர் இருவரும் இரு துருவங்களாக இருவரும் தனித்தனியே பிரம்மாண்ட கதாநாயகர்களாக வலம் வந்தனர். கிட்டத்தட்ட இருபது வருடங்கள் தமிழ்த் திரைப்பட வளர்ச்சி, வீழ்ச்சி, சிந்தனைகள், ரசிகர்கள், திரைப்படங்கள் இந்த இரு பிரம்மாண்ட கதாநாயகர்களைச் சார்ந்தே இருந்தன. இந்த வளர்ச்சியினால் தமிழ்த் திரைப்படம் இன்னும் அதிக அளவில் அறிவு பூர்வமாக வளர்ச்சி பெறாமல் திரைப் படங்களை ரசிக்கும் ரசிகர் களை உருவாகாமல் கதாநாயகர்களை பூஜிக்கும் ரசிகர்கள் உருவானது ஒரு தற்செயலான துரதிருஷ்டச் சூழல்!! மலையாளம், கன்னடம், தெலுங்கு, வங்காளம், ஹிந்தி, மராத்தி போன்ற திரைப்படங்களில் வணிக ரீதியாக வெற்றியடையும் திரைப்படங்களுக்கு இணையாக அறிவுபூர்வமானத் திரைப்படங்கள் 1960, 70களில் வந்த போது நம் தமிழ்த் திரைப்பட உலகம் வெள்ளிக்கிழமை தோறும் தென்னக ஜேம்ஸ்பாண்ட் ஜெய்சங்கர் திரைப்படங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தன. பண்டிகைகள் தவறாமல் எம்ஜியார், சிவாஜி திரைப்படங்கள், அதில் எவை வெற்றி பெற்றவை, எவ்வளவு கலெக்ஷன், நூறுநாள் ஓடிய படம், இருநூறு நாள் ஓடிய படம், 250 நாள் ஓடிய படம் என்று போஸ்டர் அடித்து ஒட்டுவதில் எம் ஜி ஆர், சிவாஜி ரசிகர்களிடையே போட்டி நடந்து கொண்டிருந்தது. ஒருவர் நடிகராகவே தன்னை நிலை நிறுத்திக் கொண்டு நடிகர் திலகமாக வாழ்ந்தார். மற்றவர் மக்களுக்கு நல்லது செய்ய வந்திருக்கும் தலைவனாக தனக்கு ஒரு பிம்பத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் தமிழ்நாட்டு முதலமைச்சரானார். 1970களில் திரைப்பட வானின் இரு சந்திர சூரியர்களுக்கும் நடுத்தர வயதாகி விட அடுத்த தலைமுறையின் இரு நட்சத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கின. இவர்கள் இருவரும் தங்களுக்கு என்று எந்த பிம்பங்களையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் இயக்குனர்களின் நடிகர்களாகவே



இருந்தனர். இயக்குனர் திரு பாலச்சந்தர், திரு பாரதிராஜா இவர்களின் செல்லப்பிள்ளையாக காதல் இளவரசன் என்று அழைக்கப்பட்ட திரு கமலஹாசன், ஸ்டைல் கிங் ரஜினிகாந்த் இருவரும் இரு நட்சத்திரங்களாக பிரகாசிக்கத் தொடங்கினர். 1970களின் இறுதியிலிருந்து 1990கள் வரை இருவரும் தமிழ்த் திரையுலகத்தின் இரண்டு பேர்களாக வலம் வந்தனர். நம் தமிழ் திரைப்படத்துறைக்கும் இரண்டு பேருக்கும் என்ன ராசியோ? எம் கே தியாகராஜ பாகவதர், பி யூ சின்னப்பா, பிறகு எம் ஜி ஆர், சிவாஜி, அடுத்த இருவர் கமலஹாசன், ரஜினிகாந்த். 2000ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அடுத்த இருவர் யார் என்ற கேள்விகள் எழுந்தன. ஆனால் இளம் தலைமுறை நடிகர்களும் அவர்கள் ரசிகர்களும் எம் ஜி ஆர், சிவாஜி காலத் தலைமுறையினரைப் போல தங்களை எதிரிகள் என்று காட்டிக் கொள்வதில்லை. நடிகர்களும் ஒருவருடன் ஒருவர் நட்புறவுடன் பழகுவது போல ஒரு பாவனையுடன் வலம் வருகின்றனர்.

திரைப்படங்கள் ஒரு வருடம் ஓடியவை, இரண்டு தீபாவளிகள் கண்டது, 100 நாள், 200 நாள் ஓடியவை என்ற காலமெல்லாம் போய் 25 நாள் 25 ஆவது காட்சி என்று சொல்லுமளவிற்கு குறுகிய காலத்திற்குள் புகழ் பெற்று நல்ல விமர்சனங்கள் கிடத்தால் போதும் என்ற நிலை இன்று! இதற்கு ஒரு முக்கியக் காரணம் கம்பி வடத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். அப்போது இந்த திரைப்படம் பார்ப்பதற்கா இரண்டு மணி நேரம் வரிசையில் நின்று டிக்கெட் எடுத்துப் பார்த்தோம் என்று நாம் அலுத்துக் கொள்ளும் அளவிற்கு திகட்ட திகட்ட எல்லா சானல்களிலும் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. புது திரைப்படங்கள் திரைப்பட அரங்கத்திற்கு வருவதற்கு முன்பாகவே எந்த சானல் எந்த விடுமுறை நாளில் ஒளிபரப்பப் போகிறது என்று செய்தி வந்து விடுகிறது. சமூக ஊடகங்களில் உலவும் விமர்சனங்கள்! முகநூல், டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் படம் சுமார் தான், சொதப்பல், சகிக்கலை போன்ற விமர்சனங்களைக் கேட்டு விட்டு தீபாவளிக்கு விஜய் டிவில போடும் போது பார்த்துக்கலாம் என்ற எண்ணம். திரைப்படங்களை திரையரங்கில் போய்ப்பார்த்தால் எக்கச்சக்க பண விரயம். டிக்கெட் விலை அதிகமாக்கப்பட்டு விட்டது. குடும்பத்தோடு திரைப்படம் பார்க்கும் பழக்கம் குறைந்து விட்டது.

தமிழ்த் திரைப்பட உலகம் இப்படி வீட்டுக்குள் ஒரு பெட்டிக்குள் அடங்கி விடும் என்று முப்பது வருடங்கள் முன்பு கூட யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். இன்னும் முப்பது வருடங்கள் கழித்து தமிழ்த் திரையுலகை எந்த இருவர் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பார் என்று கற்பனை செய்ய முடியவில்லை.

**— சித்ரா ரமேஷ்**

# பாலச்சந்தர் மறைவு

இந்தியநாட்டின்தலைசிறந்ததாதாசாஹிப்,பத்மஸ்ரீ,கலைமாமணி, இயக்குனர் சிகரம் என்றெல்லாம் பட்டங்கள்-விருதுகளின் நிழலில், தமிழகம் வியந்த திரைக் காவியங்களைப் படைத்த டைரக்டர் கே.பாலச்சந்தர், அண்மையில் காலமானபோது, இந்தியத் திரையுலகமே கண்ணீர் சிந்தியது.

ரசனை மாற்றம் செய்தால் தான், ரசிகர் மனத்தைக் கவர முடியும் என்ற சூழலில் திரையுலகில் புகுந்தவர் கே.பாலச்சந்தர். அதே நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட சிவாஜி, எம்.ஜி.ஆரை அவர் குறி வைக்காமல், புதிய-அடுத்த நிலைக் கலைஞர்களையே நம்பிப படமெடுத்தவர்.

குடும்பத்தைக் காப்பதற்காகத் தன் கற்பையே அரங்கேற்றும் கதாநாயகி - தன்னைவிட வயதில் மூத்தவளை மூர்க்கமாகக் காதலிக்கும் இளைஞன் - பலரைக் காதலிக்கும் நாயகனுக்கு சப்பைக்கட்டு கட்டும் மன்மதலீலை ...இப்படி , நடுத்தர மக்கள் ஏற்க முடியாத சம்பவங்களை அதே மக்களிடம் நியாயப் படுத்தியவர் பாலச்சந்தர்.

தமிழ் சினிமாவின் ஒளி மயமான எதிர்காலத்திற்கு, ரஜினி-கமலை அறிமுகம் செய்த கே.பி., ஸ்ரீவித்யா, நாகேஷ், சுந்தரராஜன், சௌகார் ஜானகி போன்றோரைப் புதிய பாத்திரங்கள் வழி, மெருகேற்றி நடிக்க வைத்தவர்.

வக்கிரமான பல கதைகளை மக்கள் ஏற்குமளவுக்குப் படமாக்கிய இவர், பாமா விஜயம், பூவா தலையா,தில்லு முல்லு எனப் பல்சுவைப் படங்களையும் உருவாக்கினார்.

பாலச்சந்தரிடம் ஒரு வலுவான யூனிட் கடைசிவரை இருந்தது. அவர் நினைத்ததைச் செயலாற்றும் அக் குழுவினர், கே.பியின் வெற்றிக்குப் பெரிதும் காரணமாயிருந்தனர்.

வித்தியாசமான கதைகளை எடுத்துக் கொண்டு, ஏற்க முடியாது எனக் கருதப்படும் கருவை மக்கள் மன்றத்தில் ஏற்றத் தெரிந்தவராக அமரர் பாலச்சந்தர் விளங்கினார். மறக்க இயலாத மறைவு!

**— வசந்தம் ராஜா**

INTERNATIONAL BUSINESS MANAGEMENT CONSULTANTS

IBMC

# Contact us if you need any of the following services:

## ***Business & Management Services***

Comprehensive Business advisory , management and consultancy services
Business and goodwill Valuation
Take-over / Acquisition of Business
Mergers / Amalgamation of Business
Management audit
Productivity management and control
Submission of Applications for Government Grants, Incentives and Financial Assistance Schemes
Banking Loans - Commercial and Industrial
Property Loans - Commercial, Industrial and Residential
Trade Mark Registration / Import & Export CR Registration

## ***Corporate Secretarial Services***

Registration of sole-proprietor and partnership businesses / Limited Liability Partnership (LLP)
Incorporation of Private Limited Liability Companies (Pte Ltd)
Incorporation of Private Companies Limited by Guarantee.
(Companies promoting arts and professions i.e. engineers, accountants etc)
Incorporation of Offshore Companies
Registration of Association and Societies
Named Director & Secretary
Virtual Office / Registered Office Address
Winding up / Striking off of Companies

## ***Bookkeeping & Accounting Service***

Bookkeeping Services (monthly, quarterly & annually)
Accounting (Compilation etc)
Internal Audit
Audited Report Certified by CPA

## ***Taxation***

Individual - Form B / Partnership - Form P
Trust - Form T
Company - Form C & C-S
Society & Association
Estimated Chargeable Income (ECI)
Goods and Services Tax (GST) / Tax Investigation
Appeals to Comptroller of Income Tax on tax cases

**International Business Management Consultants Pte Ltd**
**72 Bendemeer Road #05-21 Luzerne , Singapore 339941**
**Tel (+65) 6327 1158, 6327 1139 Fax (+65) 6225 2004**
**Email : hari@ibmc.com.sg Website : www.ibmc.com.sg Co Reg No. 198305693E**

# தொண்டூழியர் பாராட்டு தினம் 2014

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் மற்றுமொரு சிறப்பான நிகழ்ச்சி இனிதே நவம்பர் 16ஆம் தேதி 2014 அன்று நிறைவுற்றது. தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் ஆண்டு தோறும் திருக்குறள் விழா, ஔவையார் விழா, பாரதியார் விழா மற்றும் இரத்த தான முகாம், நீரழிவு நோய் எதிர்ப்பு முகாம் என்று பல வெற்றி நிகழ்சிகளை நடத்தி வருவது நாமறிந்ததே. அதோடு பேச்சாளர் மன்றத்தின் மூலம் தலைமைத்துவ பண்பினை வளர்க்கவும் உதவி வருகிறது. இந்நிகழ்சிகளுக்கு ஊன்றுகோலாய் இருந்து பல விதத்தில் உதவிய தொண்டூழியர்களை கௌரவிக்கும் ஒரு நாள் என்றும், தொண்டூழியம் பற்றி பல அரிய வரலாற்றுத் தகவல்களை தனது வரவேற்புரையில் வழங்கினார் கழகத் தலைவர் திரு மு ஹரிகிருஷ்ணன். ஆங்கிலத்தில் தொண்டூழியம் என்ற சொல் எங்கிருந்து வந்தது, இன்றைய உலகில் எப்படி எல்லாம் தொண்டூழியம் செய்ய வாய்ப்புகள் இருக்கின்றன என்று வெகு விரிவாக எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த சிண்டா அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி திரு கே பரதன் தனது உரையில் தொண்டூழியத்தின் சிறப்பைப் பற்றி பேசும் பொழுது ஒருவர் தனது வீட்டில் ஒழுங்காக சேவை மனப்பான்மையோடு இருந்தால் தான் சமூகத்திலும் சிறந்த பங்களிப்பினை தர முடியும் என்று கூறினார். மேலும் இந்திய மாணவர்கள் கணித வகுப்பில் இன்னும் சிறந்து விளங்க அடுத்த ஆண்டு முதல் உதவிப் பாடத் திட்டம் துவங்குவதாகத் தெரிவித்தார். மேலும் அடுத்த ஆண்டு 2015 சிங்கப்பூர் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் ''அடுத்த 50 ஆண்டில் சிங்கப்பூர்'' என்ற தலைப்பில் மாணவர்களுக்கு போட்டிகள் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தோடு சேர்ந்து நடத்த விருப்பம் தெரிவித்தார்.

ஔவையார் விழா போட்டிகளில் நீதிபதிகளாக பங்கேற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பின்பு பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் தங்களது பொன்னான நேரத்தைக் செலவு செய்த தொன்டூழியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இதன் பின் கலந்துரையாடல் ஒன்றினை தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் வழி நடத்த, ஆசிரியர்கள் மற்றும் பார்வையாளர்கள் தங்கள் கருத்திகளை பகிர்ந்து கொண்டார்கள். பாராட்டுகளும், கழக நிகழ்ச்சிகளை மேலும் சிறப்பாக நடத்த சில ஆலோசனைகளும் கலந்த நல்லதொரு கலந்துரையாடல் என்று தான் அதைக் கூற வேண்டும். மேலும், தமிழ் இலக்கியங்களில் ''தொண்டூழியம்'' பற்றி எங்கெங்கு கூறப்பட்டிருக்கிறது என்பதை முனைவர் சுப. திண்ணப்பன் அவர்கள் கூறியது மேலும் சுவைபட இருந்தது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் கழக செயலவையிலும் கழக நிகழ்ச்சிகளுக்கும் சிறந்த தொண்டாற்றி வந்த திரு சங்கரன் அவர்கள் கலந்துகொண்டது நிறைவாக இருந்தது. சிண்டாவின் சமூக ஈடுபாடு மற்றும் தொண்டூழிய மேலாண்மை பிரிவின் இயக்குனர் திரு தேவேந்திரன் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

திருமதி அழகுநிலா மற்றும் திரு சேதுராமன் இருவரும் நிகழ்ச்சியை வெகு நேர்த்தியாக நெறிபடுத்தினர். நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே முடிவடைந்த போதிலும், வந்திருந்தோர் அனைவரும் கடைசி வரைக்கும் இருந்து விருந்துபசரிப்பில் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கு தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தகொள்கிறது.

# Selvi Stores

பல்லாண்டுகளாக சுத்தமான உயர் ரக மளிகை மற்றும் தானிய
பொருள்களுக்கும் மக்களின் உள்ளங்களில் நினைவுக்கு வரும் பெயர்

## செல்வி ஸ்டோர்ஸ் பி. லிட்
## SELVI STORES PTE LTD
### (Sundry Goods & General Merchants)

சில்லறை/மொத்த விற்பனை மற்றும் வீட்டுக்கு அனுப்பி வைக்கும் சேவை

**Blk. 662, #01-19/20 Buffalo Road, Singapore 210662**
**Tel: 62923925, 6293 3895 Fax: 62973942**
**Email: selvistores@yahoo.com.sg**
**For online order www.selvistores.com**

## Selvi's Selvi Mills (S) Pte Ltd.

அனைத்து தானிய மற்றும் மசாலா வகைகளையும், இல்லங்களுக்கும், கடைகளுக்கும்
உணவகங்களுக்கும் விரும்பியவாறு விரைவாக அரைத்துத் தருகிறோம்.

## செல்வி மில்ஸ் (S) பி. லிட்.

**Blk. W, #01-189 Pandan Loop. Singapore 128240**
**Tel: 6368 4701, 6778 2693 Fax: 6778 7260** (கிளமெண்டி - வெஸ்ட் கோஸ்ட் அருகில்)

கிளமெண்டி இண்டர்சேஞ்சிலிருந்து உள் சேவை பேருந்து 285ல் வரலாம்.

அனைத்து வகை மளிகைப் பொருள்களும் மொத்தமாகவும்
சில்லரையாகவும் மிகவும் சுத்தமாக கிடைக்கும்.

## செல்வி ஸ்டோர் டிரேடிங் பி. லிட்.
## SELVI STORE TRADING PTE LTD

**No: 5 & 7, Kerbau Road, Singapore 219144**
**Tel: 6292 9153, 63923927 Fax: 62955285**

ஆர்டர்களுக்கு வீட்டுக்கு அனுப்பி வைக்கும் சேவையும் உண்டு

# பேச்சாளர் மன்றம்

**பேச்சாளர் மன்றம் பேசக் கற்றுக் கொடுக்கிறது என்றால் அதில் ஓரளவுதான் உண்மை இருக்கிறது! முறையாகப் பேசச் சொல்லிக் கொடுக்கிறது என்றால் அதில் பாதிக்கு மேல் உண்மை இருக்கிறது எனலாம். ஆனால் ஒழுங்கு முறையோடு பேசச் சொல்லிக் கொடுக்கிறதென்றால் அதில் நூறு சதவீதம் உண்மை இருக்கிறது!**

ஒருவர் பேச ஒத்துக்கொள்ளும்போது அவர் பேசவிருக்கும் தலைப்பு அல்லது கருத்தினைப் பற்றியத் தயாரிப்பு அவசியம்! எவ்வளவு பெரிய பேச்சாளர்களும் கையில் சிறுகுறிப்பு வைத்துக்கொள்வது அவர்கள் தயாரிக்கவில்லை என்பதில்லை. அவர்கள் தயாரிப்பின் மீதும் சொல்ல வரும் கருத்துக்கள் தவறுதலாக சென்றடையக்கூடாது என்ற பொறுப்புணர்ச்சி தான்!

எல்லாப் பேச்சாளர்களுக்கும் மன்றத்தில் நேரம் ஒதுக்கப்படும்! நேரத்தில் ஆரம்பிப்பது, நேரம் கருதிப் பேசுவது, நேரத்தில் முடிப்பது, பலச் சிறந்தப் பேச்சாளர்களுக்கே சவாலான விடயம்தான்! அப்படி இருக்க, வளரும் பேச்சாளர்கள் அதை முதலிலேயே பழகிக் கொள்ள வேண்டும். பேச்சாளர் 100 பேர் கொண்ட அரங்கில் 1 மணி நேரம் பேச வேண்டும் என்று வைத்துக் கொள்வோம் - உண்மையில் அவர் தன் பேச்சிற்காக 100மணி நேரம் (100 பேருடைய ஒரு மணி நேரம்) வாங்கியிருக்கிறார் என்று பொருள். அப்போது எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் தயாரித்து நேரத்தை பயன் படுத்த வேண்டும் என்கிற பயிற்சி பழக்கமாக்கப் படுகின்றது.

நல்ல பேச்சாளருக்கு மேடைப் பயன்பாடு பற்றி அவசியம் தெரிந்திருக்க வேண்டும்! நடனக் கலையில் மட்டுமல்ல பேச்சாளரும் மேடையை எப்படிப் பயன் படுத்துகிறார் என்பது முக்கியம். ஒருவரின் அங்க அசைவோ அல்லது மேடையை பயன்படுத்தும் விதமோ அவர் கூறும் கருத்துக்கே இடையறாகப் போவதை நிறையப் பாத்திருக்கிறோம்! எனவே தலைப்பிற்கேற்ப சொல்ல வரும் கருத்துக்கேற்ப மேடையின் நீள அகலத்தைப் பொறுத்து பயன்பாடு இருக்க வேண்டும்.

மேடைப் பன்பாடு எவ்வளவு முக்கியமோ மேடை நாகரீகத்தை தெரிந்து கொள்ளுதலும் அவ்வளவு முக்கியம். மேடை நாகரீகம் என்பது ஒரு பேச்சாளர் மேடையில் பேச வருமுன், பேசும் போது, பேசி முடித்த பின் மேடையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இது தயாரிப்பின் ஒரு அங்கமாக இருந்தாலும் "disciplined speaker" என்று சொல்லக்கூடிய பேச்சாளர் வரவிருக்கும் பார்வையாளர்களைப் பற்றியும் அவர்கள் சராசரி வயது, ரசனை பற்றியும் தெரிந்து வைத்திருப்பார். இது பார்வையாளர்களைப் தன் வசம் வைத்திருக்கவும் அவர்களோடு மேடையிலிருந்தே தொடர்பு வைத்துக் கொள்ளவும் பேருதவியாக இருக்கும்.

இறுதியாக ஒரு நல்லப் பேச்சாளர் தன்னுடைய கருத்தை முன்வைக்க எவ்வளவு முனைகிறாரோ அதே அளவு பார்வையாளர்களுக்கு நல்லக் கருத்தை முன்வைக்கவும் முனைய வேண்டும்.

– ச இராம்குமார்

| தமிழ்மொழி பண்பாட்டுக் கழக நிகழ்ச்சிகள் – 2015 | | |
|---|---|---|
| தேதி | நிகழ்ச்சி | இடம் |
| ஞாயிறு 5 ஏப்ரல் 2015 மாலை 6:00 மணிக்கு | திருக்குறள் விழா | சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரி |
| ஞாயிறு 26 ஏப்ரல் 2015 காலை 9:30 மணிக்கு | அனைத்துலக தயாரிக்கப்பட்ட மற்றும் அரங்கத் தலைப்பு போட்டி | உமறுபுலவர் தமிழ்மொழி நிலையம் |
| ஞாயிறு 10 மே 2015 காலை 9 முதல் | மருத்துவ முகாம் | |
| ஞாயிறு 12 ஜூலை 2015 காலை 9 முதல் | ஔவையார் விழாப் போட்டிகள் | உமறுபுலவர் தமிழ்மொழி நிலையம் |
| ஞாயிறு 26 ஜூலை 2015 மாலை 6:00 மணிக்கு | ஔவையார் விழா | உமறுபுலவர் தமிழ்மொழி நிலையம் |
| ஞாயிறு 13 செப்டம்பர் 2015 மாலை 6:00 மணிக்கு | பாரதியார் விழா | உமறுபுலவர் தமிழ்மொழி நிலையம் |

தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்ற கூட்டம் மாதம் தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமை காலை 9:30 மணிக்கும், தமிழ்மொழி பண்பாட்டுக் கழக இருமொழிப் பேச்சாளர் மன்ற கூட்டம் மாதம் தோறும் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமை காலை 9:30 மணிக்கும் நடைபெறும்.

இவ்விருக்கூட்டங்களும் பீட்டி சாலையில் அமைந்துள்ள சிண்டா கட்டிடத்தின் 4ஆவது தளத்தில் இருக்கும் டையமண்ட் அறையில் நடைபெறும்.

## சுதந்திரப் பொன்விழா

### சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழக சிறப்புகள்!

சிங்கப்பூரின் பொன்விழாவை ஒட்டி, எழுத்தாளர் கழகம் இரு நூல் வெளியீடுகளைத் (கட்டுரை–சிறுகதை) தர விருக்கிறது. சிறுகதைத் தொகுப்பில் 1965லிருந்து 2015 வரை எழுதப்பட்ட 50 சிறுகதைகளும், கட்டுரைத் தொகுப்பில் 1965லும் அதற்கு மேற்ப ட்டும் எழுதப்பட்ட 50 கட்டுரைகளும் இடம் பெறும் என கழகத்தின் செயலர் சுப.அருணாசலம் குறிப்பிட்டார். இவை, சிங்கப்பூரின் வாழ்க்கை முறை, கல்வி நலம், நல்லிணக்க உணர்வு, தொழில் வளர்ச்சி உள்ளிட்ட பலவற்றையும் உணர்த்தும்படி இருக்க வேண்டும் என்பது விதிமுறை..

இவற்றன்னியில், ஆங்கிலம், தமிழ், சீனம், மலாய் மொழிகளில் கடந்த ஐம்பதாண்டுகளில் சிங்கப்பூரில் உருவான படைப்புகள் பற்றிய பன்மொழிக் கருத்தரங்கம் ஒன்றை நடத்தவும் சிங்கப்பூர் எழுத்தாளர் கழகம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நான்கு மொழிக் கருத்தரங்கு ஒரு புதுமை நிகழ்ச்சியாக அமையும் என எதிர்பார்க்கபடுகிறது.

நூல் வடிவங்களுக்கான க ட்டுரை, கதைகளுக்கான முடிவு தேதி ஜனவரி 31 என்று முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேல் விவரங்களுக்கு எழுத்தாளர் கழகச் செயலாளர் திரு. சுப. அருணாசலத்தையும் (93221138) துணைச் செயலாளர் திரு. இராம. வயிரவனையும் (93860497) அணுகலாம்.

## சிங்கப்பூர் பொன்விழா

### கவிமாலை கவிதைப் போட்டி

சிங்கப்பூர் விடுதலை அடைந்த 50 ஆண்டுகள் நிறைவையொட்டிக் கவிமாலை ஒரு சிறப்புக் கவிதைப் போட்டியை நடத்துகிறது. பொதுப்பிரிவுக்கான போட்டிகளின் விவரம் பின் வருமாறு:

**தலைப்பு:** சிங்கப்பூரின் பொன்விழாவுக்குத் தொடர்புடைய கருப்பொருளை கொண்ட எந்த தலைப்பாகவும் இருக்கலாம்

**தகுதி:** போட்டியாளர்கள் சிங்கப்பூர் குடியுரிமையாளர்கள், நிரந்தரவாசிகள், மற்றும் 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் முறையான வேலை அனுமதியில் வேலை செய்து வருபவர்கள்.

**வடிவம்:** மரபுக் கவிதை மட்டும்; மரபில் எந்த வகையைப் பின்பற்றியதாகவும் கவிதை இருக்கலாம்.

**கவிதையின் அளவு:** 100 அடிகளுக்குக் குறையாமலும், 124 அடிகளுக்கு மிகாமல் இருத்தல் அவசியம்.

**பரிசுகள்:** முதற்பரிசு: $1000 || இரண்டாம் பரிசு: $500 || மூன்றாம் பரிசு: $200

**கவிதை அனுப்ப இறுதி நாள்:** கவிதைகள் அஞ்சலிலோ / நேரிலோ அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 15.03.2015

**குறிப்பு:** கவிதை எழுதப்பட்ட பக்கங்களில் அடையாள அட்டை எண் மட்டும் தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். தனித்தாளில் பெயர், முகவரி, மின்னஞ்சல், தொடர்பு எண், அடையாள அட்டையின் நகல், கவிதை தலைப்பு போன்ற தகவல்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி: Kavimalai, 24 Niven Road, Singapore 228371.

ஜனவரி 17தேதி மாணவர்களுக்கான கவிதைப் பயிலரங்கு ஒன்றை கவிமாலை ஏற்பாடு செய்திருந்தது. இதில் கவிதை எழுதுவதற்கு கற்றுத் தரப்பட்டதுடன் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இதன் பின் மாணவர்களுக்கான கவிதைப் போட்டி நடத்தப்பட்டது.

**பரிசுகள்:** முதற்பரிசு: $500 || இரண்டாம் பரிசு: $300 || மூன்றாம் பரிசு: $200 || ஊக்கப் பரிசுகள்: 100.

ஏப்ரல் மாதத்தில் கவிமாலை நடத்தும் தமிழ்மொழி மாத நிறைவு விழாவில் பரிசுகள், சான்றிதழ்களுடன் அளிக்கப்படும்.

Muthu's Curry

Serving Passionately Since 1969

*With Compliments*

மாநாடு சிறப்புற நல்வாழ்த்துக்கள்

VISIT OUR WEBSITE AT
WWW.MUTHUSCURRY.COM

Follow us on Facebook

# The MES Group

120 lower Delta Road #04-10
Cendex Centre, Singapore 169208
Tel: (65) 6337 2666 Fax:(65)6337 3751
www.mesgroup.com.sg

## GUEST WORKERS' RESIDENTIAL FACILITY

Housing 24,000 workers from various industries in four dormitories situated across Singapore.

## LOGISTICS

Fleet of trucks facilitating transportation of FMCG goods, event support and other related logistics activities.

## WAREHOUSING

Our warehousing facilities provide an array of services and technical support in goods storage, packing, inventory management and ancillary services such as stuffing and crating.

## HOSPITALITY

Warm hospitality awaits you at The Daulat, a 16 room boutique hotel located in Little India, styled in modern contemporary design and embracing a rich architectural history.